www.tnschoolbooks.in

தமிழ்நாடு அரசு

மேல்நிலை இரண்டாம் ஆண்டு

தொழிற்கல்வி

வேலைவாய்ப்புத் திறன்கள்

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டது

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

www.tnschoolbooks.in

தமிழ்நாடு அரசு

முதல் பதிப்பு - *2023*

மறுபதிப்பு - *2024*

(புதிய பாடத்திட்டத்தின் கீழ்
வெளியிடப்பட்ட நூல்)

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

© SCERT 2023

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in

0_XI_TM_EMPS_FM_2023.indd 2 24/12/2023 09:30:58

முன்னுரை

வேலைவாய்ப்புத் திறன்கள் என்னும் பாடத்தை பாடத்திட்டத்தில் சேர்க்கும் இந்த முயற்சியை எடுத்ததற்காக, தமிழக அரசின் பள்ளிக் கல்வித் துறைக்கு எங்கள் நன்றியைத் தெரிவிக்கிறோம்.

தமிழ்நாடு மாநிலப் பாடத்திட்டத்தின் கீழ் 2022–ஆம் கல்வியாண்டிலிருந்து முதன்முறையாக, 12 ஆம் வகுப்பு தொழிற்கல்வி மாணவர்களுக்கு வேலைவாய்ப்புத் திறன்கள் பாடம் அறிமுகப்படுத்தப்படுகிறது. வேலை தேடுபவர்களாக அல்லாமல் மாணவர்களை வேலைவாய்ப்புகளை உருவாக்குபவர்களாக உருவாக்குவதே இந்தப் பாடத்தின் அடிப்படை நோக்கமாகும். மாணவர்களே தங்களின் பலம், பலவீனம், வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்களை (SWOT analysis) அடையாளம் காண முடியும் என்பதை புரிந்து கொண்டு இந்தப் பாடம் தொடங்குகிறது. மேலும், மாணவர்கள் ஆங்கில மொழித் திறன், தகவல் தொடர்புத் திறன், கணினி மற்றும் தகவல் தொடர்பு / டிஜிட்டல் திறன்கள், தொழில் முனைவோர் திறன் மற்றும் இருபத்தியோராம் நூற்றாண்டுத் திறன்களை வளர்த்துக் கொள்வர்.

மாணவர்களின் மன உறுதியை அதிகரிப்பதில் ஆங்கில மொழித் திறன் மிகவும் இன்றியமையாதது. ஏனெனில் நமது மாணவர்களில் பெரும்பாலானோர் முதல் தலைமுறை கற்பவர்கள். மேலும் அது மாணவர்கள் குழுவின் நம்பிக்கையை மேம்படுத்தும். இன்றைய உலகில், குழுத் தொடர்பு (networking) மிகவும் இன்றியமையாதது மற்றும் தகவல்தொடர்பு திறன்களைக் கற்றுக்கொள்வது மாணவர்களுக்கு குழுத் தொடர்பு ஏற்படுத்த உதவும். கோவிட்–19 தொற்றுநோய்க்குப் பிறகு ஆன்லைன் கற்றல் யுகத்தில், கணினி மற்றும் தகவல் தொடர்பு / டிஜிட்டல் திறன்கள் மாணவர்களுக்கு மிகவும் முக்கியம். மென்பொருள் பயன்பாடுகள் மற்றும் இன்றியமையாத இயக்க முறைமைகளைக் கற்றுக்கொள்ள மாணவர்களுக்கு இது உதவும்.

வணிகத் திட்டத்தைத் தயாரிப்பதற்கும், தொழில்முனைவை ஊக்குவிப்பதில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் பங்கைப் புரிந்துகொள்வதற்கும் தொழில் முனைவோர் திறன்கள் மாணவர்களுக்கு மிகவும் அவசியம். தொழில்முனைவோரின் வெற்றிக் கதைகளும் இந்தப் பாடத்தில் விளக்கப்பட்டுள்ளன. இருபத்தியோராம் நூற்றாண்டில் உள்ள சவால்களைச் சந்திக்க, மாணவர்கள் சிக்கல்களைத் தீர்ப்பது, முடிவெடுத்தல், பேச்சுவார்த்தை (negotiation), குழு உருவாக்கம், முரண் மேலாண்மை (conflict management), மன அழுத்த மேலாண்மை மற்றும் நேர மேலாண்மை போன்ற பல்வேறு திறன்களைக் கற்றுக் கொள்ள வேண்டும். வணிகத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு நிதி அறிவு வேண்டும் என்பது காலத்தின் தேவை. குடும்பம் மற்றும் சமூகத்தில் பாலினத்தின் பங்கையும் மாணவர்கள் கற்றுக்கொள்கிறார்கள். நிறைவாக மாணவர்கள் தங்கள் தன்–விவரக் குறிப்புகளை (resumes) உருவாக்கி நேர்காணலை எதிர்கொள்ளும் நம்பிக்கையைப் பெறுவார்கள்.

தொழில்கல்வி மாணவர்களுக்கு எதிர்காலத்தில் தொழில் துறைகளில் உடனடி வேலை வாய்ப்பு கிடைக்கும் வகையில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT) மூலம் வேலைவாய்ப்புத் திறன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தேசியத் திறன் மேம்பாட்டுக் கழகம் (NSDC) மற்றும் தமிழ்நாடு மாநிலத் திறன் மேம்பாட்டுக் கழகம் (Tamil Nadu Skill Development Corporation – TNSDC) அங்கீகாரம் பெற்ற தொடர்புடைய துறை திறன் கழகங்கள் (Sector Skill Councils–SSCs) மூலம் நடைமுறை மதிப்பீட்டிற்கான திறன் சான்றிதழ் ஒவ்வொரு மாணவருக்கும் வழங்கப்படும்.

ஆசிரியர் குழு

www.tnschoolbooks.in

பொருளடக்கம்

பாடம்	தலைப்பு	பக்கம்	மாதம்
	முன்னுரை	iii	
01	தன்னைப் புரிந்துக் கொள்ளுதல்	1–21	ஜூன்
02	ஆங்கில மொழித்திறன்கள் (English Language Skills)	22–38	ஜூலை
03	தகவல் தொடர்புத் திறன்கள்	39–56	ஆகஸ்ட்
04	மின்னணு திறன்கள்	57–86	ஆகஸ்ட்
05	தொழில்முனைவு	87–111	செப்டம்பர்
06	21–ஆம் நூற்றாண்டிற்கான திறன்களை வளர்த்தல்	112–131	அக்டோபர்
07	பாலினம்	132–146	அக்டோபர்
08	நிதிசார் கல்வியறிவு	147–167	நவம்பர்
09	வேலை சார்ந்த உலகிற்குத் தயாராகுதல்	168–182	டிசம்பர்
	மாதிரி வினாத்தாள்	183–186	
	செய்முறை	187–236	

மின்னூல்

மதிப்பீடு

உள்ளடக்கம்

பாடம் 01 தன்னைப் புரிந்து கொள்ளுதல் 1

1.1 சுய ஊக்கமளித்தல்

1.2 சுய பிரதிபலிப்பு

1.3 தனக்குள் நேர்மையாக இருத்தல்

1.4 தன்னை ஆயத்தப்படுத்துதல்

1.5 சீர்ப்படுத்துதல் மற்றும் தனிப்பட்ட சுகாதாரம்

1.6 சுய ஒழுக்கம்

1.7 பிறரை மதிக்கக் கற்றுக் கொள்ளுதல்

பாடம் 02 ENGLISH LANGUAGE SKILLS 22

2.1 LSRW SKILLS

2.2. READING NEWSPAPERS AND MAGAZINES

2.3 DESCRIBING HABITS AND ROUTINES

2.4 QUESTIONING TECHNIQUES

2.5 TRANSLATION SKILLS

2.6 FORMAL COMMUNICATION AT WORKPLACE

2.7 INTERNATIONAL LANGUAGE CERTIFICATIONS (IELTS, TOEFL, OET)

பாடம் 3 தகவல் தொடர்பு திறன்கள் 39

3.1 சமூக ஊடகத் தொடர்பு

3.2 வலைப்பதிவிடுதல்

3.3 மெய்ந்நிகர் தொடர்பு

3.4 தகவல் தொடர்பு திறமைகள்

3.5 செயல்திறன்மிகு கேட்டல்

3.6 விலக்கத் திறன்கள்

பாடம் 04 மின்னணு திறன்கள் 57
4.1 MS WORD – யை ஆராய்தல்
4.2 MS EXCEL – யை ஆராய்தல்
4.3 MS POWERPOINT – யை ஆராய்தல்
4.4 G – தொகுப்பு (G – Suite)
4.5 தகவல் தொழில்நுட்பத்தின் எதிர்காலம் (IT)

பாடம் 05 தொழில்முனைவு 87
5.1 தமிழ்நாட்டில் துவக்கத் தொழில்கள்
5.2 வணிகத்திற்கான (அரசு மற்றும் அரசு சாரா) நிதி வாய்ப்புகள்.
5.3 துவக்கத் தொழில்கள் (பொருளாதார மற்றும் வேலைவாய்ப்பு அம்சங்கள்)
5.4 இளம் துவக்கத் தொழில்கள்
5.5 பெண் தொழில்முனைவோர் SHG (சுய உதவிக் குழுக்கள்)

பாடம் 06 21–ஆம் நூற்றாண்டிற்கான திறன்களை வளர்த்தல் 112
6.1 சுற்றுப்புற நுண்ணாய்வு
6.2 தகவமைப்புத் திறன்கள்
6.3 தலைமைத்துவ திறன்கள்
6.4 முன்முயற்சி திறன்கள்
6.5 திறன் மேம்பாடு மற்றும் மறுதிறனாக்கம்
6.6 குழு இயக்கம்
6.7 21 ஆம் நூற்றாண்டில் சந்தைப்படுத்துதல்

பாடம் 07 பாலினம்(Gender) 132
7.1 பணியிடத்தில் பன்முகத்தன்மை
7.2 பணியிடத்தில் உட்சேர்ப்பு
7.3 உலகளாவிய பாலின இடைவெளி அறிக்கை
7.4 பொருளாதார பங்கேற்பு மற்றும் வாய்ப்புகள்
7.5 பொருளாதார வளர்ச்சியில் பெண்களை சார்ந்து உள்ள தடைகள்

பாடம் 08 நிதிசார் கல்வியறிவு 147

8.1 பணத்தின் கால மதிப்பு

8.2 டிஜிட்டல் நிதியியல்

8.3 நிதி தொழில்நுட்பம்(FINTECH)

8.4 இந்தியாவில் வங்கியியல் அமைப்பு

8.5 பங்குச் சந்தை

8.6 வரிவிதிப்பு

8.7 சரக்கு மற்றும் சேவை வரி(GST)

பாடம் 09 வேலை சார்ந்த உலகிற்குத் தயாராகுதல் 168

9.1 உலகமயமாக்கல்

9.2 உலகளாவிய வேலை கலாச்சாரம்

9.3 வேலை சந்தை ஆய்வு

9.4 பணித்திறன்கள் (வேலை வாய்ப்பு)

9.5 நிலையான தொழில்

9.6 வாடிக்கையாளர் தொடர்பு

9.7 வாடிக்கையாளர் உறவுகளை உருவாக்குதல்

9.8 இணைய தளங்கள் மூலம் வேலைகளுக்கு விண்ணப்பித்தல்

9.9 LINKEDIN சுயவிவர உருவாக்கம்

9.10 உடல்நலம் மற்றும் பாதுகாப்பு

www.tnschoolbooks.in

www.tnschoolbooks.in

1

தன்னைப் புரிந்து கொள்ளுதல்

கற்றலின் நோக்கம்

- சுய – ஊக்கமளித்தல் மற்றும் சுய – பிரதிபலிப்பு பற்றிப் புரிந்து கொள்ளுதல்.
- தனக்குள் நேர்மையாக இருப்பதின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளுதல்.
- தன்னை ஆயத்தப்படுத்துவதன் உண்மையான அர்த்தத்தையும் முக்கியத்துவத்தையும் அறிதல்
- சீர்ப்படுத்துதல் மற்றும் தனிநபர் சுகாதாரம் பற்றிய முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளுதல்
- சுய ஒழுக்கம் மற்றும் பிறரை மதிக்க வேண்டியதன் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் புரிந்து கொள்ளுதல்.

அறிமுகம்

பதினோராம் வகுப்பில் வேலைவாய்ப்புத் திறன்கள் பாடத்தில் இளைஞர்களிடையே வேலைவாய்ப்பை மேம்படுத்துவதற்கு பல்வேறு திறன்களான தன்னை புரிந்து கொள்ளுதல், ஆங்கில மொழித் திறன்கள், தகவல் தொடர்புத் திறன்கள், மின்னணு திறன்கள், தொழில் முனைவு. 21–ம் நூற்றாண்டிற்கான திறன்களை வளர்த்தல், பாலினம், நிதி கல்வியறிவு, வேலை சார்ந்த உலகத்திற்கு தயாராகுதல் ஆகியவற்றைக் கற்றுக் கொண்டோம். பதினோராம் வகுப்பில் தன்னை புரிந்துக் கொள்ளுதல் பாடத்தில் நாம் கற்றுக் கொண்டது பின்வருமாறு :

1. வலிமைகள், திறமைகள் மற்றும் திறன்களைத் தன்னிடத்திலும் பிறரிடத்திலும் அடையாளம் காணுதல்.
2. உங்களது ஆர்வங்கள் மற்றும் திறன்களைப் புரிந்து கொள்ளுதல், வேறுபடுத்துதல் மற்றும் அடையாளம் காணுதல்.
3. முன் மாதிரி மற்றும் இலட்சியங்களின் அர்த்தத்தைக் கண்டறிதல்.
4. சுய–கற்றல், நிகழ்நிலை கற்றல், நிகழ்நிலைக் கற்றலின் பல்வேறு ஆதாரங்களைப் புரிந்து கொள்ளுதல்.
5. வாழ்க்கைப் பாதையை உருவாக்குதல்.

12ஆம் வகுப்பு 'வேலைவாய்ப்புத் திறன்கள்' பாடத்தில் நம்மை வேலைக்கு தயாராக்க தேவையான மேலும் சில மென் திறன்களை கற்றுக்கொள்வோம். இந்த பயணத்தை ஆரம்பிக்க நீங்களும் தயாராக இருப்பீர்கள் என நினைக்கிறோம்.

1.1 சுய – ஊக்கமளித்தல்

ஊக்கமளித்தல் என்பது மக்கள் தங்கள் இலக்குகளை அடைவதற்கு, முயற்சிகளை எடுக்கத் தூண்டும் ஒரு உற்சாகமூட்டும் செயல்முறை ஆகும். ஊக்கமளித்தல் சில உள் மற்றும் வெளிப்புற காரணிகளால் அமையலாம் பலர் வாழ்கைக்கு தேவையான பணம் சம்பாதிக்க அல்லது பள்ளிக்கூடத்தில் தண்டனைகளைத் தவிர்க்க கடினமாக உழைக்கிறார்கள். இந்த வகை ஊக்கமளித்தல் புற அல்லது வெளியார்ந்த (Extrinsic) ஊக்கமளித்தல் ஆகும். ஆனால், சிலர் கடினமாக உழைக்கிறார்கள் என்றால் அவர்கள் அந்த வேலையை விரும்புகிறார்கள் மற்றும் சவாலை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்கிறார்கள். இந்த வகை ஊக்கமளித்தலை அக அல்லது உள்ளார்ந்த (Intrinsic) ஊக்கமளித்தல் என்கிறோம்.

1.1.1. உள்ளார்ந்த மற்றும் வெளியார்ந்த ஊக்கமளித்தல்களுக்கு இடையேயான வேறுபாடு

உள்ளார்ந்த ஊக்கமளித்தல்	வெளியார்ந்த ஊக்கமளித்தல்
தனிநபர் இயல்பு, தனிநபர் தேவை மற்றும் எந்த வேலையிலும் மகிழ்ச்சி ஆகியவற்றைப் பொறுத்து தனி நபரின் மனதில் இருந்து வருவது உள்ளார்ந்த ஊக்கம் ஆகும்.	பாராட்டு, பணம் அல்லது விருது போன்ற தனி நபரின் வெளிப்புற காரணிகளில் இருந்து வருவது வெளியார்ந்த ஊக்கம் ஆகும். இது பொதுவாக நிதி சார்ந்ததாகும்.



1.1.2 சுய – ஊக்கமளித்தல்

சுய – ஊக்கமளித்தல் என்பது நம்மைத் தொடர்ந்து செல்லத் தூண்டும் சக்தியாகும் – சாதிப்பது, உருவாக்குவது, மேம்படுத்துவது தொடர்ந்து முன்னேறுவது ஆகியவை நமது மன உந்துதலினால் ஏற்படுகிறது. ஒரு நபர் சிலவற்றை விட்டுவிட நினைக்கும் பொழுது அல்லது தொடங்குவது எவ்வாறு என்று தெரியாதபொழுது, அந்த தடையைக் கடந்து, மேலும் தொடர உதவும் திறவுக்கோல் சுய – ஊக்கமளித்தல் ஆகும்.

சுய – ஊக்கமளித்தலின் முக்கியத்துவம்

- அனைத்து இலக்குகளையும் தெளிவுப்படுத்துகிறது.
- முக்கிய நிகழ்வுகளின் மைல்கற்களை கடக்க உதவுகிறது.
- விடாமுயற்சியைப் பயிற்றுவிக்கிறது.
- நமக்கு நாமே போட்டியிட கற்றுக் கொடுக்கிறது.

www.tnschoolbooks.in



சுய – ஊக்கமளித்தலை இழப்பதற்கான காரணங்கள்

நாம் ஊக்கமளித்தலை இழப்பதற்கு மூன்று முக்கிய காரணங்கள் உள்ளன.

அவை பின்வருமாறு

- **நம்பிக்கை இல்லாமை** – 'நம்மால் வெற்றி பெற முடியும்' என்று நாம் நம்பவில்லை எனில், முயற்சி செய்ய போதுமான ஊக்கம் நமக்கு இருக்காது.
- **கவனம் இல்லாமை** – 'நமக்கு என்ன வேண்டும்' என்று தெரியாவிட்டால், பிறகு 'என்ன வேலை செய்ய வேண்டும்' என்று நமக்கு தெரியாது.
- **வழிகாட்டுதல் இல்லாமை** – 'இலக்கை அடைவதற்கு என்ன செய்ய வேண்டும்', என்று தெரியாவிட்டால், அதை செய்ய முடியாது.

நம்மில் பலர் நினைப்பது ....

மேலே குறிப்பிட்டுள்ள விஷயங்களை நாம் கேள்விப்பட்டிருப்போம் அல்லது அனுபவித்திருப்போம். இவையாவும் நாம் அனைவரும் எதிர்கொள்ளும் சில பொதுவான பிரச்சனைகளே. நமக்கு உதவுமாறு மற்றவர்களிடம் கேட்கலாம் ஆனால் அவர்களால் குறுகிய காலத்திற்கு மட்டுமே உதவ முடியும்.

தனக்குத்தானே ஊக்கமளிக்க சில எளிய குறிப்புகள்:

- தொடங்குதல் – உயர்ந்த இலக்குகளை அடைவதற்கான ரகசியம் அதனைத் தொடங்குவது தான்.

தொடர் சுய– ஊக்கமளித்தலின் எட்டு படி நிலைகள் :



8. பிறருக்கு உதவுதல்

யோசனைகளைப் பகிர்ந்து, நண்பர்கள் ஊக்கமடைய உதவுங்கள். மற்றவர்கள் நன்றாக செயல்படுவதைப் பார்த்து நீங்களும் அதைப் போலவே செய்ய ஊக்கம் பெறுகிறீர்கள். உங்கள் வெற்றிக் கதையைப் பற்றி எழுதி, வாசகர்களிடமிருந்து கருத்துக்களைப் பெறுங்கள்.

7. முன்னேற்றத்தைக் கண்காணித்தல்

தற்போதைய திட்டங்களுக்கு சரியான எண்ணிக்கை அல்லது முன்னேற்ற கோட்டினை வைத்திருக்கவும். அதில் முன்னேற்றம் தெரிந்தால், எப்பொழுதும் அதை தக்க வைக்க விரும்புவீர்கள்.

6. தன்னை அறிதல்

உங்களைப் பற்றி குறைவாகவும், பெருமிதமாகவும் உணரும் தருணங்களைக் குறித்துக் கொள்ளவும். அந்த உணர்வுகளின் முறையை பற்றி தெரிந்துக் கொண்டால், அந்ததருணங்களை தவிர்க்க கற்றுக்கொண்டு முன்னேறலாம்.

5. சிந்திப்பதை நிறுத்துதல்

நினைப்பதைச் செயல்படுத்துங்கள் ஒரு குறிப்பிட்ட திட்டத்திற்கான ஊக்கம் குறைவதைக் கண்டால், மற்றொன்றைத் தொடங்க முயற்சிக்கவும். பயனற்றதாக இருந்தாலும், மிக முக்கியமான விஷயங்களைத் தொடங்குவதற்கான வேகத்தை வளர்த்துக் கொள்வீர்கள்.

4. நேர்மறையாக இருத்தல்

தீயவற்றில் நல்லதை மட்டும் பார்க்கவும். தடைகளைச் சந்திக்கும் போது, அவற்றைக் கடந்து செல்ல என்ன வழி என்பதைக் கண்டறியும் பழக்கம் இருக்க வேண்டும்.

3. கற்றுக் கொண்டே இருத்தல்

படித்துக்கொண்டே உங்களால் முடிந்தவரை கருத்துகளை உள்வாங்கிக்கொள்ள முயற்சிக்கவும். நீங்கள் எவ்வளவு அதிகமாகக் கற்றுக் கொள்கிறீர்களோ, அவ்வளவு நம்பிக்கையுடன் திட்டங்களைத் தொடங்குவீர்கள்.

2. நல்ல நண்பர்களோடு இருத்தல்

நேர்மறை மற்றும் ஊக்கமளிக்கும் நபர்களுடன் வழக்கமான சந்திப்புகளை மேற்கொள்ளுங்கள். இது நண்பர்களுடனான அரட்டைகள் அல்லது யோசனையைப் பகிர விரும்பும் நபருடன் விரைவான விவாதம் போன்று எளிமையானதாக இருக்கலாம்.

1. எளிமையான தொடக்கம்

உங்கள் பணியிடத்தைச் சுற்றி உத்வேகத்தை வைத்திருங்கள். உங்களுக்குள் ஆரம்ப தீப்பொறியை வழங்கும் விஷயங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- செயல்களைச் சிறிய படிநிலைகளாகப் பிரித்தல்.
- தனக்குள் வாக்குறுதியை அளித்து, அதில் வெற்றி பெறும் போது தனக்குத் தானே பரிசு வழங்கிக் கொள்ளுதல்.
- உங்களோடு அன்பாகவும் உங்களை நேசித்தும் இருத்தல்.
- ஒப்பந்தமிட்டு நண்பருடன் இணைந்து இலக்குகளை அடைவதற்கு செயல்படுதல்.
- மக்கள் தாங்கள் கடந்து வந்த வளர்ச்சிப் பாதை பற்றிய பகிர்வைக் கேட்டறிதல்.

செயல் 1

நீங்கள் ஊக்கத்தோடு இருப்பதற்கு பின்பற்றும் சில வழிகளை பகிரவும்

1.2 சுய பிரதிபலிப்பு

அறிமுகம்

அன்றாட வாழ்வில் நாம் பல செயல்களைச் செய்து வருகிறோம். அவற்றுள் பெரும்பாலான, தனிப்பட்ட அல்லது தொழில் ரீதியான கருத்துகளோ முறைகளோ பொதுவாக இருக்கும். இது ஒரு முடிவை எடுக்கும் போது நாம் எவ்வாறு உணர்கிறோம் என்பதை அடிப்படையாகக் கொண்டது. இந்த உணர்வுகள், தனி நபர்களாக நாம் வைத்திருக்கும் நம்பிக்கைகள் மற்றும் மதிப்புகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. நம் மனதையும் செயலையும் பகுப்பாய்வு செய்வதன் மூலம், நம்மோடு நம்மைப்பற்றி பிரதிபலித்துகொள்ள முடியும்.

சுய பிரதிபலிப்பு

சுய பிரதிபலிப்பு, தனிநபர் பிரதிபலிப்பு என்றும் அழைக்கப்படுகிறது. இது ஒரு உள்நோக்கி பார்க்கும் செயலாகும். இது நம்முடைய எண்ணங்கள், உணர்ச்சிகள், முடிவுகள் மற்றும் நடத்தை ஆகியவற்றைப் பற்றி சிந்தித்து கவனம் செலுத்த நேரத்தை எடுத்துக் கொள்ளும் ஒரு செயலாகும். நாம் நம்மைப் பற்றி சிந்திக்கவில்லை என்றால் இயந்திரமான வாழ்க்கை முறையை கடந்து செல்வதுபோலாகும். விஷயங்கள் உண்மையில் நன்றாக சென்று கொண்டிருந்தால், மதிப்பீடு செய்யாமல் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு நகர்ந்து கொண்டே இருப்போம். சிந்திப்பதற்கு நாம் இடை நிறுத்துவதே இல்லை. எது நன்றாக நடக்கிறது, எது நடக்கவில்லை என்பதைத் தீர்மானிக்க சுய பிரதிபலிப்பு உதவுகிறது. வாழ்க்கையில் தனிப்பட்டதாகவோ அல்லது தொழில் ரீதியாகவோ, எதையும் பிரதிபலித்து பார்ப்பது எவ்வாறு என்பதை அடையாளம் காண கொடுக்கப்பட்டுள்ள படத்தைப் பாருங்கள்.

நீங்கள் ஐந்து கேள்விகளைக் கேட்டு, உங்களை நன்றாகப் புரிந்து கொள்ளலாம்.



சுய பிரதிபலிப்புக்கான குறிப்புகள்

சுயமாக பிரதிபலிக்க சற்று நேரம் எடுத்துக் கொள்ளலாம் எனவே சில நேரங்களில் நீங்கள் தோல்வியுற்றால், உங்கள் மீது குற்றம் சுமத்தாதீர்கள். சுய பிரதிபலிப்பை செய்ய சில குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

- எதிர் மறை எண்ணங்களைத் தூண்டும் சூழ்நிலைகளை அடையாளம் காணுதல் வேண்டும்.
- நேர்மறை எண்ணம் கொண்ட மக்களுடன் சூழ்ந்திருத்தல் வேண்டும்.
- சிரிப்பு மன அழுத்தத்தையும் உணர்ச்சிகளையும் குறைக்கும்.
- உணர்வுகளைச் சரிபார்த்து, அவற்றை நேர்மறையாக மாற்ற முயற்சித்தல்.

சுய பிரதிபலிப்புக்கான பயிற்சிகள்

சுய பிரதிபலிப்புக்கான எளிய மற்றும் பயனுள்ள வழிகள் பின் வருமாறு :

(i) **நேரத்தைத் திட்டமிடல்.** தொடக்கத்தில், தினமும் காலை அல்லது மாலை வேளையில் பத்து நிமிடங்கள் ஒதுக்கி, சுய பிரதிபலிப்புக்கான பயிற்சியை மேற்கொள்வது சிறந்ததாகும்.

(ii) **அமைதியான இடத்தில், பின்வரும் முக்கியமான கேள்விகளைத் தங்களுக்குள் கேட்கவும் :**

- சமீபத்தில் என்னை மிகவும் கவலைக் கொள்ளச் செய்வது எது?
- தற்பொழுது, எந்த வலுவான உணர்ச்சியை அனுபவித்து வருகிறேன்?
- மேலே உள்ள கேள்விகளின் அடிப்படையில், குறிப்பிட்ட உணர்ச்சிகளை அடையாளம் கண்டு, உங்கள் உணர்வுகளைக் குறிப்பிடவும். உணர்ச்சிகளின் சில எடுத்துக்காட்டுகள் வருத்தம், காயம், வெட்கம், கவலை, மகிழ்ச்சி மற்றும் கோபம்
- என்னால் கட்டுப்படுத்த முடியாத விஷயங்களைப் பற்றி, மன அழுத்தத்தில் இருக்கிறேனா?

(iii) **குறிப்பேடு உருவாக்குதல் :**

தனிப்பட்ட நுண்ணுணர்வுகள், கேள்விகள் மற்றும் பிரதிபலிப்புகளை எதிரொலித்து, பதிவு செய்யும் நாட்குறிப்பாக இது இருக்கலாம். இந்த எதிரொலிகளை உங்கள் பிரதிபலிப்பு குறிப்பேட்டில் எழுதவும். நீங்கள் வளர, உங்களுக்கு நேர்ந்தது நல்லதா கெட்டதா எனக்கண்டறிய இது உதவலாம்.

தனது கட்டுப்பாட்டு வளையம்

வாழ்க்கையில், சில விஷயங்கள் நம் கட்டுப்பாட்டில் இருக்கும், சில விஷயங்கள் நம் கட்டுப்பாட்டில் இருக்காது. இதை கண்டறிவதன் மூலம், அதிக சுய விழிப்புள்ளவர்களாகவும், அமைதியானவர்களாக மாறவும், மற்றவர்களுடன் நன்றாக தொடர்பு கொள்வதற்கும் இது உதவுகிறது.

செயல் 1

கொடுக்கப்பட்ட வட்டங்களில், உங்கள் வாழ்க்கையில் உங்களால் கட்டுப்படுத்த முடிந்த மற்றும் முடியாத விஷயங்களை எழுதுங்கள்.





என் வாழ்க்கையில் கட்டுப்படுத்த முடிந்தவை

என் எண்ணங்கள்
என் உணர்வுகள்
என் செயல்கள்
என் நடத்தை
என் கடின உழைப்பு
என் மனோபாவம்
என் தகவல் தொடர்பு
என் லட்சியங்கள்,
ஆசைகள்

என் வாழ்க்கையில் கட்டுப்படுத்த முடியாதவை

பிறரின் எண்ணங்கள்
மற்றும் உணர்வுகள்
வானிலை – மழை, வெயில்,
கோடைக்காலம், குளிர்க்காலம்
பிறரின் ஆசைகள்,
விருப்பங்கள் மற்றும் பிற.
பிறரின் இயல்பு மற்றும் நடத்தை
பிறரின் செல்வம்
பிறரின் செயல்கள், தவறுகள், அதிர்ஷ்டம்
செய்திகள், ஊடகம், அரசியல், போர்கள்,
இயற்கை பேரழிவுகள்.

நாம் கட்டுப்படுத்தக் கூடிய விஷயங்களை மாற்றும் ஆற்றலும் திறமையும் நம்மிடம் உள்ளது. பிடிமானம் அல்லது அதிகாரம் இல்லாத விஷயங்கள் கட்டுப்படுத்த முடியாதவையாகும். எனவே நாம் விரும்பும் வழியில் அவற்றை மாற்ற போராட வேண்டாம்.

எடுத்துக்காட்டு : என்னால் கட்டுப்படுத்த முடியும் – என்னை, என் நடத்தை, என் குறுகிய கோபம், என் சோம்பேறித்தனம். இவற்றை கட்டுப்படுத்த நம்மால் முடியும் என்பதால், மாற்றவும் முடியும்.

என்னால் கட்டுப்படுத்த முடியாது – என் பெற்றோரின் எண்ணங்கள், என் நண்பரின் எண்ணங்கள், என் பணியமர்த்துபவரின் எண்ணங்கள் இவற்றை நேரடியாகக் கட்டுப்படுத்த முடியாது என்பதால், எளிதாக மாற்றவும் முடியாது.

1.3 தனக்குள் நேர்மையாக இருத்தல்

அறிமுகம்

பொதுவாக, நாம் எப்பொழுதும் நமக்குள்ளேயே பேசுகிறோம். நமது தனிப்பட்ட அல்லது தொழில்ரீதியான வாழ்க்கையில், நாம் பல விஷயங்களைப் பற்றி நமக்குள் பேசுகிறோம். சில நேரங்களில், உண்மையானதை நாம் கூறுவதில்லை. நேர்மை என்பது உண்மையாக இருப்பதைக் குறிக்கிறது. நேர்மை என்பது நம் வாழ்நாள் முழுவதும் உண்மையைப் பேசும் பழக்கத்தை வளர்ப்பதாகும்.

நேர்மையான நபர் (நேர்மையாளர்)

ஒரு நேர்மையாளர் என்பவர் நடத்தையைக் காட்சிப்படுத்துகிறார், எப்பொழுதும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளைப் பின்பற்றுகிறார், ஒழுக்கத்தைப் பேணுகிறார், உண்மையைப் பேசுகிறார் மற்றும் காலம் தவறாமல் (Punctual) நடந்து கொள்கிறார். கருணை, ஒழுக்கம், உண்மைத் தன்மை, நீதிநெறி ஒருங்கிணைப்பு (Moral integrity) போன்ற நல்ல பண்புகளை வளர்க்க நேர்மை உதவுகிறது. பொய், ஏமாற்றுதல், நம்பிக்கையின்மை, திருடுதல், பேராசை மற்றும் பிற ஒழுக்கக்கேடான பண்புகளுக்கு இதில் இடமில்லை. நேர்மையாளர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் உண்மையாகவும், நம்பகத் தன்மையோடும், விசுவாசமாகவும் இருப்பார்கள். நேர்மையைத் தன் வாழ்வில் கடைப்பிடிக்கும் ஒருவர் வலுவான நீதிநெறித் தன்மையைக் கொண்டவர் ஆவார்.

தனக்குள் நேர்மையாக இருப்பதன் முக்கியத்துவம் :

- நேர்மையாக நடந்தால், நாம் நமது பலவீனங்களையும், குறைகளையும் ஏற்றுக் கொள்வோம்.
- உண்மையாக நடந்துக் கொண்டால், உங்கள் உணர்வு, ஆழ்ந்த மதிப்பு மற்றும் ஆசை ஆகியவற்றில் நீங்கள் முற்றிலும் நேர்மையாக இருப்பீர்கள்.
- உங்களுடனும் மற்றவர்களுடனும் உங்கள் உணர்வுகளை முழு மனதுடன் தொடர்பு கொள்வதைக் குறிக்கும். இது, உண்மையை உங்கள் வழியாக உலகிகெங்கிலும் செல்ல அனுமதிக்கிறது.
- எவ்வளவு நேர்மையாக இருக்கிறீர்களோ, அவ்வளவு எளிதாக உங்களை நம்பலாம்.

ஆரோக்கியமான

சுய – பேச்சு

இது	இதுவல்ல
✓ ஐயோ, நான் தவறு செய்துவிட்டேன்	✗ நான் ஒரு முட்டாள்.
✓ எனக்கு என்னைப் பிடித்து இருக்கிறது.	✗ யாருக்கும் என்னைப் பிடிக்கவில்லை.
✓ ஏதோ ஒரு தவறு செய்து விட்டேன்.	✗ நான் தவறானவன் / தவறானவள்
✓ இது மிகவும் கடினம், ஆனால் நான் தொடர்ந்து முயற்சி செய்கிறேன்.	✗ என்னால் இதை ஒருபோதும் செய்ய முடியாது.கைவிடுகிறேன்
✓ நான் இன்னும் அதை கண்டுப்பிடிக்கவில்லை.	✗ எனக்கு எதுவும் சரியாகக் கிடைப்ப தில்லை.
✓ எனக்குத் தகுதி இருந்தால் போதும்.	✗ எனக்குத் தகுதி இல்லை

தனக்குள் நேர்மையாக இருப்பதற்கான 10 அறிகுறிகள் :

1. தவறு செய்ய நீங்கள் பயப்படவில்லை.
2. உங்கள் உள்ளுணர்வைப் பின்பற்றுகிறீர்கள்
3. மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்று நீங்கள் கவலைப்படுவதில்லை.
4. உங்கள் விருப்பங்களைப் (Passion) பின்பற்றுகிறீர்கள்.
5. நேரத்தை வீண்டிக்கமாட்டீர்கள்
6. எப்பொழுதும் பெரியதாக கனவு காணுகிறீர்கள்
7. சிறிய விஷயங்கள் கூட முக்கியம் என்பதை நீங்கள் அறிவீர்கள்.
8. வாழ்க்கையில் உங்களுக்கு என்ன வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியும்.
9. முடிவுகளை எடுக்க பயப்படமாட்டீர்கள்.
10. நீங்கள் கடைசியாக சலிப்படைந்ததை நினைவில் வைத்துக்கொள்ள மாட்டீர்கள்.

சுய பேச்சு

சுய பேச்சு என்பது தனக்குள் இன்றியமையாத உள் உரையாடலாகும். நாம் நமக்குள் பேசுவது நமது எண்ணங்களிலும், நமது செயல்களிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இது நேர்மறையாகவோ அல்லது எதிர்மறையாகவோ இருக்கலாம். நல்ல உணர்ச்சிகரமான நல்வாழ்வுக்கு, ஆரோக்கியமான சுய பேச்சில் ஈடுபடுவது அவசியம். பெரும்பாலான மக்களுக்கு ஆரோக்கியமான சுயபேச்சு இயல்பாக வருவதில்லை, எனவே அதற்கு நிறைய பயிற்சி தேவைப்படுகிறது.

உங்களுக்குள் எவ்வாறு பேசுகிறீர்கள் என்பதைக் கவனியுங்கள்

உங்களுக்குள் நல்ல அல்லது கெட்ட விஷயங்களைச் சொல்கிறீர்களா?

அது உங்களை எப்படி உணர வைக்கிறது?

சுய பேச்சிற்கான குறிப்புகள்

விஷயங்கள் எவ்வாறு நடக்கின்றன, நீங்கள் எவ்வாறு நடந்து கொள்கிறீர்கள் என்பதைப் பற்றி நேர்மையாக இருங்கள்.

தவறு செய்யும்போது உங்களை மன்னியுங்கள்

கணிப்புகளைப் பதிவுசெய்து, தனிப்பட்ட வளர்ச்சியைக் கண்காணிக்கக் கூடிய குறிப்பேடு ஒன்றைத் தொடங்கவும்.

அனைத்து சாத்தியமான தீர்வுகளையும் ஆராய்வதில் கவனம் செலுத்துங்கள்.

செயல் 1

உனது நண்பருடன் இணைந்து, உங்களை ஒவ்வொரு நிலையில் மதிப்பிடுகிறீர்கள் என்பதைக் கண்டறியவும். பிறகு, உனது நண்பருக்கும் இது போல் மதிப்பிடவும். முகபாவ படவுருக்கள் (emojis) உதவியுடன் மதிப்பிடுங்கள் 🙂😌🙂😃😀.

இது 🙂 குறைந்த நிலை இது 😃 உயர்ந்த நிலை. முகபாவ படவுருவைக் கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் வரையவும்.

பண்புக் கூறுகள்	உனக்கான பதில்	உனது நண்பருக்கான பதில்
படைப்பாற்றல்		
தகவல் தொடர்பு		
ஒத்துழைப்பு		
ஆர்வம்		
தைரியம்		

உங்களால் இதை நேர்மையாக செய்ய முடியுமா?

உங்களால் இதை நேர்மையாக செய்ய முடியுமா?

சில சமயங்களில், நம்மைப் பற்றிய உண்மையை மறுப்பதன் மூலம் நம் யதார்த்த நிலையை நாம் குறைத்து மதிப்பிடுகிறோம். அதாவது, நாம் நம்மிடம் நேர்மையாக இல்லாதபோது, பிற நபரை விட நம்மைக் குறைவாக கருதுகிறோம்.

ஒரு குறிப்பிட்ட நேரத்தில், உங்களுக்குள் என்ன கதை சொல்கிறீர்கள் ?

ஒரு குறிப்பிட்ட நேரத்தில், உங்களுக்குள் என்ன கதை சொல்கிறீர்கள் ?

குறிப்பாக, கடினமான தருணங்களில், உங்களுக்கு நேர்மையாக இருப்பது என்பது உங்கள் தனிப்பட்ட கதையிலிருந்து உங்களைப் பிரித்துக் கொள்வதாகும். நாம் என்ன செய்கிறோம் என்ற விழிப்புணர்வோடு, அதை ஏன் செய்கிறோம் என்று நம்மை நாமே கேட்டுக் கொள்ளும் செயலை சுயபேச்சு என்று கருதலாம்.

1.4 தன்னை ஆயத்தப்படுத்துதல்

அறிமுகம்

கடந்த பத்து வருடங்களாக, வியத்தகு முறையில் நிகழ்வுகள் மாறி வருகின்றன. கற்பனை செய்ய முடியாத விஷயங்கள் தினமும் நடந்து கொண்டிருக்கின்றன. இன்று புதுமையாக இருப்பது, நாளை காலாவதியாகி விடுகிறது. சரி என்று நம்புவதைத் தவறு என்று நிரூபிக்க முடியும். தொடர்ந்து நம்மை நாம் ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தன்னை ஆயத்தப்படுத்தலின் அர்த்தம் :

தன்னை ஆயத்தப்படுத்துதல் என்பது குறிப்பிட்ட நோக்கத்திற்கு தேவையான பொருட்களை ஒரு நபருக்கு வழங்குவது ஆகும். உங்கள் அனைத்து பொறுப்புகளையும் நிறைவேற்றுவதற்கு தேவையான விஷயங்களை நீங்களே ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தன்னை ஆயத்தப்படுத்துவதற்கான எடுத்துக்காட்டு :

மேற்கூரையைச் சரி செய்ய, ஏணியில் ஏறுவதற்கு முன் தேவையான கருவிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். தேவையான கருவிகளை எடுத்துக்கொண்டு, மேற்கூரையை சரி செய்ய ஏணியில் ஏறி செல்லலாம்.

தனது துறையில் தன்னை ஆயத்தப்படுத்துதல்

நமது தொழில்துறையில் தேர்வு செய்ய பல விருப்பங்கள் உள்ளன. நமது விருப்பம் எதுவாக இருந்தாலும், குறிப்பிட்ட துறையில் வெற்றியை அடைய நாம் தயாராக இருக்க வேண்டும். தேவையான அறிவு, திறன்கள் மற்றும் அணுகுமுறையை நீங்களே ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

- **அறிவு நம் தொழிலை வரையறுக்கிறது** – பொறியியல், மருத்துவம், மேலாண்மை, சட்டம், விளையாட்டு, இசை போன்றவை.
- **திறன்கள்** – நமது ஆற்றலின் அளவு
- **அணுகுமுறை** – நாம் அடையும் செயல்திறனைக் கட்டுப்படுத்துகிறது.

பணிபுரியும் இடத்தில் உங்களை ஆய்த்தப்படுத்துதல்

பொதுவாக பணிபுரியும் இடத்தில், நமது தனிப்பட்ட மற்றும் தொழில்சார் வாழ்க்கைக்கு இடையேயான சமநிலை அடைவது என்பது ஒரு சவாலான செயலாகும். நமது அனைத்துப் பொறுப்புகளையும் மிகச் சிறப்பாகச் செய்ய நாம் நம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

வெற்றி முக்கோணம்



அடிப்படைகள், கோட்பாடுகள், தகவல், உண்மை, படங்கள், விளக்கங்கள், கற்றல், அறிவியல்

அவ்வாறு செய்வதற்கு, செயல்திறன் முக்கியமாகும்.

நாம் பல விஷயங்கள் மற்றும் பொறுப்புகளால் சூழப்பட்டுள்ளோம்.

இந்த பண்புகளுடன் சமநிலையான வாழ்க்கையைப் பராமரிப்பதன் மூலம், பணியிடத்தில் நல்ல ஈடுபாட்டுடன் வேலை செய்ய நம்மை மேம்படுத்திக் கொள்ளலாம். நம் வேலை மற்றும் நிறுவனத்துடன் அர்ப்பணிப்போடு இருந்தால், நமது அனைத்து பொறுப்புகளிலும் திறமையாக இருப்போம். பணியிடம் வழங்கும் உறவையும், ஆய்வையும் அதிகம் பயன்படுத்துவது முக்கியமாகும். நாம் முன்னோக்கிச் சென்று, நமது எல்லையைத் தொடர்ந்து விரிவடையச் செய்ய வேண்டும். நமது விருப்பங்களைத் தொடர்ந்து பின்பற்றலாம். அவ்வாறு செய்வதன் மூலம், முழு சமூகத்திற்கும் பயனளிக்க முயற்சி செய்யலாம். இவற்றைச் செய்வதன் மூலம், பணியிட வெற்றியை வாழ்க்கையின் வெற்றியாக மாற்றுவதற்கு நீங்கள் நன்கு நிலைநிறுத்தப்பட்டுள்ளதை உறுதி செய்ய முடியும்.

வெற்றிப் பெற ஆயத்தப்படுத்துவதற்கு தேவையான பொது திறன்கள் :

21 – ம் நூற்றாண்டில் நாம் வளர்த்துக் கொள்ள வேண்டிய மிக முக்கியமான திறன்கள் பின்வருமாறு :

1. தகவல் தொடர்பு திறன்கள்
2. ஒத்துழைத்தல் – மற்றவர்களுடன் நன்றாக வேலை செய்தல்



3. புதுமை – புதிய விஷயங்களுக்கு முயற்சிப்பதும், பழைய விஷயங்களைச் செய்வதற்கு புதிய வழிகளைக் கண்டறிதல்.
4. விழிப்புணர்வு – உங்களை நன்றாகப் புரிந்து கொள்ளுதல்
5. தீவிர சிந்தனை – கிடைக்கப்பெற்ற தகவல்களைக் கேள்விக்குள்ளாக்குவதன் மூலம், புத்திசாலித்தனமான முறையில் சிந்திக்கலாம். இதனால், நாம் போலி செய்திகளை கண்டு ஏமாற முடியாது.
6. தழுவுதல் – விரைவான மாற்றங்களுக்கு ஏற்ப மாறிக் கொள்ளும் திறன்.
7. பேச்சு வார்த்தை – சரியான முறையில் தகவல் பரிமாறிக் கொள்வதன் மூலம், ஒரு லாபகரமான, ஆரோக்கியமான சமரசத்தை அடைய முடியும்.
8. மீளும் தன்மை – எந்தவிதமான சவாலையும் பிரச்சனையையும் எதிர்கொள்ள வலிமையுடன் இருத்தல்.

தன்னை ஆயத்தப்படுத்துவதன் பயன்கள் :

- உங்கள் நம்பிக்கையை அதிகரிக்கச் செய்கிறது.
- புதிய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கிறது.
- தொடர்புகளை உருவாக்க பயன்படுகிறது.
- மாற்றங்களுக்கு ஏற்ப மாறிக் கொள்ள உதவுகிறது.
- மனதை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவுகிறது.

தன்னை ஆயத்தப்படுத்துவதற்கான எடுத்துக்காட்டுகள் :

எடுத்துக்காட்டு 1 : தொழில் தொடங்குவதற்கு

நீங்கள் திட்டமிட்ட வணிகத்தை மேற்கொள்ள, அதனோடு தொடர்புடைய அறிவு மற்றும் தற்போதைய திறன்களுடன் உங்களை ஆயத்தப்படுத்த வேண்டும். அறிவைப் தொடர்ந்து பெறுவது, உங்கள் நம்பிக்கையை அதிகப்படுத்தும்.

ஒரு நிகழ்நிலை அங்காடியைத் தொடங்க திட்டமிட்டால், நீங்கள் கட்டாயம் தெரிந்துக் கொள்ள வேண்டியவை :

- ஒரு வலைத்தளத்தை எவ்வாறு நிறுவுவது?
- சமூக ஊடக தளத்தைப் பயன்படுத்தி, நிகழ்நிலை அங்காடியை எவ்வாறு சந்தைப்படுத்துவது?
- முன்னணியில் இருப்பதற்கு மின்னஞ்சல் சந்தைப்படுத்துதலை எவ்வாறு பயன்படுத்துவது?

எடுத்துக்காட்டு 2 : தகவல் தொழில் நுட்பத் துறையில் நுழைவதற்கு

நுட்ப திறன்கள் மற்றும் மென்திறன்கள் இரண்டிலுமே உங்களைத் தயார்படுத்த முயற்சிக்க வேண்டும். அவை :

- தொழில் நுட்ப எழுத்து, சமூக ஊடக மேலாண்மை, குறிமுறை, வலையமைப்பு கட்டமைப்பு, வன் பொருள் வரிசைப்படுத்தல், இயக்கமுறைமை அறிவு மற்றும் தரவுத்தள மேலாண்மை போன்றவை நுட்பதிறன்கள் ஆகும்.
- தகவல் தொடர்பு, அமைப்புமுறை, பகுப்பாய்வு திறன்கள், படைப்பாற்றல், திட்ட மேலாண்மை, உறுதிப்பாடு, சிக்கலைத் தீர்ப்பது, வளம், தலைமை மற்றும் நெகிழ்வுத் தன்மை போன்றவை மென்திறன்களாகும்.

செயல் 1

சிந்தித்து, பகிரவும். விடுமுறையில் உனது குடும்பத்தாருடன் நீ சுற்றுலா செல்வதாக கற்பனைச் செய்து கொள். தங்குவதற்கு விடுதி அறையை முன்பதிவு செய்திருக்கிறீர்கள். அறையில் உள்நுழையும்போது, என்னென்ன பொருட்கள் உள்ளே இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பீர்கள்?

அவற்றை மூன்றாகப் பிரித்து, நன்கு வசதியான அறை / மிதமான வசதி கொண்ட அறை / மோசமான வசதி கொண்ட அறை என வகைப்படுத்தவும். கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில்,நீங்கள்எதிர்ப்பார்க்கும்பொருட்களை பொருத்தமான இடத்தில் எழுதவும்.



1.5 சீர்ப்படுத்துதல் (GROOMING) மற்றும் தனிப்பட்ட சுகாதாரம்

சீர்ப்படுத்துதல்

சீர்ப்படுத்துதல் என்பது நேர்த்தியாகவும் அழகாகவும் தோற்றமளிக்க, எடுக்கும் நடவடிக்கையின் செயல்முறையாகும். உங்களையும், உங்கள் தோற்றத்தையும் எவ்வாறு கவனித்துக் கொள்கிறீர்கள் குறிப்பாக, நீங்கள் ஒரு நேர்காணலுக்குச் செல்லும்போது, புதிய வேலையில் சேரும்போது ஆகியவை இதில் அடங்கும்.

தனிநபர் சீர்ப்படுத்துதல் ஏற்படுத்தும் தாக்கங்கள் :

1. உங்களைப் பற்றி நீங்கள் எவ்வாறு உணர்கிறீர்கள்?
2. மற்றவர்கள் உங்களை எப்படி பார்க்கிறார்கள்?

சீர்ப்படுத்துதலின் முக்கியத்துவம்

1. முதல்முறை பார்க்கும்போதே நேர்மறை தோற்றத்தை உருவாக்குகிறது.
2. நம்பிக்கையாய் உணர உதவுகிறது.
3. வல்லுநர் என்பதைக் குறிக்கிறது.
4. சுய ஒழுக்கத்தைக் காட்டுகிறது.
5. உங்களைப் பற்றிய மக்களின் கருத்தை மேம்படுத்துகிறது.

தனிநபர் சீர்ப்படுத்துதல் நன்மைகள்



www.tnschoolbooks.in

தனிநபர் சுகாதாரம்

சுகாதாரம்: சுகாதாரம் என்பது தனிப்பட்ட மற்றும் சமூக ஆரோக்கியத்தை அதன் அனைத்து பரிமாணங்களிலும் பாதுகாப்பதற்கான ஒரு விரிவான திட்டம் என்று வரையறுக்கப்படுகிறது. நல்ல தனிநபர் சுகாதாரம் என்பது வெளிப்புற உடலின் அனைத்து பகுதிகளையும் சுத்தமாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருப்பதாகும். உடல் மற்றும் மன ஆரோக்கியத்தைப் பராமரிப்பது முக்கியமாகும்.

தனிநபர் சுகாதாரத்தின் முக்கியத்துவம்

- நல்ல தனிப்பட்ட சுகாதார பராமரிப்பு, உங்களைக் கவனித்துக் கொள்ளாததால் ஏற்படும் நோய்கள் மற்றும் மருத்துவ நிலைமைகளின் பரவலைக் குறைக்கும்.
- இது தன்னம்பிக்கையை அதிகரித்து, தனிநபர் உறவுகளில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

தனிநபர் சுகாதாரத்தின் சில நடைமுறைகள்

ஒவ்வொரு நாளும் வெளியில், மில்லியன் கணக்கான கிருமிகள் (Germs) மற்றும் நுண்ணுயிரிகளுடன் (Virus) தொடர்பு கொள்கிறீர்கள். அவை உங்கள் உடலில் நிலைத்திருந்து, சில சமயங்களில் உங்களை நோய்வாய்ப்படுத்தலாம். தனிநபர் சுகாதார நடைமுறைகள், உங்களையும் உங்களைச் சுற்றியுள்ளவர்களையும் நோய்களிலிருந்து பாதுகாக்கிறது. தனிநபர் சுகாதாரத்தின் சில நடைமுறைகளைத் தெரிந்து கொள்வோம்.

மோசமான தனிநபர் சுகாதாரத்தின் விளைவுகள்

- மோசமான தனிப்பட்ட சுகாதாரம் கொண்ட ஒரு நபர், மற்றவர்களிடமிருந்து தனிமைப்படுத்தப்படலாம்.
- மோசமான தனிநபர் சுகாதாரம் கொண்ட மனித உடலில், கிருமிகள் வளர ஒரு

	சாப்பிடுவதற்கு முன், கழிப்பறையைப் பயன்படுத்திய பிறகு, பொது இடங்களிலிருந்து வீடு திரும்பிய பிறகு – சோப்பு மற்றும் தண்ணீருடன் உங்கள் கைகளைத் தவறாமல் கழுவவும்.
	ஒரு நாளைக்கு இரண்டு முறை பல் துலக்குங்கள்.
	தினமும் குளிக்கவும். வாரத்திற்கு ஒரு முறையாவது தலைமுடியை அலசவும்.
	காது ஒலிப்பான் (Ear phones), பல் துலக்கிகள் (Tooth brush), சீப்புகள் போன்ற தனிப்பட்ட பொருட்களைப் பகிர வேண்டாம்.
	உங்கள் கை மற்றும் கால் விரல்களின் நகங்களை எப்போதும் சுத்தமாக வைத்திருங்கள்.

சூழலை வழங்குகிறது இதனால் நோய்க்குட்படுதப்படலாம்.

- மோசமான தனிப்பட்ட சுகாதாரம் பல உடல்நல பாதிப்புகளைக் கொண்டுள்ளது. அவை சுகாதாரம் சார்ந்த நோய்களான பல் சொத்தை, தலைபேன் போன்றவையாகும்.

உங்களை சீர்ப்படுத்திக்கொள்வதற்கான படி நிலைகள்

ஒரு நேர்காணலுக்கு அல்லது தொழில் துறை பார்வையிடலுக்கு செல்லும்போது, சாதாரண உடையை நேர்த்தியாக உடுத்த வேண்டும். அந்த படிநிலைகளைப் பார்ப்போம்.

ஆண்களுக்காக

- முறையான காலணிகளுடன் சட்டை மற்றும் கால்சட்டையை அணியவும்.
- வெள்ளை அல்லது வெளிர்நிற சட்டைகள் மிகவும் பொருத்தமானது.
- ஆடைகள் நன்றாக இஸ்திரி செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்யவும்.
- பொருத்தமான காலுறைகளை (Socks) அணிய வேண்டும்.
- முடி நீளமாக இருந்தால் சவரஞ்செய்து (Shave) முடி திருத்தம் செய்யவும்.
- வலுவான வாசனை திரவியம் மற்றும் வியர்வை நாற்றம் நீக்கி (Deodarant) பயன்படுத்துவதைத் தவிர்க்கவும்.
- தற்குறிப்பு படிவம் மற்றும் ஆவணங்களை ஒரு கோப்புறை அல்லது பையில் எடுத்துக் செல்லவும்.

பெண்களுக்காக

- சட்டை மற்றும் கால்சட்டை அல்லது புடவை மற்றும் சல்வார் அணியவும்.
- ஆடைகள் நன்றாக இஸ்திரி செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்யவும்,
- மிக உயரமாக ஹீல்ஸ் அணிவதைத் தவிர்க்கவும்.
- ஒப்பனை இலகுவாகவும், இயற்கையாகவும் இருத்தல் வேண்டும்.
- வலுவான வாசனைத் திரவியத்தைப் பயன்படுத்த வேண்டாம்.
- நேர்த்தியான சிகை அலங்காரம் அல்லது சிகையை பின்னால் கட்ட வேண்டும்.
- தற்குறிப்பு படிவம் மற்றும் ஆவணங்களை ஒரு கோப்புறை அல்லது பையில் எடுத்துக் செல்லவும்.



செயல் 1 :

உனது பள்ளியில், ஒரு தொழில்துறை பார்வையிடலுக்கு அழைத்து செல்கின்றனர். சீருடை அணிந்து, அழகான தோற்றத்துடன் வருமாறு ஆசிரியர் கூறியுள்ளார். நீங்கள் பின்பற்றும் படிநிலைகளைத் தேர்ந்தெடுக்கவும்.

- சீருடைகள் சுத்தமாகவும் இஸ்திரி செய்யப்பட்டதாகவும் இருப்பதை உறுதி செய்யவும்.
- உயரமான ஹீல்ஸ் அணியவும்.
- காலையில் குளிக்கவும்.
- பிரகாசமான வண்ண காலுறைகளை அணியவும்
- பை மற்றும் அடையாள அட்டையை எடுத்துச் செல்லக் கூடாது.
- தலைவாருவதை மறந்து விடவும்.

1.6 சுய ஒழுக்கம்

அறிமுகம்

எந்தவொரு பணி அல்லது செயல்பாடு செய்யும்போதும், பின்பற்ற வேண்டிய விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் தொகுப்பை நாம் காண்கிறோம். ஒழுக்கமான நபராக இருக்க அந்த விதிகளைக் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். ஒழுக்கம் என்பது ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் மிக முக்கியமான ஆளுமைப் பண்புகளில் ஒன்றாகும். சுய ஒழுக்கம் என்பது நீண்ட கால வெற்றிக்கு ஆதரவான உடனடி சௌகர்யம் அல்லது விருப்பங்களை நிறுத்தி வைப்பதாகும். நீங்கள் சீக்கிரம் எழுந்திருப்பதை உறுதி செய்வது சுய ஒழுக்கத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

சுய ஒழுக்கம் – வரையறை:

சுய ஒழுக்கம் என்பது என்ன செய்ய வேண்டும் என்று எவரும் சொல்லாமலே கடினமாக உழைக்க அல்லது ஒரு குறிப்பிட்ட வழியில் நடக்க உங்களை நீங்களே கட்டுப்படுத்தும் திறன் என்று வரையறுக்கப்படுகிறது.

சுய ஒழுக்கத்தின் தேவை

- சுய ஒழுக்கம் ஒரு தசைப் போன்றது – எவ்வளவு அதிகமாக பயிற்சி அளிக்கிறீர்களோ, அவ்வளவு வலிமையடைவீர்கள்.
- எந்தவொரு சூழ்நிலையிலும் உங்கள் எதிர்வினையின் கட்டுப்பாட்டில் வைக்க உங்களை அனுமதிக்கிறது.
- சுய ஒழுக்கமின்மை சுய மரியாதையை குறைக்க நேரிடும்

சுய ஒழுக்கத்தின் முக்கியத்துவம்:

- உங்கள் இலக்குகளை அடைவதில் கவனம் செலுத்த உதவுகிறது.
- கடினமான பணிகளுடன் இணைந்திருக்கும் அறிவாற்றலைக் கொடுக்கிறது.
- தடைகள் மற்றும் அசௌகரியங்களைக் கடந்து, புதிய உயரத்திற்குச் செல்ல அனுமதிக்கிறது.

சுய ஒழுக்கத்தின் பயன்கள்:

- நீண்ட கால இலக்குகளை அடைவதற்கு உங்கள் திறனை அதிகரிக்கிறது.
- பதட்டதைக் குறைக்கிறது.
- உடல் ஆரோக்கியத்தை அதிகரிக்கிறது.
- மாற்றங்களுடன் உங்கள் உறவுகளைச் சிறப்பாக்குகிறது.
- மகிழ்ச்சியாக இருப்பதை உணர வைக்கிறது.
- மேலும் நெகிழ்ச்சி அடைய செய்கிறது.

சுய ஒழுக்கத்தின் வகைகள்

தினமும், சுய ஒழுக்க நடைமுறைகளைச் செயல்படுத்த பல வழிகள் உள்ளன. இங்கு மூன்று வகையான சுய ஒழுக்கம் எடுத்துக்காட்டுடன் கொடுக்கப்பட்டுள்ளது.

செயல்நிலை ஒழுக்கம் (Active discipline) – அந்ததந்த நேரத்தில் செய்ய வேண்டிய செயல்கள் அதாவது ஆரோக்கியமான உணவை உட்கொள்வது மற்றும் படிக்கும்போது கவனச் சிதறலைக் கட்டுப்படுத்துவது போன்றவைகளாகும்.

எதிர்வினை ஒழுக்கம் (Reactive Discipline) – முரட்டுத்தனமான நபரைக் கையாள்வது போன்ற எதிர்பாராத சூழ்நிலைகளை மேற்கொள்ளும் போது, உங்கள் எண்ணங்கள் அல்லது நடத்தைகளைக் கட்டுப்படுத்துதல் ஆகும். குறை கூறுவதற்குப் பதிலாக, இந்த சூழ்நிலைகளிலிருந்து கற்றுக் கொள்வதற்கான வாய்ப்பாக பயன்படுத்தவும்.

முன்னெச்சரிக்கை ஒழுக்கம் (Practice Discipline) – மழை நாட்களில் குடைக் கொண்டு செல்வது, செய்ய வேண்டிய பட்டியலை உருவாக்குவது மற்றும் சரியான நேரத்திற்கு தூங்கச் செல்வது போன்ற சூழ்நிலையைச் சிறப்பாக முன்கூட்டியே கையாள எடுக்கும் முயற்சியாகும்.

சுய ஒழுக்கத்தின் ஐந்து தூண்கள்:

1. **ஏற்றுக் கொள்ளுதல்** – எப்படி உள்ளீகளோ அப்படியே உங்களை ஏற்றுக் கொள்வது.
2. **மன உறுதி** – கவர்ந்திழுப்பு மற்றும் கவனச் சிதறல்களிலிருந்து மீள மனஉறுதியை வளர்த்துக்கொள்வது.
3. **கடின உழைப்பு** – இலக்கை நோக்கி நிலையான முயற்சியை மேற்கொள்வதற்கான விருப்பம்.
4. **தொழில் துறை** – பயனற்ற வழிகளில் இல்லாமல், நமது இலக்குகளின் மீது வளங்களை முதலீடு செய்தல்.
5. **விடாமுயற்சி** – உறுதியாக இருப்பது தடைகளைத் தகர்த்தெறியும் முயற்சி, தோல்விகளைப் படிப்பினையாக எடுத்துக்கொள்வது.

சுய ஒழுக்கத்தை உருவாக்க ஏழு வழிகள்

- தினமும் சிறந்து விளங்குதல்
- போதுமான அளவு தூக்கம் பெறுதல்
- சரியானவற்றிற்கு முன்னுரிமையை அளித்தல்



- 'முடியாது' என்று சொல்ல கற்றுக் கொள்ளுதல்
- தன்னைதானே மன்னித்தல்
- அசௌரியத்தைப் பொறுத்துக் கொள்ள கற்றுக் கொள்ளுதல்
- வெற்றியைக் காட்சிப்படுத்துதல்

செயல் 1

ஒழுக்கமாக இருக்க விரும்பும் இந்த பையனை பாருங்கள். சிறுவன் பின்பற்ற விரும்பும் உங்களது பரிந்துரைகள் அல்லது யோசனைகளை கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதவும்.

தயவு கூர்ந்து
எனக்கு உதவுங்கள்

1.7 பிறரை மதிக்கக் கற்றுக்கொள்ளுதல்

அறிமுகம்

மரியாதை என்பது அனைவரையும், அனைத்தையும் கவனத்துடன் நடத்துவதாகும். உங்களை எவ்வாறு நடத்த விரும்புகிறீர்களோ, அதைபோல் மற்றவர்களையும் நடத்த வேண்டும் என்பது முதன்மையான விதியாகும். உங்களிடமிருந்து வேறுபட்டிருந்தாலும் அல்லது உடன்படாவிட்டாலும் கூட அவர்களை அப்படியே ஏற்றுக் கொள்வது என்று அர்த்தப்படும்.

பிறரை மதிப்பதின் முக்கியத்துவம் :

உறவுகளை மதிப்பது நம்பிக்கை, பாதுகாப்பு, நல்வாழ்வு போன்ற உணர்வுகளை உருவாக்குவதாகும். இது இல்லாமல், பிற நபரோடு உள்ள உறவு மோதல் மற்றும் அதிருப்தியால் நிரப்பப்படும். நாம் பிறரை மதிக்கவில்லை எனில், அவர்களும் நம்மை மதிக்க மாட்டார்கள் நாம் நம்மையே மதிக்கவில்லை என்றால் பிறராலும் நாம் மதிக்கப்பட மாட்டோம். பயமில்லாமல் ஊகிக்கப்படவோ, அவமானப்படுத்தப்படவோ, பாகுபாடு காட்டப்படவோ நம்மை வெளிப்படுத்த பாதுகாப்பாக உணர வேண்டியது அவசியமாகும். மற்றவர்களுக்கு மரியாதைக் கொடுப்பது, பிறரால் நாம் மதிக்கப்படுவது, நம்மை நாம் மதிப்பது போன்றவற்றால் நமது சுய மதிப்பு, சுய திறன், மனநலம் மற்றும் நல்வாழ்வு ஆகியவை அதிகரிக்கிறது.

பணித்தளத்தில் மரியாதையின் முக்கியத்துவம் :

- மரியாதையான சூழல் மன அழுத்தத்தைக் குறைக்கும்.
- ஒத்துழைப்பு மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கிறது.
- ஊழியர்களின் திருப்தியை மேம்படுத்துகிறது.
- நியாயமான பணிச் சூழலை உருவாக்க உதவுகிறது.

பிறருக்கு மரியாதையளிப்பதற்கான வழிகள் :

- மற்றவர்கள் சொல்வதைக் கேட்பது
- மக்களின் கருத்துக்களை உறுதிப்படுத்துதல்
- வெவ்வேறு கண்ணோட்டத்துடன் வலியுறுத்தல்
- மரியாதையுடன் மறுத்தல்
- தவறு செய்தால், மன்னிப்பு கோருதல்
- மரியாதையற்ற நடத்தையைக் குறிப்பு எடுத்தல்
- நன்றியுடன் இருத்தல்
- மற்றவர்களின் சாதனைகளைப் பாராட்டுதல்

செயல் 1 : சிந்தித்து, பகிரவும்

நீங்கள் தான் குழுத்தலைவர் என கற்பனை செய்துகொள், உனது குழு உறுப்பினர்களோடு உரையாடிக் கொண்டிருக்கும் போது. ஒரு கட்டத்தில், அறையில் பலவிதமான கருத்துக்கள் வந்த வண்ணம் இருக்கிறது. பதற்றம் அதிகரிப்பதை உணர்ந்த நீ, இதை தடுப்பதற்கு என்ன செய்வாய்?

அன்பான குரலைப் பயன்படுத்தவும், மற்றவர்களின் கவலைகளைப் பிரதிபலிக்கவும், புறநிலையாக (யாரையும் தாக்காமல்) உங்கள் கருத்தை வெளிப்படுத்தவும் ஆரோக்கியமான விவாதங்கள் உதவும்.

முடிவுரை

இந்த பாடத்தில் நாம் எந்த சூழ்நிலையில் வளர்க்கப்பட்டாலும், ஒரு நபர் வாழ்க்கையில் சிறப்பாக வளர்வதற்கான முக்கிய விஷயங்களான சுய ஊக்கமளிப்பு, சுய பிரதிபலிப்பு, சீர்ப்படுத்துதல், சுயமரியாதை போன்றவற்றை பற்றி பார்த்தோம். ஆரோக்கியமான வேலை மற்றும் வாழ்க்கையில் சமநிலையைப் பராமரிக்கவும், இரண்டிலும் வெற்றி பெறவும் உங்களைச் சரியாக பகுப்பாய்வு செய்வது அவசியம்.

மதிப்பீடு

I . சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் (1 மதிப்பெண்)

1. மக்கள் தங்கள் இலக்குகளை அடைவதற்க்கு முயற்சிகளை எடுக்கத் தூண்டும் ஒரு உற்சாகமூட்டும் செயல்முறை __________ எனப்படும்.

   அ. சுய பிரதிபலிப்பு ஆ. இணைத்தல்

   இ. ஊக்கமளித்தல் ஈ. பாராட்டு

2. இன்பம், நோக்கம், ஆர்வம் மற்றும் வேடிக்கை ஆகியவை ___________ ஊக்கத்திற்கான காரணங்கள்

   அ. உள்ளார்ந்த ஆ. வெளிப்புற

   இ. வெளியார்ந்த ஈ. சுய

3. தனிப்பட்ட சுகாதாரம் என்பது ________ அதிகரிக்கிறது மற்றும் தனிப்பட்ட உறவுகளை சாதகமாக பாதிக்கிறது.

   அ. சுத்தத்தை

   ஆ. உந்துதலை

   இ. கதாபாத்திரத்தை

   ஈ. தன்னம்பிக்கையை

4. முன்னோக்கி நகர்வதற்கு பயன்படும் மன உந்துதல் ___________________ எனப்படும்.

   அ. சுய பிரதிபலிப்பு

   ஆ. சுய மரியாதை

   இ. சுய ஊக்கமளிப்பு

   ஈ. பின்னூட்டம்

5. நமது எண்ணங்கள், உணர்ச்சிகள், முடிவுகள் மற்றும் நடத்தை ஆகியவற்றைப் பற்றி சிந்தித்து, கவனம் செலுத்த நேரம் எடுத்துக் கொள்வது _________________ என்ப்படும்.

அ. சுய மரியாதை

ஆ. சுய பிரதிபலிப்பு

இ. நேர்மை

ஈ. பின்னூட்டம்

6. சுய பிரதிபலிப்பு என்பது _________ என்றும் அழைக்கப்படுகிறது.

அ. தனிநபர் பிரதிபலிப்பு

ஆ. சுய பாராட்டு

இ. தொழில்சார் பிரதிபலிப்பு

ஈ. எண்ணங்கள்

7. நம் வாழ்நாள் முழுவதும் உண்மையைப் பேசும் பழக்கத்தை வளர்ப்பது ______________ எனப்படும்.

அ. நேர்மை — ஆ. அழகூட்டுதல்

இ. பின்னூட்டம் — ஈ. வெட்கம்

8. நேர்மையைத் தன் வாழ்வில் கடைப்பிடிக்கும் ஒருவர், ___________ நீதிநெறித் தன்மையைக் கொண்டவர் ஆவார்.

அ. குறைவான — ஆ. வலுவான

இ. மாறாத — ஈ. அச்சுறுத்தும்

9. நமது எண்ணங்களிலும், செயல்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு உள் உரையாடல் _______________ ஆகும்.

அ. நேர்மை

ஆ. நண்பர்களுடன் பேசுதல்

இ. சுய பேச்சு

ஈ. சுய ஊக்கமளிப்பு

10. தன்னை _____________ என்பது ஒரு நபருக்கு ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக தேவையான பொருட்களை வழங்குதல் ஆகும்.

அ. பேசுவது — ஆ. சோதித்தல்

இ. பிரதிபலித்தல் — ஈ. ஆயத்தப்படுத்துதல்

11. கீழ்க்கண்டவற்றுள் எதில் நாம் நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்ள முடியும்?

அ. அறிவு

ஆ. உணர்ச்சி

இ. நடத்தை

ஈ. திட்டமிடுதல்

12. பிற நபர்களுடனான உறவுநிலைகள் மோதல் மற்றும் அதிருப்தியால் நிரப்பப்படுவது __________________ யின்மையால்.

அ. ஊக்கமளித்தல்

ஆ. மரியாதை

இ. உண்மை

ஈ. பின்னூட்டம்

13. அனைவரிடமும், அனைத்தையும் கவனமாக நடத்துவது என்பது ____ ஆகும்.

அ. நேர்மை — ஆ. ஏற்றுக் கொள்ளுதல்

இ. மரியாதை — ஈ. ஊக்கம்

14. ஆரோக்கியமான சுய பேச்சை பெறுவதற்கு ______________ தேவைப்படும்.

அ. மகிழ்ச்சி — ஆ. பயிற்சி

இ. விரும்பத்தகாத — ஈ. மரியாதை

15. நீண்டகால வெற்றிக்கு ஆதரவான உங்களின் உடனடி சௌகரியங்கள் அல்லது விருப்பங்களைத் தள்ளி வைப்பது _____________ஐ குறிக்கிறது.

அ. சுய பிரதிபலிப்பு — ஆ. சுய ஒழுக்கம்

இ. சுய ஏற்பு — ஈ. சீர்ப்படுத்துதல்

16. தனிநபர் மற்றும் சமூக ஆரோக்கியத்தை அதன் அனைத்து பரிமாணங்களிலும் பாதுகாப்பதற்கான விரிவான திட்டம் ___________________ என வரையறுக்கப்படுகிறது.

அ. சுகாதாரம்

ஆ. சீர்ப்படுத்துதல்

இ. ஊக்கமளித்தல்

ஈ. கலந்துக் கொள்ளுதல்

17. நேர்த்தியாகவும் அழகாகவும் தோற்றமளிக்க நடவடிக்கை எடுப்பது மற்றும் உங்களையும் உங்கள் தோற்றத்தையும் எவ்வாறு கவனித்துக் கொள்கிறீர்கள் என்பது ____________ எனப்படும்.

அ. சுத்தம் ஆ. சுகாதாரம்

இ. ஒழுக்கம் ஈ. அழகுபடுத்துதல்

18. சுய ஒழுக்கமின்மையின் விளைவு குறைந்த ____________ ஆகும்

அ. சுய மதிப்பு ஆ. சுய அனுதாபம்

இ. சுய பாதுகாப்பு ஈ. சுய மரியாதை

19. ஒரு சூழ்நிலையைச் சிறப்பாகக் கட்டுப்படுத்தும் முயற்சியில் முன்கூட்டியே விஷயங்களைச் செய்வது __________ ஒழுக்கம் எனப்படும்.

அ. முன்னெச்சரிக்கை

ஆ. செயல் நிலை

இ. எதிர்வினை

ஈ. இவை ஏதும் இல்லை

20. தனக்குள் பேசுபவர், தவறு இழைக்கும்போது தன்னை __________ வேண்டும்.

அ. தண்டிக்க ஆ. ஏற்றுக் கொள்ள

இ. மன்னிக்க ஈ. கடினமாக தள்ள

II. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும் (2 மதிப்பெண்கள்)

1. சுய ஊக்கமளித்தலின் முக்கியத்துவங்களைக் கூறவும்.
2. சுய பிரதிபலிப்பு என்றால் என்ன?
3. நேர்மையாக இருத்தலின் முக்கியத்துவத்தைக் கூறவும்.
4. தன்னை ஆயத்தப்படுத்துவதின் நன்மைகள் யாவை?
5. சுய பிரதிபலிப்பிற்கான தேவையைக் கூறவும்.

III. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும் (3 மதிப்பெண்கள்)

1. சுய ஊக்கமளிப்பு குறைவதன் காரணங்கள் யாவை?
2. சுய ஊக்கமளித்தல் – குறிப்பு வரைக
3. சுய பேச்சு என்றால் என்ன?
4. சுய ஒழுக்கத்தின் நன்மைகள் யாவை?
5. சீர்ப்படுத்துதலின் முக்கியத்துவம் யாவை?

IV. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும் (5 மதிப்பெண்கள்)

1. தனக்குள் நேர்மையாக இருப்பதை விளக்கும் 10 அறிகுறிகளைக் கூறவும்.
2. வெற்றி பெறுவதற்கு தேவைப்படும் சுய ஆயுத்தபடுத்துதலின் பொதுவான திறன்களை எழுதவும்.
3. தனிநபர் சுகாதாரம் மற்றும் அதன் முக்கியத்துவத்தை விளக்கவும்.
4. சுய ஒழுக்கத்தின் வகைகளை விவரிக்கவும்.

www.tnschoolbooks.in

ENGLISH LANGUAGE SKILLS

LEARNING OBJECTIVE

- Comprehend and produce spoken language for proper and effective interpersonal communication.
- Develop a reading habit and to improve general knowledge.
- Taking part in everyday discussions related to the world's current events.
- Revising the time and days of the week.
- Using a wide variety of questions and stating questions with precision
- Understand linguistic competence in two or more languages and develop bilingual/ multilingual communication.
- Creating an efficient flow of information between employees, give orders, convey instructions and fulfill the goals of the organization.
- Checking our ability to handle a specific language and to assess how good we are at it.
- Taking part in complex business, cultural and social activities.

2.1 LSRW SKILLS

INTRODUCTION

LSRW skills stands for learning, speaking, reading and writing skills. English is the dominant business language and it has become almost a necessity for people to speak English if they have to enter a global workforce or higher education. The present day market placement scenario has changed with the latest trends by including writing assessments like Image Skill and Email writing. To crack the latest placements students, must be perfect in reading and writing assessments. At present, some students who are very

XII_TM_EMPS_CH02-2023.indd 22 13/03/2023 12:28:31

good in technical knowledge are lagging in communication. Communication is the backbone of our society. It allows us to form connections, influence decisions, and motivate change. As communication plays a very important role, it is a need for students to be perfect in communication.

Listening

Listening is following and understanding the sound. Good listening is built on attitude, attention and adjustment. We are aware that listening is emotional whereas hearing is physical. It is the bigger part of communication. It is the absorption of the meanings of words by the brain. Listening leads us to an understanding of facts and ideas.

Benefits of Listening Skills:

- It helps an individual to know the areas of agreement and disagreement.
- It minimizes misunderstandings.
- It helps us to understand others' views & also to discover the flaws in our own position.
- It helps an individual to acquire the necessary skills through learning and with the help of this he/ she can achieve his/ her goals.

Speaking

Speaking is an act of making vocal sounds. We can understand that speaking means to converse or express one's thoughts and feelings in spoken language. To speak often implies conveying information. Speaking skills are the skills that give us the ability to communicate effectively. This skill helps the speaker to express his/ her message in a passionate, thoughtful and convincing manner.

Benefits of Speaking skills

- Speaking helps us to build self-confidence.
- It can communicate and articulate our thoughts and ideas.
- It gives an individual the ability to lead.
- It improves our quality of life.
- It helps in career advancement.
- It is a very important skill to receive recognition.

Reading

Reading is an important skill at every walk of an individual's life, especially in schools, colleges and at the workplace. Reading is the process of looking at a series of written symbols and getting meaning from them. Reading is a medium

www.tnschoolbooks.in

of discovering information to expand one's knowledge and understanding of the subject of any kind.

Benefits of Reading Skills:

- It helps to increase the vocabulary.
- It increases one's creativity.
- It plays a vital role in developing critical thinking.
- It shows the students new things and can broaden their interests.
- Helps to discover new things.
- Reading develops the imagination.
- Reading is essential in developing a good self-image.

Writing

Making impressions in a note or a platform is known as writing. Writing plays a crucial role in one's development. Writing can also help us in getting points in the future also.

Let us learn note making..!!!

Note making is not just about writing down everything you hear or read. It is a process of reviewing, connecting and synthesizing ideas from your lectures or reading. It helps us to grasp the theme of any speech.

Steps to make a crisp note:

Making notes helps us to stick to the point. To make your note understandable, it should be crisp and clear. Here are a few steps to make it a good one.

1. Only note down important data
2. Use mind maps and flowcharts
3. Highlight important points
4. Use tables for numerical value

ACTIVITY 1

In the following paragraph, important words are underlined. Make notes using underlined words.

My name is Angel. I'm 15 years old. I love eating Bananas. Yesterday I ate 3 bananas. Today I ate 4 bananas. I will play 2 hours a day.

Eg: Name - Angel, 15 Years, _______________



Benefits of Writing Skills

- It provides us with a permanent record for future reference.
- It is important as legal proof.
- It helps to get a job.

XII_TM_EMPS_CH02-2023.indd 24 13/03/2023 12:28:31

- It widens one's vocabulary.
- It increases productivity.
- It helps to recover our memories

Practice session

Let's write letters..!!!

Take a paper and write a letter to your best friend. You can write or convey your thoughts which you would like to say for a long period of time.

ACTIVITY 1

List out 4 benefits of listening skills in one words each

……………………………………………

……………………………………………

ACTIVITY 2

Introduce yourself in front of your classmates.

Glossary

1.	Comprehend	Understand; Grasp
2.	Pervasive	Widespread; Prevalent
3.	Sought-after	Fashionable; Popular
4.	Flaws	Errors; Mistakes
5.	Receptive	Willing to consider new ideas; Flexible

2.2 READING NEWSPAPERS AND MAGAZINES

INTRODUCTION

Reading newspapers or magazines is a repetitive activity which provides a great sense of educational value. It brings information about economy, entertainment, politics, business, industry, sports, trade and commerce. This good habit not only enhances one's knowledge about general information but also improves the language skills and vocabulary. Regular newspaper readers feel that their day sounds incomplete without holding early morning newspapers.

Merits of Reading Newspapers and Magazines

Newspaper or magazine ,it makes us an expert in our domain, enrich our language and strengthen our writing skills.

Benefits of Reading a Newspaper

The life of a newspaper exists one day, nevertheless if you read it routinely, it boosts your life by providing you with all the information regarding the life.The benefits of reading a newspaper are:

XII_TM_EMPS_CH02-2023.indd 25 13/03/2023 12:28:34

1. Gives knowledge about universal happenings
2. Provides information about regional advertising
3. Updates with the most recent innovations and discoveries
4. Improves language proficiency and vocabulary
5. Enhance reading, speaking and writing skills

Let's learn the usage of abbreviations in newspapers and magazines...!!!

In newspapers and magazines you may have seen the usage of abbreviations and acronyms instead of using the proper word. Why is it used?. When do abbreviations start to be used?. Let us know about it.

Abbreviations have a long history. They were created to avoid spelling out whole words. This might be done to save time and space and also to provide secrecy. In both Greece and Rome the reduction of words to single letters was common.

Here are some of the abbreviations commonly used in newspapers.

1. C.M - Chief Minister
2. P.M - Prime Minister
3. INR - Indian Rupee

PRACTICE SESSION

There are many other shortcut methods usually used in newspapers. List any five of them.

Eg : New Zealand is stated as NZ, the Finance Minister is stated as FM.

1. ________________
2. ________________
3. ________________
4. ________________
5. ________________

Benefits of Reading a Magazine

Pictures stand as a unique selling point of a magazine since visuals appeal more to the human mind and stay longer in our memory. The glossy and durable pages, present information in a refined way that captivates the attention of the readers. The benefits of reading a magazine are:

1. Pass the time while learning
2. Great stress buster
3. Keep an eye on recent trends

ACTIVITY 1

Choose any alphabet and browse through the newspaper or magazine, find five unfamiliar words beginning with the chosen letter, and look up the definition/

meaning of each. Write down the five words along with the definition/meaning

1. ______________________________

2. ______________________________

3. ______________________________

4. ______________________________

5. ______________________________

Glossary

1.	Enhance	Increase; Improve
2.	Diligent	Hardworking; Busy
3.	Skip	Omit; Avoid
4.	Tidbits	A choice or pleasing bit (as of information)
5.	Glossy	Shiny; Stylish
6.	Realms	Field; Domains

2.3 DESCRIBING HABITS AND ROUTINES

INTRODUCTION

People are creatures of habit, and routines offer a way to promote health and wellbeing. Having a routine can greatly improve your health and make you stress free. Many successful professionals rely on daily routines to help them accomplish their tasks and maintain a satisfying personal life. These routines help them develop strong workplace habits and dedicate time to their relationships and hobbies. Eg. Playing.

- I get up at 7am every day.
- I usually have toast/cereal/fruit for breakfast.
- I have a bath/a shower.
- I leave my house around 8.30.
- I drive/cycle/walk/catch the bus to work/school.
ஒரே நேரத்தில் விளக்கம் (Simultaneous Interpretation)

ஒரே நேர மொழி பெயர்ப்பாளர்கள் தங்கள் மனதிலிருக்கும் பேச்சை உடனடியாக விரும்பிய மொழிவடிவில் குறைந்த பட்ச நேரத்தில் மில்லி வினாடிகளில் வழங்குகிறார்கள். அசல் பேச்சு எந்த இடையூறு இல்லாமல் தொடர்வதற்குப் பார்வையாளர்கள் மற்றும் பேச்சாளர்களிடமிருந்து உடனடி புரிதல் தேவைப்படுகிறது.

தொடர்ச்சியான விளக்கம் (Consecutive Interpretation)

தொடர்ச்சியான முறையானது கட்டமைக்கப்பட்ட குறிப்புகளை எடுப்பதில் பெரிதும் சார்ந்துள்ளது. அசல் பேச்சாளர் ஒவ்வொரு சில வாக்கியங்களுக்கும் இடைநிறுத்துதல் வேண்டும், அதே போன்று மொழி பெயர்ப்பாளரும் இடைவிடாமல் குறுக்கிட்டு எதிர்பார்த்த மொழியில் பேச்சை விளக்க வேண்டும்.

முணுமுணுப்பான விளக்கம் (Whispered Interpretation)

முணுமுணுப்பான விளக்கம் சுச்சோடேஜ் (Chuchotage) பிரெஞ்சு மொழியில் கிசுகிசுத்தல் என்றும் அழைக்கப்படுகிறது. ஒரு மொழிபெயர்க்கும் மொழிபெயர்ப்பாளர் அவர்கள் மனதின் தகவலை மொழி பெயர்த்து வாடிக்கையாளருக்கு முணுமுணுப்பின் மூலம் தெரிவிக்கிறார். மொழிபெயர்ப்பாளர் ஒரு வாடிக்கையாளரிடம் குனிந்து, மென்மையாக அமைதியான குரலில் விருப்பமான மொழியில் செய்தியைத் தெரிவிக்கிறார்.

தொடர் விளக்கம் (Relay Interpretation)

குறிப்பிட்ட மொழி இணைபிற்கு மொழிப்பெயர்பாளர்கள் இல்லாத போது தொடர்விளக்கம் ஒரு சிறந்த பயன்முறையாகும். எடுத்துக்காட்டாக மலையாளத்திலிருந்து தமிழுக்கு மொழிப்பெயர்ப்பாளர்கள் இல்லையென்றால், ஒரு இடைநிலை செயல்முறையை பயன்படுத்தலாம். இந்நிலையில் ஒரு மலையாளி மொழிப்பொயர்ப்பாளர் பேச்சை பொதுவாக பேசப்படும் மொழியான ஆங்கிலத்தில் விளக்குவார். மற்றொரு மொழிபெயர்ப்பாளர் ஆங்கில விளக்கத்திற்கு தமிழ் விளக்கத்தை வழங்குவார். இவ்வாறாக மொழி இணைப்புகளை உள்ளடக்கலாம்.

செயல்பாடு 1

உணர்வுகளை விளக்கவும்:

கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள உணர்வுகளைப் பொருத்தவும்.

	சந்தேகத்திற்கிடமானது (Suspicious)
	வருத்தம் (Sad)
	மகிழ்ச்சியற்றது (Unhappy)
	ஆச்சரியம் (Surprised)
	சந்தோஷம் (Happy

முடிவுரை

இந்த பாடப்பகுதியில், உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான பயனர்கள் நண்பர்களுடன் தொடர்ந்து இணைந்திருத்தல், எளிதாகத் தகவல்களைக் கண்டு பிடிக்க அனுமதித்தல் மற்றும் நிகழ்நிலை உலகில் தனித்தன்மைகளைச் சேர்த்தல் போன்ற சமூக ஊடகங்களின் அவசியத்தை கண்டறிந்துள்ளளோம். தொற்று நோய்க்குப் பின் சமூக ஊடகத்தை பயன்படுத்தி ஒரு வலைப்பதிவு கணக்கை உருவாக்குதல் மற்றும் வலைப்பதிவில் பதிவிடுதலை கற்று கொள்ளல், போன்ற மெய்நிகர் தகவல் தொடர்பு தேவைகளை அறிந்துக்கொண்டோம். கேட்கும் திறனை மேம்படுத்துதல், செயல்திறன் மிகு கேட்டலின் அவசியங்கள், விளக்கத் திறனின் வகைகள் மற்றும் அதன் பண்புகளால் ஒரு திறமையான தொடர்பாளராக மாற வேண்டிய அவசியத்தை புரிந்து கொண்டோம்.

மதிப்பீடு

I . சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும். (1 மதிப்பெண்)

1. கணினி அடிப்படை தொழில் நுட்பமான மெய்நிகர் வலையமைப்பு மற்றும் குழுவின் மூலம் கருத்துகள், யோசனைகள் மற்றும் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளும் வசதியை _______ என்ற சொல் குறிக்கிறது.
   அ. தகவல் தொடர்பு
   ஆ. இணையம்
   இ. சமூக ஊடகம்
   ஈ. கேட்டல்

2. குறிப்புகள் எடுக்கும் பழக்கம் _________ திறமைகளை மேம்படுத்தும்.
   அ. சிந்தனை
   ஆ. விளக்கம்
   இ. கேட்டல்
   ஈ. தலைமை

3. ஒத்த துறைகளில் ஆர்வமுள்ள நிபுணர்களின் குழுக்கள், தகவலை பகிர்ந்தும் மற்றும் உரையாடலில் பங்கேறக்கும் பிரபலமான இடம் ____________.
   அ. முகநூல்
   ஆ. கீச்சகம் (Twitter)
   இ. சமூக ஊடகம்
   ஈ. லிங்க்டுஇன் (LinkedIn)

4. பின்வருவனவற்றில் சமூக ஊடகத்தின் நன்மை எது?
   அ. இணைய மிரட்டல்
   ஆ. சமூக ஊடகங்களின் மென்தாக்குதல்
   இ. நேருக்கு நேர் தொடர்பு திறன் குறைகிறது
   ஈ. அனைவருடன் இணைந்திருத்தல்

5. பொதுவாக நிகழ்நிலை நாட்குறிப்பினை (Diary) உணர்த்தும் சொல் _______________.
   அ. பதிவிடு ஆ. வலைப்பதிவு
   இ. சமூக ஊடகம் ஈ. Microsoft Word

6. ஒரு சராசரி மனிதனால் தொடர்ச்சியாகவும் திறன் மிகவும் _____________ வரை கவனிக்க முடியும்.
   அ. 1 மணி நேரம் ஆ. 2 மணி நேரம்
   இ. 3 நிமிடங்கள் ஈ. 15 நிமிடங்கள்

7. ஒரே அறையில் இல்லாவிட்டாலும் கூட ஒன்றாக வேலை செய்து மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும் செயல்முறை __________ எனப்படும்.
   அ. மெய்நிகர் தகவல் தொடர்பு
   ஆ. இணையம்
   இ. சமூக ஊடகம்
   ஈ. வலைப்பதிவுகள்

8. தொடர்பு என்பது கடினமான வணிக முடிவுகளுக்கு வழிவகுக்கும் ஒரு _____________ திறனாகும்.

அ. வன் ஆ. மென்

இ. முறையான ஈ. தகவல் தொடர்பு

9. மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும்போது, அறிவு, திறன்கள், செயல்முறைகள் மற்றும் இயல்புகளை ஒருங்கிணைந்து தொடர்புபடுத்துவது ____________________ எனப்படும்.

அ. தகவல் தொடர்பு திறமை

ஆ. மெய்நிகர் தகவல் தொடர்பு

இ. வலைப்பதிவு

ஈ. சமூக ஊடகம்

10. பொதுவான நோக்கத்தைத் தொடரவும் இலக்குகளை நிறைவேற்ற, ஒன்றாக செயல்படுத்துவதற்க்கு மக்கள் பயன்படுத்தும் திறன் உத்திகள் மற்றும் இயல்புகளை உள்ளடக்கியது ___________ எனப்படும்.

அ. தகவல் தொடர்பு

ஆ. ஒத்துழைப்பு

இ. கருத்துகள்

ஈ. பதிவிடு

11. அதிக ___________________ பேசுவது சில இடங்களில் அவமரியாதையாக இருக்கலாம்.

அ. மென்மையாக

ஆ. சத்தமாக

இ. கடுமையாக

ஈ. பணிவாக

12. தகவல் தொடர்புகளை எப்போது தொடங்க வேண்டும் மற்றும் பதிலளிக்க வேண்டும் என தெரிந்திருப்பது _____________ ன் ஒரு முக்கிய அம்சமாகும்.

அ. முடிவெடுப்பது

ஆ. மீள் கருத்துகள்

இ. மரியாதை

ஈ. கருத்து

13. பிள்ளைகள் சொல்வதை பெற்றோர்கள் கவனிப்பது அவர்களுடைய _________ யை வளர்க்க உதவும்.

அ. சுய மரியாதை ஆ. மரியாதை

இ. விசுவாசம் ஈ. வழிகாட்டல்

14. ஒருவர் பேசுவதைக் கேட்கும்போது, அவர்கள் எதைப் பற்றி பேசுகிறார்கள் என்பதிலும் அதே சமயத்தில் அவர்களுடைய __________________ செய்கைகளிலும் கவனம் செலுத்த வேண்டும்.

அ. வாய்மொழி ஆ. சைகைகள்

இ. மொழியற்ற ஈ. காட்சி

15. தகவல் கேட்டல் _______________ எனவும் அழைக்கப்படும்.

அ. விரிவானக் கேட்டல்

ஆ. விமர்சனக் கேட்டல்

இ. சிகிச்சைக்கானக் கேட்டல்

ஈ. பாராட்டுதல்

16. கவனம், மனப்பான்மை மற்றும் _________ ஆகியவை 3A கேட்டலாகும்.

அ. உளச்சார்வு ஆ. அனுசரிப்பு

இ. மாற்று ஈ. பாராட்டுதல்

17. சிகிச்சைக்கானக் கேட்டல் ___________ எனவும் அழைக்கப்படும்.

அ. பரிதாபம்

ஆ. தகவல் கேட்டல்

இ. விரிவானக் கேட்டல்

ஈ. பாராட்டுதல்

18. எழுதப்பட்ட செய்திகள், விளக்கப்படங்கள், வரைபடங்கள், நில படங்கள், நினைவுக் கூறுகள் சொல்வழி மற்றும் சொல் வழி சாராதவை போன்றவற்றிற்க்கு பயன்படுத்தபடுவது ________________ திறனாகும்.

அ. தகவல் தொடர்பு ஆ. பேசும்

இ. விளக்கம் ஈ. கேட்டல்

19. மனதிலிருக்கும் பேச்சை மொழிபெயர்த்து அதை குறைந்த பட்ச தாமதத்துடன் உடனடியாக விரும்பிய மொழி வடிவில் வழங்கும் செயல்முறை _________________ விளக்கமாகும்.

அ. ஒரே நேரத்தில்

ஆ. தொடர்ச்சியான

இ. முணுமுணுப்பான

ஈ. தகவல் தொடர்பு

20. குறிப்பிட்ட மொழிக்கு மொழி பெயர்ப்பாளர் இல்லாதபோது. இணைமொழி வழியாக ____________________ மொழிபெயர்ப்பு சிறந்த பயன்முறையாகும்.

அ. ஒரே நேரத்தில்

ஆ. தொடர் விளக்க

இ. முணுமுணுப்பான

ஈ. தகவல் தொடர்பு

II. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும் (2 மதிப்பெண்கள்)

1. சமூக ஊடகங்களின் முக்கியத்துவத்தைப் பட்டியலிடவும்.
2. ஒத்துழைப்பு என்றால் என்ன?
3. வலைப்பதிவு என்றால் என்ன?
4. செயல்திறன் மிகு கேட்டல் திறனை மேம்படுத்த சில வழிகளை அடையாளம் காணவும்.
5. பல்வேறுவகையானசமூகஊடகங்களைப் பட்டியலிடவும்.

II. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும் (3 மதிப்பெண்கள்)

1. மெய்நிகர் தகவல் தொடர்பு மற்றும் சமூக ஊடகங்களின் நன்மைகளை ஒப்பிடவும்.
2. தகவல் தொடர்பு திறமையின் முக்கிய துணைத் திறன்களை விவரிக்கவும்.
3. செயல் திறன் மிகு கேட்டலில் 3A கள் யாவை?
4. திறமையான தெடர்பாளராக மாறுவதற்கு என்னென்ன வழிகள் உள்ளன?
5. விளக்கத்திறன்களின் பண்புக்கூறுகள் யாவை?

IV. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும் (5 மதிப்பெண்கள்)

1. வலைப்பதிவில் உள்ள கூறுகள் யாவை?
2. விளக்கத்திறன் வகைகளை விளக்கவும்.
3. தொடர்புத் திறன்களின் நன்மை, தீமைகளை எழுதவும்.
4. செயல் திறன்மிகு கேட்டல் பயிற்சிக்கான 5 வழிகளைக் குறிப்பிடவும்.

www.tnschoolbooks.in

4

மின்னணு திறன்கள்

கற்றலின் நோக்கம்

- MS–Word – ல் உரை வடிவூட்டல், அட்டவணைகள், வரைபடங்கள் அஞ்சல் இணைப்பு பற்றி கற்றல்.
- MS–Excel மற்றும் அதன் பயன்பாடுகளின் பல்வேறு செயல்பாடுகளைக் கற்றல்.
- Power Point உருவாக்குதல், அசைவூட்டுதல் மற்றும் பிற அம்சங்களைக் கற்றல்.
- G Suite –ன் பல்வேறு பயன்பாடுகள் மற்றும் அதன் பயன்களையும் கற்றல்
- தகவல் தொழில் நுட்பத்தில் பல்வேறு தொழில் நுட்பங்கள் பற்றிய அறிவை வழங்குதல்.

4.1 MS WORD – யை ஆராய்தல்

அறிமுகம்

Microsoft Word ஒரு சொற் செயலாக்கப் பயன்பாடாகும். இது அமைப்புத் திட்டம் (Layout) மற்றும் உள்ளடக்கப் பாணிகள் போன்ற ஆவணப் பண்புக் கூறுகளைக் கட்டமைக்கவும் மேலும் அவற்றின் உள்ளடக்கத்தை பல்வேறு வழிகளில் மற்றும் வடிவங்களில் சேர்த்து ஆவணங்களை உருவாக்கவும் அனுமதியளிக்கிறது.

பத்தி அமைப்புகள்

1. புல்லட்டுகள் (Bullets)

புல்லட் பட்டியலை உருவாக்க விரும்பும் இடத்தில் சுட்டியை வைக்கவும்.

Home > Paragraph கிளிக் செய்து பின் புல்லட்டிற்கு அருகிலுள்ள அம்புகுறியைக் கிளிக் செய்து தேவையான புல்லட் பாணிகளைத் தேர்வு செய்து, தட்டச்சு செய்ய தொடங்கவும்.

புதிய புல்லட் தேவைப்படும் போதெல்லாம் ஒவ்வொரு முறையும் Enter சாவியை அழுத்தவும் அல்லது Enter சாவியை இரண்டு முறை அழுத்தி புல்லட் பட்டியலை முடிக்கவும்.



2. எண்வரிசையிடல் (Numbering)

1. எண் வரிசையிடப்பட வேண்டிய பொருளடக்கத்தைத் தேர்வு செய்க.
2. Home > Paragraph > Numbering – யைக் கிளிக் செய்க.



பல அடுக்குப்பட்டியல் (Multilevel List)

உள்ளிணைந்த தலைப்பு பாணிகளைப் (Built in heading styles) பயன்படுத்தும் ஆவணத்தைத் திறந்து, First Heading – யைத் தேர்வு செய்க.

Home > Paragraph >Multilevel List – யைத் தேர்வு செய்க.



3. சீரமைவுகள் (Alignment)

இது, MS–Word –ஆல் அதன் பயனர்களுக்கு வழங்கப்பட்ட ஒரு சிறப்பு அம்சமாகும். இந்த அம்சம் பயனரால் உரை அல்லது பத்திகளைச் சீரமைக்கப் பயன்படுத்தப்படுவதால் இது ஒரு நல்ல தோற்றம் (அல்லது) முறையான தோற்றத்தை அளிக்கிறது. நான்கு வகையான உரை சீரமைப்புகள் உள்ளன. அவை இடது சீரமைவு, மையச் சீரமைவு, வலது சீரமைவு மற்றும் சரியான சீரமைவு.

அ. இடது சீரமைவு உரை

MS–Word – ல் ஒரு பத்தி அல்லது உரையைப் பக்கத்தின் இடது ஓரத்தில் சமமாக சீரமைக்கப்பட்டால் அது இடது சீரமைவு உரையாகும்.

ஆ. மையச் சீரமைவு உரை

MS–Word – ல் பக்கத்தின் இடது மற்றும் வலது ஓரத்திற்கும் மையத்தில் பத்தி (அல்லது) உரை இருந்தால், அது மைய சீரமைவு உரை ஆகும்.

இ. வலது சீரமைவு உரை

MS–Word – ல் ஒரு பத்தி (அல்லது) உரையை பக்கத்தின் வலது ஓரத்தில் சமமாக சீரமைக்கப்பட்டால் அது வலது சீரமைவு உரை ஆகும்.

ஈ. சரியான சீரமைவு உரை

MS–Word – ல் ஒரு பத்தி (அல்லது) உரை, வலது மற்றும் இடது ஓரத்திற்கும் சமமாக சீரமைக்கப்பட்டால் அது சரியான சீரமைவு உரை ஆகும்.

4. தலைப்பு மற்றும் அடிக்குறிப்பு



1. Insert > Header (or) Footer – க்கு செல்லவும்.
2. Header பாணியைத் தேர்வு செய்யவும்.
3. தலைப்பு அல்லது அடிக்குறிப்பிற்கான உரையைச் சேர்க்கவும் அல்லது மாற்றவும். ஏற்கனவே உருவாக்கப்பட்ட தலைப்பு (அல்லது) அடிக்குறிப்பினைத் திருத்தியமைக்க அதன் மீது இரட்டை கிளிக் (double click) செய்யவும்.
4. தலைப்பை நீக்க, அதனை தேர்வு செய்து பின் Different First Page பெட்டியைச் தேர்வு செய்யவும்.
5. வெளியேற Close Header and Footer – யைத் தேர்வு செய்யவும் அல்லது ESC சாவியை அழுத்தவும்.

ஏற்கனவே உருவாக்கிய தலைப்பு / அடிக்குறிப்பை நீக்க Insert – Header (or Footer) – Remove Header (or Remove Footer) – யைத் தேர்வு செய்யவும்.

5. பக்க எண்

Insert தொகுதியில், பக்க எண் ஐகானைக் கிளிக் செய்து, பின்னர் பக்க எண்ணைக் கிளிக் செய்யவும். ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து, சீரமைப்பு பாணியைத் தேர்ந்தெடுக்கவும். நியமிக்கப்பட்ட தலைப்புப் பக்கங்களைத் தவிர ஒவ்வொரு பக்கத்தையும் Word தானாக எண்ணும். எண்ணிடும் பாணியை மாற்ற, வடிவமைப்பைத் தேர்ந்தெடுத்து, விரும்பிய வடிவமைப்பைத் தேர்ந்தெடுக்கவும்.



பக்க அமைப்பின் அடிப்படைகள்

1. ஓரங்கள்

1. Layout > Margins தேர்வு செய்க



2. அளவீடுகளைத் தேர்வு செய்க.



2. ஓரங்களைத் தனிப்பயனாக உருவாக்குதல்

1. Layout > Margins தேர்வு செய்க.
2. Custom Margins – யைத் தேர்வு செய்க.
3. ஓரங்களில் மேல் மற்றும் கீழ் அம்புக் குறிகளைப் பயன்படுத்தி மதிப்புகளை உள்ளிடுக.
4. முடிந்ததும் Ok – வைத் தேர்வு செய்க.

தானமைவு ஓரங்களை மாற்றியிடுதல்

1. Layout > Margins > Custom Margins – தேர்வு செய்க.
2. ஓரங்களை அமைக்கவும்.
3. Set as Default – யைத் தேர்வு செய்க.
4. தேர்வினை உறுதிபடுத்தவும்.

2. திசையமைவு (Orientation)



1. முழு ஆவணத்தின் திசையமைப்பினை மாற்ற Layout > Orientation – யைத் தேர்வு செய்க.
2. Portrait அல்லது Landscape – யைத் தேர்வு செய்க.

3. பக்க அளவு



Word கோப்பின் பக்க அளவை மாற்ற, ஆவணத்தைத் திறந்து Layout > Page Setup > Size – யைக் கிளிக் செய்க.

பக்க அளவுகளின் பட்டியல்களைக் கொண்ட ஒரு கீழிறங்குப்பட்டியல் தோன்றும். ஆவணம் முழுவதும் பக்க அளவுகளை மாற்ற, பட்டியலிலிருந்து சரியான விருப்பத்தைத் தேர்வு செய்க.

4. நெடுவரிசைகள்

செய்தித்தாள் – பாணி நெடுவரிசை அமைப்பில் நெடு வரிசைகளைச் சேர்த்து ஆவணத்தை வடிவமைக்கவும். Layout > Column – யை கிளிக் செய்து விரும்பும் அமைப்பைக் கிளிக் செய்க.

1. உங்கள் ஆவணத்தின் ஒரு பகுதிக்கு மட்டும் நெடுவரிசைகளைப் பயன்படுத்த, சுட்டியின் துணையுடன் நீங்கள் வடிவமைக்க விரும்பும் உரையைத் தேர்ந்தெடுக்கவும்.
2. Layout >Columns > More Columns – யைக் கிளிக் செய்க.
3. Apply to பெட்டியில் Selected Text – யைத் தேர்வு செய்து Ok – வைக் கிளிக் செய்க.



5. எழுத்தாக்கம் மற்றும் இலக்கணம்:





MS – Office சாத்தியமான எழுத்துப்பிழைகளைச் சிவப்பு நிற நெளிவு கோடுகளாலும், இலக்கணப் பிழைகள் நீல நிற நெளிவு கோடுகளாலும் குறிக்கப்படுகின்றன.

எழுத்துப்பிழை அல்லது இலக்கணப் பிழை குறிப்பிடப்படவில்லை எனில், தானியங்கி சோதனை நிறுத்தப்பட்டிருக்கலாம். தானியங்கி எழுத்துப்பிழை மற்றும் இலக்கணப்பிழையைச் சோதிக்க தானியங்கி சோதனையை தொடங்கவும்.

எழுத்துப் பிழை மற்றும் இலக்கணப் பிழைகளைச் சரி செய்வதில் உதவி தேவைப்படும் போது, அடிக்கோடிடப்பட்டச் சொல் அல்லது சொற்றொடர் மீது வலது கிளிக் செய்து தோன்றும் விருப்பங்களில் ஒன்றினைத் தேர்ந்தெடுத்து பிழைகளைச் சரி செய்யவும்.

செயல்பாடு 1

"எனது குடும்பம்" என்ற பெயரில் ஒரு word ஆவணத்தை உருவாக்கவும். தங்களின் குடும்ப உறுப்பினர்களின் பெயர் மற்றும் வயதினை அதில் உள்ளிடவும்.

ஆவணத்தில் புல்லட்டின்களைப் பயன்படுத்த மறவாதீர்கள்.

செயல்பாடு 2

MS word இன் ஓரங்களை (margins) பயன்படுத்தி வகுப்பறை கரும்பலகை மாதிரி ஒன்றினை உருவாக்கவும்.

அப்பலகை கீழ்காணும் விவரங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

1. தேதி
2. நாள்
3. வகுப்பு
4. பிரிவு
5. மொத்த மாணவர்களின் எண்ணிக்கை
6. பொன்மொழி
7. பாடத்தின் பெயர்

4.2 MS – EXCEL – யை ஆராய்தல்

அறிமுகம்

MS – Excel – ன் பல்வேறு அம்சங்கள் இந்த பாடத்தில் விளக்கப்பட்டுள்ளது.

1. கண்டறிந்து மாற்றுதல் (Find & Replace)

குறிப்பிட்ட எண் அல்லது உரை சரங்கள் போன்ற சிலவற்றைப் பணிப் புத்தகத்தில் (Work book) தேடுவதற்கு Find and Replace–ன் அம்சங்களைப் பயன்படுத்தவும். குறிப்புகளுக்கான (Reference) தேடல் உருப்படிகளைக் கண்டறியவோ அல்லது அதை வேறு ஏதாவது கொண்டு மாற்றவோ முடியும். கேள்விக் குறி (Question Mark), வளைவுக்குறி (Tildes), விண்மீன்குறி (Asterisk) மற்றும் எண்கள் போன்ற பதிலிஎழுத்துகளையும் (Wildcard Characters) தேடல் உருப்படிகள் உள்ளடக்கியுள்ளது. வரிசை மற்றும் நெடுவரிசைகளுக்குள்ளும் கருத்துகள் அல்லது மதிப்புகளுக்குள்ளும், பணித்தாள் அல்லது முழு பணிப்புத்தகத்திலும் தேடலாம்.

தேடலைத் தொடங்க Home > Editing > find & Select > Find அல்லது Ctrl +f – யை அழுத்தவும்.

குறிப்பு : தேடுவதற்கான முழு உரையாடல் பெட்டியைக் காண Options >> பொத்தானைக் கிளிக் செய்க. தானமைவாக அதன் விருப்பங்கள் மறைந்திருக்கும்.

1. Find What பெட்டியில், தேட விரும்பும் உரை அல்லது எண்களைத் தட்டச்சு செய்க அல்லது Find What பெட்டியில் அம்புகுறியைக் கிளிக் செய்க, பின்பு பட்டியலிருந்து சமீபத்திய தேடல் உருப்படிகளைத் தேர்வு செய்க.

குறிப்புகள் : பதிலிஎழுத்துக்களான (Wildcard Characters) – கேள்விக் குறி (?), விண்மீன் குறி (*), வளைவுக் குறி (~) – களை தேடல் அளவு கோல்களாக பயன்படுத்தவும்.

- ஒரு எழுத்தைத் தேட கேள்விக் குறியைப் (?) பயன்படுத்தவும். எடுத்துக்காட்டாக s ? t யானது "Sat" மற்றும் "Set" – யைக் கண்டு பிடிக்கும்.
- ஒன்றிற்கு மேற்பட்ட எண்ணிக்கையிலான எழுத்துக்களைத் தேட விண்மீன் குறியைப் (*) பயன்படுத்தவும். எடுத்துக்காட்டாக S * d – யானது "Sat" மற்றும் "Started" – யைக் கண்டு பிடிக்கும்.
- ?, *, அல்லது ~ எழுத்துக்களை கண்டறிய ~ தொடர்ந்து ?, *, அல்லது ~ பயன்படுத்தலாம். உதாரணமாக fy91~? என்பது fy91? என்பதைக் கண்டறியவும்.

2. Find all அல்லது Find Next கிளிக் செய்து தேடலைத் தொடங்கவும்.
3. குறிப்பு : Find All கிளிக் செய்யும் போது, நீங்கள் தேடும் நிபந்தனைகளின் ஒவ்வொரு நிகழ்வும் பட்டியலிடப்படும். மேலும் பட்டியலில் உள்ள ஒரு குறிப்பிட்ட நிகழ்வைக் கிளிக் செய்வதால் அதன் நுண்ணறை தேர்ந்தெடுக்கப்படும். நெடுவரிசையின் தலைப்பைக் கிளிக் செய்து, தேடலின் முடிவுகளை நீங்கள் வரிசைப்படுத்தலாம்.

மாற்றியமைத்தல்

எண்கள் அல்லது உரையை மாற்றியமைக்க Ctrl + H சாவியை அழுத்தவும் அல்லது Home > Editing >find & Select – Replace என்பதைக் கிளிக் செய்க.

1. Replace with பெட்டியில் தேடும் உரைக்கு பதிலாக மாற்றியமைக்க வேண்டிய உரை அல்லது எண்களை உள்ளீடு செய்க.
2. Replace All அல்லது Replace – யைக் கிளிக் செய்க.

2. ஒட்டுதல்(Paste) விருப்பங்கள்

1. நீங்கள் நகலெடுக்க விரும்பும் தரவு அல்லது பிற பண்புக் கூறுகளைக் கொண்ட நுண்ணறைகளைத் தேர்ந்தெடுக்கவும்.
2. Home > Copy  கிளிக் செய்க.
3. நீங்கள் நகலெடுத்ததை ஒட்ட விரும்பும் பகுதியில் உள்ள முதல் நுண்ணறையைக் கிளிக் செய்க.
4. Home > Paste – ற்கு அடுத்துள்ள அம்புகுறியைக் கிளிக் செய்து. பின்னர் Paste Special என்பதைத் தேர்வு செய்க.

5. நீங்கள் விரும்பும் விருப்பங்களைத் தேர்வு செய்க.



ஒட்டுதல் விருப்பங்கள்

தேர்வு	ஒட்டப்படுவது
All	இணைக்கப்பட்ட தரவு உள்ளிட்ட அனைத்து நுண்ணறை உள்ளடக்கம் மற்றும் வடிவமைப்புகள்
Formulas	வாய்ப்பாடுகள் மட்டும்
Values	மதிப்புகள் மட்டும்
Formats	நுண்ணறை உள்ளடக்கம் மற்றும் வடிவமைப்புகள்
Comments	நுண்ணறையுடன் இணைக்கப்பட்ட கருத்துக்கள் மட்டும்
Validation	தரவு சரிபார்ப்பு விதிகள் மட்டும்
All Using Source Theme	மூலதரவு பயன்படுத்திய அழகாக்கத்தை (theme) அனைத்து நுண்ணறை உள்ளடக்கங்கள் மற்றும் வடிவமைப்புகளுக்கும் பயன்படுத்துதல்.
All Except Borders	எல்லைக் கோடுகளை தவிர அனைத்து நுண்ணறை உள்ளடக்கங்களையும் வடிவமைப்புகளையும் ஒட்டுதல்.
Column Widths	ஒரு நெடுவரிசை அல்லது தொடர் நெடு வரிசையின் அகலத்தை மற்றொரு நெடு வரிசை அல்லது தொடர் வரிசைக்கு ஒட்டுதல்.
Formulas and Numbers formats	வாய்ப்பாடுகள் மற்றும் எண் வடிவமைப்புகளை மட்டும் ஒட்டும்
Values and Numbers Formats	தேர்ந்தெடுக்கப்பட்ட நுண்ணறைகளின் மதிப்புகள் மற்றும் எண் வடிவமைப்புகளை மட்டும் ஒட்டும்.
All Merge Conditional Formats	நகலெடுக்கப்பட்ட நுண்ணறைகளின் நிபந்தனை வடிவூட்டல்களை தற்போது ஒட்டப்பட்ட பகுதியின் நிபந்தனை வடிவூட்டல்களையும் ஒருங்கிணைத்தல்.

3. செயற்கூறு நூலகம்

Auto Sum

நீங்கள் ஒரு நெடுவரிசை அல்லது வரிசையின் எண்களைக் கூட்ட வேண்டும் என்றால், உங்களுக்கான கணக்கை Excel செய்யும். நீங்கள் கூட்ட விரும்பும் எண்களுக்கு அடுத்துள்ள நுண்ணறையைத் தேர்ந்தெடுத்து

Home தத்தலிலுள்ள Autosum – யைக் கிளிக் செய்து Enter சாவியை அழுத்தி கூட்டலைச் செய்யலாம்.



AutoSum – யைக் கிளிக் செய்யும் போது Excel தானாகவே எண்களின் கூட்டுத் தொகைக்கான வாய்ப்பாட்டை உள்ளீடு செய்யும் (Sum செயற்கூறினை பயன்படுத்துகிறது).

- நெடுவரிசை எண்களை கூட்டுவதற்கு, நெடுவரிசையின் கடைசி எண்ணுக்கு கீழே அடுத்துள்ள நுண்ணறையைத் தேர்வு செய்க. வரிசை எண்களைக் கூட்ட, வலதுபுறத்தில் கடைசி எண்ணுக்கு அடுத்துள்ள நுண்ணறையைத் தேர்வு செய்க.
- Home > Autosum, மற்றும் Formulas > Autosum ஆகிய இரு இடங்களில் AutoSum உள்ளது.
- ஒரு முறை வாய்ப்பாட்டை உருவாக்கியதும், அதனை மற்ற இடங்களில் மீண்டும் மீண்டும் தட்டச்சு செய்வதற்கு பதிலாக நகலெடுக்கலாம்.

4. வாய்ப்பாட்டை உள்ளிடுதல்

கூட்டல், கழித்தல், பெருக்கல் மற்றும் வகுத்தல் போன்ற எளிய வாய்ப்பாடுகளை உங்களுடைய பணித்தாளில் உருவாக்கலாம். எளிய வாய்ப்பாடுகள் எப்பொழுதும் = என்ற அடையாளத்துடன் தொடங்கும், அதனை தொடர்ந்து, நிலை எண் மதிப்புகள் மற்றும் கூட்டல் (+) கழித்தல் (–), பெருக்கல் (*) அல்லது வகுத்தல் (/) போன்ற கணக்கீட்டு செயற்குறிகளும் பயன்படுத்தப்படும்.

உதாரணமாக, ஒரு எளிய வாய்பாட்டினை எடுத்துக்கொள்வோம்.

- பணித்தாளில், வாய்ப்பாட்டை உள்ளிட விரும்பும் நுண்ணுறையைக் கிளிக் செய்க.
- = அடையாளத்தினை விரும்பும் கணக்கீட்டிற்கான நிலை எண்மதிப்புகள் மற்றும் செயற்குறிகளுடன் தட்டச்சு செய்க.
- எடுத்துக்காட்டாக = 1 + 1 என உள்ளிடவும்.
- வாய்ப்பாட்டினை உள்ளிட்டவுடன் Enter சாவியை அழுத்தவும்.

5. சீரமைவுகள்

உரையை சீரமைவு செய்ய,

1. தேவையான நுண்ணறை, வரிசை, நெடுவரிசை அல்லது பரப்பினைத் தேர்வு செய்க.
2. Home > Orientation – தேர்வு செய்தப் பின், கீழ்கண்ட விருப்பத்தில் ஏதேனும் ஒன்றைத் தேர்வு செய்க.



உரையை துல்லியமான கோணத்தில் சுழற்ற:

1. தேவையான நுண்ணறை, வரிசை, நெடுவரிசை அல்லது பரப்பினைத் தேர்வு செய்க.
2. Home > Orientation >format Cell Alignment .
3. வலது புறத்தில் Orientation – க்கு கீழே Degrees பெட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட நுண்ணறை உரையின் சுழற்ற விரும்பும் டிகிரிகளின் எண்ணிக்கையைத் துல்லியமாக அமைக்க, மேல் அல்லது கீழ் அம்புக்குறியைப் பயன்படுத்தவும்.

6. உரை மடங்குதல்

பணித்தாளில், மடக்கப்பட வேண்டிய நுண்ணறை தேர்வு செய்க.

Home > Alignment தொகுதியில், Wrap Text யைக் கிளிக் செய்க. (Desktop ற்கான Excel – ல், நீங்கள் நுண்ணறையைத் தேர்ந்தெடுத்து Alt + H + W அழுத்தவும்).



7. வரிசையின் உயரத்தை மாற்றுதல்:

1. வரிசையின் உயரத்தைச் சரி செய்ய தேவையான நுண்ணறை அல்லது நுண்ணறை பரப்பைத் தேர்வு செய்க.
2. Home > Cell தொகுதியைத் தேர்வு செய்து Format – யைக் கிளிக் செய்க.
3. Cell Size – ன் கீழ், பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றினைச் செய்யவும்.
   - வரிசையின் உயரத்தை தானாகவே சரி செய்ய Autofit Row Height – யைக் கிளிக் செய்க.
   - வரிசையின் உயரத்தை குறிப்பிட, Row Height – யைக் கிளிக் செய்க. தேவையான உயரத்தை, Row Height பெட்டியில் தட்டச்சு செய்யவும்.

8. மையப்படுத்தி இணைத்தல்

1. இணைக்கப்பட வேண்டிய நுண்ணறைகளைத் தேர்வு செய்க.
2. Home > Merge & Center – யைத் தேர்வு செய்க.
3. நுண்ணறை இணைப்பை நீக்கவும் :

   Merge & Center – க்கு அருகிலுள்ள கீழ் அம்புகுறியைக் கிளிக் செய்க.
4. Unmerge Cells – யைத் தேர்வு செய்க.



9. பலகத்தை நிலைப்படுத்துதல்



அ. முதல் நெடுவரிசையை நிலைப்படுத்துதல்:

1. View > Freeze panes > Freeze First Column தேர்வு செய்க.

நெடுவரிசை A மற்றும் B க்கும் இடையில் தோன்றும் மங்கலான கோடு, முதல் நெடுவரிசை நிலைப்படுத்தப்பட்டதைக் காட்டுகிறது.

ஆ. முதல் இரண்டு வரிசைகளை நிலைப்படுத்துதல் :

1. மூன்றாவது நெடுவரிசையைத் தேர்வு செய்க.
2. View > Freeze panes > Freeze Panes – தேர்வு செய்க.

இ. வரிசை மற்றும் நெடுவரிசைகளை நிலைப்படுத்துதல் :

வரிசைகளுக்கு கீழே மற்றும் நீங்கள் திரைஉருளல் செய்யும்போது பார்க்க விரும்பும் நெடுவரிசையின் வலதுபுறத்தில் உள்ள நுண்ணறையைத் தேர்வு செய்க.

1. View > Freeze panes > Freeze Panes – தேர்வு செய்க.
2. வரிசைகள் மற்றும் நெடுவரிசைகளின் நிலைப்படுத்துதலை நீக்குதல் :
3. View > Window > Unfreeze Panes தேர்வு செய்க.



10. வரைபடங்கள்

அ. வட்ட வரைபடம் :

பணித்தாளில் ஒரு நெடுவரிசை அல்லது வரிசையில் அமைக்கப்பட்ட தரவு வட்ட வரைபடத்தில் திட்டமிடப்படலாம். வட்ட வரைபடம் ஒரு தரவுத் தொடரில் உள்ள உருப்படிகளின் அளவைக் காட்டுகின்றன. இது உருப்படிகளின் கூட்டுத் தொகையின் விகிதாசாரமாகும். வட்டவரைபடத்திலுள்ள தரவுப் புள்ளிகள் முழு வட்டவரைபடத்தின் சதவீதமாகக் காட்டப்படுகின்றன.

வட்ட வரைபட எடுத்துக்காட்டு



வட்ட வரைபடத்தைப் பயன்படுத்துகையில் கருத்தில் கொள்ள வேண்டியவை :

- உங்களிடம் ஒரே ஒரு தரவுத் தொடர் மட்டுமே உள்ளது.
- உங்கள் தரவில் உள்ள மதிப்புகள் எதுவும் எதிர்மறையாக இல்லை.
- உங்கள் தரவிலுள்ள மதிப்புகள் ஏதும் பூஜ்ஜிய மதிப்புகள் அல்ல.
- வட்ட வரைபடத்தின் பகுதிகளைக் குறிக்கும் தரவு வகைகளின் எண்ணிக்கை ஏழுக்கு மேல் இருக்க கூடாது.

வட்ட வரைபடத்தின் வகைகள்

- வட்ட வரைபடம் மற்றும் 3D வட்ட வரைபடம் : வட்ட வரைபடங்கள் 2D அல்லது 3D வடிவத்தில் ஒவ்வொரு மதிப்பின் பங்களிப்பையும் மொத்தமாக காட்டுகின்றன. வட்ட வரைபடத்தின் அனைத்து துண்டுகளையும் வலியுறுத்துவதற்க்கு கைமுறையாக வெளியே எடுக்கலாம்.

- வட்டத்தின் வட்ட வரைபடம் மற்றும் வட்டத்தின் பட்டை வரைபடம்: வட்டத்தின்

www.tnschoolbooks.in

வட்ட வரைபடம் மற்றும் வட்டத்தின் பட்டை வரைபடம், சிறிய மதிப்புகளைக் கொண்ட இரண்டாம் நிலை வட்ட வரைபடம் அல்லது பட்டை வரைபடத்தின் மூலம் வேறுபடுத்திக் காட்டும்.

Pie of pie

Bar of pie

செயல்பாடு 1

MS Excel ஐப் பயன்படுத்தி உங்கள் மதிப்பெண் சான்றிதழை தயாரிக்கவும். மேலும் உங்கள் சராசரி மதிப்பெண்ணையும் கண்டறியவும்.

செயல்பாடு 2

உங்கள் மதிப்பெண் பட்டியலை வட்ட வரைபடம் வடிவில் உருவாக்கவும். (செயல்பாடு 1 இல் உள்ள மதிப்பெண்களுக்கு).

4.3 MS POWERPOINT – யை ஆராய்தல்

அறிமுகம்

MS Powerpoint–ன் செயல்பாடுகள் இந்த பாடப்பகுதியில் விளக்கப்பட்டுள்ளது.

1. அழகாக்கம் (THEME)

அழகாக்கம் என்பது ஒருங்கிணைந்த தொழில்முறை தோற்றத்திற்கான சில்லுகளுக்கு பயன்படுத்தப்படும் வண்ணங்கள், எழுத்துருக்கள் மற்றும் காட்சி விளைவுகள் ஆகியவற்றின் முன் வரையறுக்கப்பட்ட தொகுப்பாகும்.

அழகாக்கம் ஒன்றைப் பயன்படுத்துவது உங்கள் நிகழ்த்துதலுக்கு குறைந்த முயற்சியுடன் இணக்கமான தோற்றத்தை அளிக்கிறது. எடுத்துக்காட்டாக,

- நீங்கள் உங்களுடைய சில்லுகளுக்கு, வரைகலை (அட்டவணைகள் வடிவங்கள் மற்றும் பல) சேர்க்கும்போது PowerPoint மற்ற உறுப்புகளுக்கு இணைக்கமான அழகாக்க நிறத்தினை (Theme Colour) பொருத்தும்.
- அடர்ந்த நிற உரைகளுக்கு, வெளிர் நிற பின்னணியைக் காட்டும் (மற்றும் நேர்மாறான நிறத்தில்), ஏனெனில் மாறுபட்டு காணப்படுவது படிப்பதை எளிதாக்கும்.

நிகழ்த்துதலுக்கான அழகாக்கத்தினைத் தேர்வு செய்தல்

Powerpoint – பல நிகழ்கால அழகாக்கங்களை அளிக்கிறது. Design தொகுதியின் இடது புறத்தில் இவை உள்ளன.

1. சில்லுவை திறக்கவும். **Design** தொகுதியில் அழகாக்கத்திற்கான சிறு படத்தினைக் (**Thumbnail**) – குறிப்பிட்டால் உங்கள் சில்லுவின் காட்சி முன்னோட்டம் தெரியும்.
2. மேலும் அழகாக்கத்தின் படத்தொகுப்பினைப் பார்வையிட **More** பொத்தானைக் கிளிக் செய்க.



நீங்கள் விரும்பும் அழகாக்கம் கிடைத்தவுடன் அதனுடைய சிறு படத்தினைக் கிளிக் செய்வதன் மூலம் அதனை நிகழ்த்துதலின் அனைத்து சில்லுகளுக்கும் அமைக்கலாம்.

2. நிலைமாற்றம் (TRANSITION)

சில்லுவின் நிலைமாற்றம் என்பது நிகழ்த்துதலின் போது ஒரு சில்லுவிலிருந்து மற்றொரு சில்லுவிற்கு நகரும் போது ஏற்ப்படும் அசைவூட்டம் போன்ற விளைவுகளைக் குறிக்கும். Powerpoint நிகழ்த்துதலில் சில்லு நிலைமாற்றங்களைச் சேர்ப்பதன் மூலம் நிகழ்த்துதலுக்கு உயிரூட்டம் அளிக்கலாம்.

1. நிலைமாற்றத்தினைச் சேர்க்க விரும்பும் சில்லுவினைத் தேர்வு செய்க.

2. Transitions தொகுதியைத் தேர்வு செய்து Transition – யைத் தேர்வு செய்க. தேவையான நிலைமாற்றத்தினை தேர்வு செய்தால் அதன் முன்னோட்டத்தைப் பார்வையிடலாம்.
3. Effects விருப்பித்தினைத் தேர்வு செய்வதன் மூலம் நிலைமாற்றித்தின் இயல்பு தன்மையையும் இயக்கத்தையும் தேர்வு செய்யலாம்.
4. நிலைமாற்றம் எப்படி உள்ளது என்பதை Preview– மூலம் பார்வையிடலாம். நிலை மாற்றத்தினை நீக்க Transitions >None தேர்வு செய்க.

3. அசைவூட்டல் (ANIMATION)

PowerPoint நிகழ்த்துதலில், உரைகள், படங்கள், வடிவங்கள் மற்றும் பொருள்கள் போன்றவற்றிற்கு அசைவூட்டங்கள் மற்றும் விளைவுகளைச் சேர்க்கலாம்.

அ. அசைவூட்டல் மற்றும் விளைவுகளைச் சேர்த்தல்

1. அசைவூட்டல் செய்ய விரும்பும் பொருள் அல்லது உரையைத் தேர்வு செய்க.
2. Animations – யைக் கிளிக் செய்து அசைவூட்டலைத் தேர்வு செய்க.
3. Effect – யைக் கிளிக் செய்து விளைவுகளைத் தேர்வு செய்க.

ஆ. அசைவூட்டல் மற்றும் விளைவுகளை கையாளுதல்

1. நிகழ்த்துதலில் அசைவூட்டல்களைத் தொடங்க பல வழிகள் உள்ளன.
2. ON CLICK – சில்லுவினைக் கிளிக் செய்யும் போது அசைவூட்டலைத் தொடங்கலாம்.
3. With Previous – வரிசையின் முந்தைய அசைவூட்டலைப் போலவே அதே நேரத்தில் அசைவூட்டலைத் தொடங்க இதனை தேர்வு செய்தல்.
4. After Previous – முந்தையது நடந்து முடிந்த உடனேயே அசைவூட்டலைத் தொடங்க.
5. Duration – விளைவை நீடிக்கலாம் அல்லது சுருக்கலாம்.
6. Delay –முன் நேரத்தை சேர்த்து விளைவை இயக்க.

இ. கூடுதலான விளைவுகளை அசைவூட்டலுக்கு சேர்த்தல்

1. அசைவூட்டலுடன் உள்ள பொருள் அல்லது உரையை தேர்வு செய்க.
2. Add Animation – யைக் கிளிக் செய்து ஏதேனும் ஒன்றினைத் தேர்வு செய்க.

ஈ. அசைவூட்டல் வரிசைகளை மாற்றுதல்

1. அசைவூட்ட அடையாளத்தினைத் தேர்வு செய்க.
2. விரும்பும் விருப்பத்தைத் தேர்வு செய்க.
3. Move Earlier– வரிசையாக முன்கூட்டியே அசைவூட்டலைத் தோன்ற செய்தல்.
4. Move Later–வரிசையாக சிறிது நேரத்திற்கு பின் அசைவூட்டலைத் தோன்ற செய்தல்.

உ. தொகுக்கப்பட்ட பொருளுக்கு (Grouped Objects) அசைவூட்டலைச் சேர்த்தல்

தொகுக்கப்பட்ட பொருள்கள், உரைகள் போன்றவற்றிற்கு அசைவூட்டலைச் சேர்க்கலாம்.

1. Ctrl பொத்தானை அழுத்தியவாறு தேவையான பொருளினைத் தேர்வு செய்க.
2. Format > group > Group தேர்வு செய்து, பொருட்களைக் குழுவாக ஒருங்கிணைக்கவும்.
3. Animation – யைக் கிளிக் செய்து தேவையான அசைவூட்டலைத் தேர்வு செய்க.

4. வடிவங்கள்

ஆவணங்கள், மின்னஞ்சல்கள், சில்லுக்காட்சிகள் மற்றும் விரித்தாள் (Spreadsheet) போன்றவற்றில் பெட்டிகள், வட்டங்கள் மற்றும் அம்புக்குறிகள் போன்ற வடிவங்களைச் சேர்க்கலாம்.

அ. Excel, Outlook, Word அல்லது Powerpoint – ல் வடிவங்களைச் சேர்த்தல்

1. Insert தொகுதியில் Shapes – யைக் கிளிக் செய்க.

2. தேவையான வடிவத்தைத் தேர்ந்தெடுத்து, விரும்பும் இடத்தில் கிளிக் செய்து இழுத்து (drag) வடிவத்தினை அமைக்கவும்.



சரியான சதுரம் அல்லது வட்டத்தை உருவாக்க (அல்லது மற்ற வடிவங்களின் பரிமாணங்களைக் கட்டுப்படுத்தி), Shift சாவியை அழுத்தியவாறு இழுக்கவும்.

ஆ. வடிவத்தை சேர்த்தல் அல்லது இருக்கும் வடிவத்தினைக் கிளிக் செய்து உரையை உள்ளிடுதல்

1. வடிவத்தின் மீது வலது கிளிக் செய்து Add Text (or) Edit Text – யைத் தேர்வு செய்து தட்டச்சு செய்ய தொடங்கவும்.
2. உரையை வடிவூட்ட மற்றும் சீரமைக்க Home கிளிக் செய்யவும். பின்பு நிரலைப் பொறுத்து மற்றும் உபயோகப்படுத்த விரும்பும் வடிவூட்டல்களைப் பொறுத்து, Font, Paragraph அல்லது Alignment தொகுதிகயைத் தேர்வு செய்யலாம். (உரை வலுவூட்டல் விருப்பங்கள் குறைவாக இருக்கும்)

இ. வடிவத்தினை நீக்குதல்

நீக்க விரும்பும் வடிவத்தினை கிளிக் செய்து Delete சாவியை அழுத்தவும். பல வடிவங்களை நீக்க, Ctrl சாவியுடன் நீக்க விரும்பும் வடிவங்களின் மீது கிளிக் செய்து Delete சாவியை அழுத்தவும்.

5. திறன்கலை (SMART ART)

உங்களின் எளிய உரை மற்றும் புல்லட்களுக்குக் காட்சித் தாக்கத்தை சேர்த்து, அவற்றை Powerpoint – இல் உள்ள வரைகலை தொகுப்பில் இருந்து திறன் கலையாக மாற்றவும்.

அ. உரையைத் திறன்கலையாக மாற்றுதல்

1. உரையைத் தேர்வு செய்க.
2. Home > convert to Smart Art கிளிக் செய்க.
3. விரும்பும் திறன் கலையைக் கிளிக் செய்க.

ஆ. திறன் கலையில் படங்களை சேர்த்தல்

1. படங்களுடன் கூடிய திறன்கலையைத் தேர்ந்தெடுத்து, உங்கள் படங்களைச் சேர்க்கவும்.
2. உரையைத் தேர்வு செய்க.
3. Home >Convert to Smart Art தேர்வு செய்க.
4. More Smart Art Graphics – தேர்வு செய்த பின் Picture – தேர்வு செய்க.
5. தேவையான திறன்கலைகளைத் தேர்ந்தெடுத்து OK – கிளிக் செய்க.
6. படங்களைச் செருக, படம் சேர்க்க வேண்டிய இடத்தினைத் தேர்வு செய்து, Picture குறும்படத்தைக், கிளிக் செய்க.
7. Insert – தேர்வு செய்க.

6. ஊடகம் (MEDIA)

அ. காணொலியைச் (Video) சேர்த்தல்

1. Normal View – ல் காணொலியை (Video) சேர்க்க விரும்பும் சில்லுவின் மீது கிளிக் செய்க.

2. Insert > Video – கீழே அம்பு குறியை கிளிக் செய்து Video on my PC –யைக் கிளிக் செய்க.
3. Insert Video Box – ல் இணைக்க விரும்பும் கோப்பினைக் (file) கிளிக் செய்து Insert பொத்தானுக்கு அருகில் உள்ள கீழ் அம்புகுறியைக் கிளிக் செய்த பின் Link to file – யைக் கிளிக் செய்க.



ஆ. கேட்பொலி (Audio) சேர்த்தல்

கேட்பொலி பதிவு (Record Audio):

1. Insert > Audio தேர்வு செய்க.
2. Record Audio தேர்வு செய்க.
3. கேட்பொலி கோப்பின் பெயரை தட்டச்சு செய்த பின் Record – தேர்வு செய்து பேசவும்.
4. பதிவை மறு ஆய்வு செய்ய, Stop – தேர்வு செய்து பின் Play – தேர்வு செய்க.
5. Record – யை தேர்வு செய்து மீண்டும் பதிவு செய்யலாம். அல்லது திருப்தி அடைந்தால் OK – வை தேர்வு செய்க.
6. சில்லுவில் விரும்பும் இடத்தில் காணொலியை நகர்த்த , கேட்பொலி குறும்படத்தினை (Audio icon) கிளிக் செய்து இழுத்து விடவும்.

   நீங்கள் சில்லுவில் ஒன்றுக்கும் மேற்பட்ட கேட்பொலி கோப்பைப் பயன்படுத்துகிறீர்கள் என்றால், அதை எளிதாக கண்டறிய சில்லுவில் கேட்பொலி குறும்படத்தை(Audio icon) அதே இடத்தில் வைக்க பரிந்துரைக்கப்படுகிறது.
7. Play – விருப்பத்தை தேர்வு செய்க

Powerpoint நிகழ்த்துதலில் கேட்பொலியைச் சேர்த்தல், நீக்குதல்

Power point நிகழ்த்துதலில் இசை, கதை மற்றும் ஒலித் துணுக்குகள் போன்ற கேட்பொலிகளைச் சேர்க்கலாம். கேட்பொலியைக் கேட்க மற்றும் பதிவு செய்ய ஒலி அட்டை (Sound Card), நுண் ஒலிப்பேசி (Micro Phone), ஒலிப் பெருக்கி (Speakers) போன்றவற்றுடன் உங்கள் கணினி நவீன மயமாக்கபட்டிருக்க வேண்டும்.

கணினியிலிருந்து கேட்பொலியைச் சேர்த்தல்

1. Insert > Audio தேர்வு செய்க.
2. Audio on my PC – தேர்வு செய்க.
3. Insert Audio உரையாடல் பெட்டியில் சேர்க்க விரும்பும் கேட்பொலி கோப்பை தேர்வு செய்க.
4. Insert – விருப்பத்தைத் தேர்வு செய்க.

கேட்பொலியை அழித்தல்

1. கேட்பொலி துணுக்குகளை அழிக்க, கேட்பொலி குறும்படத்தைக் கிளிக் செய்து Delete சாவியை அழுத்தவும்.

இ. கேட்பொலி பின்னணி விருப்பங்களை மாற்றுதல்

கேட்பொலி குறும்படத்தைத் தேர்வு செய்தபின் Audio Tools Playback தேர்வு செய்க. பின்பு பயன்படுத்த விரும்பும் விருப்பத்தினைத் தேர்வு செய்க.

- கேட்பொலி ஒழுங்கமைக்க, TRIM – யை தேர்ந்தெடுத்து சிவப்பு மற்றும் பச்சை நழுவிகளைப் (Sliders) பயன்படுத்தி கேட்பொலி கோப்பை அதற்கேற்ப ஒழுங்கமைக்கவும்.
- கேட்பொலியை உள்தேய்வு (fade in) அல்லது வெளித்தேய்வு (fade out) செய்ய, Fade Duration பெட்டியில் உள்ள எண்ணிக்கையை மாற்றியிடவும்.
- ஒலியளவை (Volume) சரி செய்ய, Volume– யைத் தேர்ந்தெடுத்து நீங்கள் விரும்பும் அமைப்பைத் தேர்ந்தெடுக்கவும்.

- கேட்பொலிக் கோப்பு எவ்வாறு தொடங்குகிறது என்பதைத் தேர்வு செய்ய, கீழ் தோன்றும் அம்புக் குறியை தேர்ந்தெடுத்து பின்வரும் ஏதேனும் ஒரு விருப்பத்தை தேர்ந்தெடுக்கவும்.
- **Click Sequence :** ஒரு கிளிக்கில் கேட்பொலி தானாக இயங்குதல்
  1. Automatically : கேட்பொலி கோப்பு இருக்கும் சில்லுவிற்கு நீங்கள் முன்னேறியதும் கேட்பொலி தானாகவே இயங்கும்.
  2. When clicked on : கேட்பொலி குறும்படத்தைக் கிளிக் செய்தால் மட்டுமே கேட்பொலி இயங்கும்.
- நிகழ்த்துதலில் கேட்பொலி எவ்வாறு இயங்க வேண்டும் என்பதைத் தேர்வு செய்ய, பின்வரும் ஏதேனும் ஒரு விருப்பத்தை தேர்ந்தெடுக்கவும்.
  1. Play Across Slides : அனைத்து சில்லுகளிலும் ஒரே ஒரு கேட்பொலி கோப்பு இயங்கும்.
  2. Loop Until Stopped : Play Pause பொத்தானை கைவழி செயல்முறையாக நிறுத்தப்படும் வரை கேட்பொலி கோப்பு தொடர்ந்து இயங்கும்.
  3. பின்னணியில் உள்ள அனைத்து சில்லுகளிலும் கேட்பொலியைத் தொடர்ந்து இயக்க, Play in Background என்பதைக் கிளிக் செய்க.

7. திரைப்பதிவு (SCREEN RECORDING)

1. திரைப்பதிவு செய்ய விரும்பும் சில்லுவைத் தேர்வு செய்க.
2. Insert தொகுதியை தேர்வு செய்து Screen Recording – தேர்வு செய்க.
3. Control Dock –ல் Area –தேர்வு செய்க. (அல்லது முழு திரையையும் பதிவு செய்ய விரும்பினால் Winkey + Shift + F – கிளிக் செய்க.) இப்பொழுது + குறிதோன்றும். திரையில் விரும்பும் பகுதியின் மீது கிளிக் செய்து இழுத்து விடவும். குறைந்த பட்ச பதிவு பகுதி 64 x 64 புள்ளிகளாகும்.
4. Record – யைத் தேர்வு செய்க. தேவைப்படும் போது Pause – யையும் முடித்தபின் Stop – யையும் கிளிக் செய்க.
5. காணொலி சில்லுவில் சேர்க்கப்படும். காணொலி சட்டகத்தின் மீது வலது கிளிக் செய்து Start குறும்படத்தைக் கிளிக் செய்து எப்படி தொடங்க வேண்டும் என்பதனை Click Sequence, Automatically, அல்லது ON விருப்பங்களைத் தேர்வு செய்வதன் மூலம் முடிவு செய்யலாம்.
6. காணொலியின் தோற்றத்தை மாற்ற, காணொலி சட்டகத்தின் மீது வலது கிளிக் செய்து Style குறும்படத்தினைத் தேர்வு செய்து மற்றொரு வடிவத்தினைத் தேர்வு செய்க.

8. மீத்தொடுப்பு (HYPERLINK)

விரைவான அடிப்படை இணைய மீத்தொடுப்பை powerpoint சில்லுவில் உருவாக்க, ஏற்கனவே உள்ள வலைப்பக்கத்தின் (http.//www.contoso.com) முகவரியைத் தட்டச்சு செய்து Enter சாவியை அழுத்தவும்.

வலைப் பக்கத்தினை இணைக்கலாம் அல்லது புதிய ஆவணத்திற்கு இணைப்பை உருவாக்கலாம் அல்லது ஏற்கனவே உள்ள ஆவணத்திற்கு இணைப்பை ஏற்படுத்தலாம் அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு தகவலை அனுப்ப தொடங்கலாம்.

அ. வலைத் தளத்திற்கு இணைப்பை ஏற்படுத்துதல்

1. மீத்தொடுப்பை ஏற்படுத்த விரும்பும் உரை, வடிவம் அல்லது படத்தினைத் தேர்வு செய்க.
2. Insert > Hyperlink – தேர்வு செய்க.
3. ஏற்கனவே உள்ள கோப்பு அல்லது வலைப்பக்கத்தைத் தேர்வு செய்து பின்வருவனவற்றைச் சேர்க்கவும்.
   - **Text to display :** மீத்தொடுப்பாக தோன்ற விரும்பும் உரையைத் தட்டச்சு செய்க.

- Screen Tip : பயனர் மீத்தொடுப்பின் மீது வட்டமிடும் போது தோன்ற விரும்பும் உரையை தட்டச்சு செய்க. (கட்டாயமில்லை)
- Current Folder, Browsed pages or Recent files: எங்கு இணைப்பை ஏற்படுத்த வேண்டும் என்பதனைத் தேர்வு செய்க.
- Address : மேற்குறிப்பிட்ட இடத்தினை நீங்கள் ஏற்கனவே செய்யாவிடில் இணைப்பு ஏற்படுத்த விரும்பும் வலைப் பக்கத்தின் URL – யை உள்ளிடவும்.

  உங்கள் கணினியில் இணைப்பு ஏற்படுத்தப்பட்ட கோப்பினை மற்றொரு கணினியில் உங்களது Powerpoint நிகழ்த்துதலை நகர்த்தினால், இணைப்பு கோப்புகளையும் நகர்த்த வேண்டும்.

4. OK – வை தேர்வு செய்க.

ஆ . ஆவணம், புதிய ஆவணம் (அல்லது) மின்னஞ்சல் முகவரியில் உள்ள இடத்திற்கான இணைப்பு

1. மீத்தொடுப்பை ஏற்படுத்த விரும்பும் உரை, வடிவம் அல்லது படத்தினைத் தேர்வு செய்க.
2. Insert >Hyperlink – யை தேர்வு செய்து பின்வரும் விருப்பங்களைத் தேர்வு செய்க.
   - Place in this Document : நிகழ்த்துதலில் குறிப்பிட்ட சில்லுவிற்கு இணைப்பை ஏற்படுத்துதல்.
   - Create New Document: ஒரு நிகழ்த்துதலில் இருந்து மற்றொரு நிகழ்த்துதலுக்கு இணைப்பை ஏற்படுத்துதல்.
   - Email – Address : பயனரின் மின்னஞ்சல் நிரலைத் திறக்க காட்டப்படும் மின்னஞ்சல் முகவரியை இணைக்கவும்.
3. Text to Display, Screen Tip, எங்கு இணைக்க விரும்புகிறீர்கள் போன்றவற்றை பூர்த்தி செய்க.
4. OK – வினை தேர்வு செய்க.

9. SAVE AS மற்றும் அதன் வகைகள்

Powerpoint – ல் உங்களுடைய திரைமுகப்பு (desktop) நிகழ்த்துதலை, உள்ளமை இயக்கி (Local drive) (மடிக்கணினி போன்றவை), வலையமைப்பு, CD, DVD அல்லது தகவல் சேமிப்பான் (Flash Drive) போன்றவற்றில் சேமிக்கலாம். மேலும் வெவ்வேறான கோப்பு வடிவங்களாகவும் சேமிக்கலாம்.

1. File தத்தலில் Save – தேர்வு செய்க.



2. பின்வருவனவற்றைச் செய்க.
   - மடிக்கணினி, உள்ளமை இயக்கி, தகவல் சேமிப்பான் ,CD, DVD இயக்கியில் சேமிக்க Computer குறும்படத்தைத் தேர்வு செய்க.
   - Computer Sharepoint Library – ல் சேமிக்க Sharepoint – யை தேர்வு செய்க.
3. Save As – க்கு கீழ் Recent Folder – ல் Browse என்பதைத் தேர்வு செய்து சேமிக்கும் இடம் மற்றும் கோப்புறையைத் தேர்வு செய்து பின்னர் கோப்பின் பெயரைத் தட்டச்சு செய்க.
4. Save – பொத்தானைக் கிளிக் செய்க.

நிகழ்த்துதல் கோப்பினை பல்வேறு கோப்பு வடிவங்களில் சேமித்தல்

1. **File> Save As** – தேர்வு செய்க.
2. Save As – க்கு கீழே கீழ்க்கண்டவற்றில் ஒன்றினை செய்க
3. Recent Folder – க்கு கீழே **Browse** – தேர்வு செய்து சேமிக்கும் இடம் மற்றும் கோப்புறையைத் தேர்வு செய்து பின் கோப்பின் பெயரைத் தட்டச்சு செய்க
4. Save As வகை பெட்டியில் சேமிக்கப்பட வேண்டிய கோப்பு வடிவத்தைத் தேர்வு செய்க.
5. **Save** – பொத்தானைக் கிளிக் செய்க.
6. **File > Save As** – கிளிக் செய்வதன் மூலம் கீழ்காணும் பல்வேறு கோப்பு வடிவங்களில் ஒன்றினை தேர்வு செய்யலாம்.
7. தானமைவாக கோப்பு வடிவம் Powerpoint version 2007 – அல்லது புதிய பதிப்பான .pptx ல் என சேமிக்கப்படும்.

கோப்புவகை	நீட்டிப்பு	சேமிக்க பயன்படுத்தப்படுவது
Power Point நிகழ்த்துதல்	.pptx	Powerpoint 2007 மற்றும் புதிய பதிப்புகளில் நிகழ்த்துதலைக் கணினியில் திறக்கலாம். Powerpoint 2008 – லும் புதிய பதிப்புகளிலும் Mac லும் திறக்கலாம். Power Point 2003 பதிப்பு நிறுவப்பட்ட எந்த ஒரு கைப்பேசி சாதனத்திலும் நிகழ்த்துதலை திறக்கலாம்.
Powerpoint 97 –2003 நிகழ்த்துதல்	.ppt	Powerpoint 97 – பதிப்பு முதல் Office Powerpoint 2003 பதிப்பு வரை திறக்கலாம்.
PDF Document Format	.pdf	Adobe system ஆல் உருவாக்கப்பட்ட பின்னுரை (PostScript) அடிப்படையிலான மின்னணு கோப்பு வடிவமானது ஆவண வடிவமைப்புகளை பாதுகாப்பாக வைக்கிறது மற்றும் கோப்பு பகிர்வை ஆதரிக்கிறது.
XPS Document Format	.xps	புதிய மின்னணு காகித வடிவிலான ஆவணங்களை அதன் இறுதி வடிவத்திற்கு மாற்றிடுவதை ஆதரிக்கிறது.
MPEG – 4 Video	.mp4	நிகழ்த்துதல் காணொலியாக சேமிக்கப்படுகிறது. Windows Media Player – போன்ற ஊடக இயக்கிகளில் MP4 வடிவம் இயக்கப்படுகிறது.
JPEG (Joint Photographic Experts groups) கோப்பு வடிவம்	.jpg	வலைப்பக்கங்களில் பயன்படுத்தவதற்கான வரைகலை சில்லுவாகும். JPEG கோப்பு வடிவம் 16 மில்லியன் நிறங்களை ஆதரிக்கிறது மற்றும் புகைப்படங்கள் மற்றும் சிக்கலான வரைபடங்களுக்கு பொருத்தமானதாக உள்ளது,
PNG (Portable Network Graphics) வடிவம்	.png	வலைப் பக்கங்களுக்காக வரைபடமாக சில்லுவானது சேமிக்கப்படுவது. World Wide Web Consortium (W3C) நிலையானதாக GIF – க்கு மாற்று தர நிலையாக PNG–யை அனுமதித்துள்ளது. GIF போல் இல்லாமல் PNG அசைவூட்டலை ஆதரிக்காது மற்றும் சில பழைய உலவிகள் (Browsers) இந்த கோப்பு வடிவினை ஆதரிக்காது. PNG வெளிப்படையான பின்னணிகளை ஆதரிக்கிறது.
Power Point பட நிகழ்த்துதல்	.pptx	Power Point – ன் ஒவ்வொரு நிகழ்த்துதலும் படமாக மாற்றப்படும். Power Point படமாக நிகழ்த்துதல் சேமிக்கப்படும்போது கோப்பின் அளவானது குறைக்கப்படும். ஆனால் சில தகவல்கள் தொலைந்துவிடும்.

செயல்பாடு 1

தங்கள் பள்ளி ஆண்டுவிழா மற்றும் விளையாட்டு விழாவிற்கான அழைப்பிதழை தயாரிக்கவும்.

4.4 G – தொகுப்பு (SUITE)

அறிமுகம்

Gmail, Meet, Chat, Calendar, Drive, Docs, Sheets, Slides, Forms, Sites, Keep, Apps Script ஆகியவற்றை உள்ளடக்கியது G – தொகுப்பு, அவற்றை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

Google ஆவணம் (Google Docs)

Google Docs என்பது பல வகையான சாதனங்களில் பல பயனர்களால் பயன்படுத்தக்கூடிய கூட்டு சொற்செயலாக்க நிரலாகும். வரைகலை (Graphic) கூறுகள் மற்றும் பக்க எண்களைச் சேர்த்தல் உட்பட எவ்வாறு ஒரு Google docs யில் பதிப்பித்தல் மற்றும் வடிவமைத்தல் செய்வது என்பதைப் பற்றி இந்த பகுதியில் கற்றுக்கொள்ளப் போகிறோம். கூடுதலாக, உரையை வடிவமைக்கவும், அட்டவணையில் உள்ளடக்கத்தை உருவாக்கவும், பாணிகளை (style) எவ்வாறு பயன்படுத்துவது என்பதை ஆராயவும், ஆவணத்தை Microsoft Word கோப்பாக அச்சிட்டு, சேமிப்பது பற்றியும் விவாதிப்போம்.

Google Docs– யைத் திறத்தல்

1. Google – யை IU பக்கத்தில் அணுக, உங்களது உலவி முகவரிப் பட்டையில் http://google.in.edu என்பதைத் தட்டச்சு செய்து, Enter பொத்தானைக் கிளிக் செய்யவும்.
2. IU பக்கத்தில், Google – ன் உள் நுழையும் திரையைத் திறப்பதற்கு Log into Google at IU என்பதைக் கிளிக் செய்யவும்

3. IU பக்கத்தில், Google – ல் Google Docs – யைத் திறப்பதற்கு Docs குறும்படத்தைக் கிளிக் செய்யவும்.



ஆவணத்தின் மேல் இடது ஓரத்தில் இருப்பது ஆவணத்தின் பெயராகும் – Copy of Google Docs : The basics – Introducing Google Docs. ஆவணத்தின் பெயருக்கு கீழே இருப்பது பட்டிப்பட்டை. இது File. Edit மற்றும் Insert போன்ற பட்டி உருப்படிகளைக் (items) கொண்டுள்ளது. பட்டிப்பட்டையின் கீழே இருப்பது கருவிப்பட்டை ஆகும். இது கருவிகளைக் குறிக்கும் சிறிய பொத்தான்களைக் கொண்டுள்ளது.

GOOGLE தாள்கள் (GOOGLE SHEETS)

மின்னணு சந்தைப்படுத்துபவர்களுக்கு (Marketers) விரித்தாள்கள் மிகவும் அவசியமானது. ஆனால், அனைத்து சந்தைப்படுத்துபவர்களுக்கும் Google Sheets போன்ற அடிப்படைக் கருவிகளை அவர்களின்



www.tnschoolbooks.in



முழு நன்மைக்காக எவ்வாறு பயன்படுத்துவது என்பது தெரியாது. அதன் அம்சங்கள் பின்வருமாறு :

- புதிய விரித்தாளை Google Drive – ல் உருவாக்குதல்
- பிற கோப்பு வகைகளை மாற்றி Google Sheets – ல் இறக்குமதி செய்தல்.
- தனிப்பட்ட விரித்தாள்களை ஒற்றை Google Sheets கோப்பில் ஒழுங்கமைத்தல்.
- உலவுதல் (Navigate) மற்றும் தரவை ஒழுங்கமைத்தல்: நெடுவரிசை மற்றும் வரிசை
- தரவு தளத்தை உருவாக்குதல்
- மிகவும் பயனுள்ள குறுக்கு வழிகள், உலவுதல் மற்றும் தேர்ந்தெடுப்பு குறுக்கு விசைகள்
- தரவு மற்றும் நுண்ணறைகளை வடிவமைத்தல்
- Google Sheets – ன் அடிப்படை அமைப்பு அம்சங்கள்
- Google Sheets –ல் கணக்கீடுகள் மற்றும் தரவு பகுப்பாய்வு
- ஒருங்கிணைந்து செயல்பட கருத்துகள் மற்றும் குறிப்புகளைப் பயன்படுத்துதல்.
- விரித்தாளைப் பதிவிறக்கம் செய்தல்
- விரித்தாளை மற்றவர்களுடன் பகிர்தல்

GOOGLE சில்லுகள்

நிகழ்த்துதலை உருவாக்குதல்

ஒரு புதிய நிகழ்த்துதலை உருவாக்க:

1. Slides.google.com – க்கு சென்று சில்லுவின் முகப்புதிரையைத் திறக்கவும்.
2. மேல் இடது ஓரத்தில் "Start a new presentation" கீழ் "New + " என்பதைக் கிளிக் செய்யவும். இது புதிய நிகழ்த்துதலை உருவாக்கி அதனை திறக்கிறது.

நீங்கள் ஒரு புதிய நிகழ்த்துதலை https://slides/google.com/create என்னும் URL – யைப் பயன்படுத்தியும் உருவாக்கலாம்.

நிகழ்த்துதலைப் பதிப்பித்தல் மற்றும் வடிவமைத்தல்

நிகழ்த்துதலில் உள்ள உரை, நிழற்படங்கள் அல்லது காணொலிகளை உங்களால் சேர்க்க, பதிப்பிக்க அல்லது வடிவமைக்க முடியும்.

- உரை, வடிவங்கள் மற்றும் வரிகளைச் சேர்த்தல் மற்றும் சீரமைத்தல்



- சில்லுகளைச் சேர்த்தல், நீக்குதல் மற்றும் ஒழுங்கமைத்தல்
- சில்லுவிற்கு அசைவூட்டலைச் சேர்த்தல்
- மற்றவர்களோடு பகிர்ந்து வேலை செய்தல்

கோப்புகள் மற்றும் கோப்புறைகளை மற்றவர்களோடு பகிர்ந்து View, Edit Comment ஆகியவற்றுள் அவர்கள் எதை செய்ய முடியும் என்று தேர்ந்தெடுக்கலாம்.

GOOGLE படிவம் (GOOGLE FORMS)

Google படிவம் என்பது Google பணித்தளத்தின் ஒரு பகுதியான இலவச ஆய்வு கருவியாகும். இந்த Office தொகுதியில் மற்ற பிற சிறந்த அம்சங்களுடன் இது Google தாள்கள் (Excel) , ஆவணங்கள் (word) மற்றும் சில்லுகள் (Power point) ஆகியவற்றையும் உள்ளடக்கியது.



Google படிவத்தின் சிறந்த அம்சங்களுள் ஒன்று வினாடிவினா அல்லது ஆய்வு அறிக்கையை உருவாக்கி, பிறகு விரித்தாளுடன் இணைப்பதாகும். இணைத்தப்பின், உங்கள் படிவத்தைப் பெறுபவரின் எந்த பதிலும் தானாகவே இந்த விரித்தாள் பதிலிலும் தோன்றும்.

Google படிவத்தை தனிப் பயனாக்குவது (Personalize) எவ்வாறு

உங்களது புதிய படிவத்தைத் தனிப் பயனாக்க தனித்துவமான அழகாக்கம் (Theme), பின்னணி வண்ணம் மற்றும் நிழற் படம் ஆகியவற்றைத் தேர்ந்தெடுக்கலாம். இவற்றை ஒரே ஒரு கிளிக் மூலம் Google படிவங்கள் செய்கிறது. படிவத்தின் மிக முக்கிய பகுதி தலைப்புபடம் ஆகும். தலைப்புகள் எப்பொழுதும் கண்ணைக் கவரும் வண்ணம் மற்றும் கவர்ந்திழுக்கும்படியும் இருக்க வேண்டும்.

Google படிவங்களுக்காக கருப்பொருளைத் தனிப் பயனாக்குவது ஒரு வலுவான தொகுதி கிடையாது. இருப்பினும், Google படிவங்கள் வழங்கும் மற்ற அனைத்தும் இந்த குறையை ஈடுசெய்கிறது.

வினாக்களின் வகைகள்

- குறுவினா : பதில்கள் சில வார்த்தைகளில் மட்டுமே இருத்தல் வேண்டும்.
- பத்தி: இந்த வகை கேள்விகளுக்கு பதில்கள் நீண்ட வடிவத்தில் இருத்தல் வேண்டும். பெரும்பாலும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பத்திகள்.
- பல தேர்வு : கொடுக்கப்பட்டுள்ள விருப்பத் தேர்வுகளுள் பதில்களைத் தேர்ந்தெடுத்தல் (ஒரு கேள்விக்கு ஒரு பதில்)
- தேர்வுப் பெட்டிகள் (Check box): பதில்களுக்கு தேர்ந்தெடுத்தல் குறியையிடவும். ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பதில்களைத் தேர்ந்தெடுக்கலாம். குறுவினாவிற்கு "Other" விருப்பத்தைத் தேர்ந்தெடுக்கவும்.
- கீழ் – விரி பட்டி : (Drop – down) : பதிலளிப்பவர் கீழ் – விரிப்பட்டியலிலுள்ள விருப்பங்களிலிருந்து பதிலைத் தேர்ந்தெடுத்தல்.
- கோப்பு பதிவேற்றம் (File upload) : Google drive – வில் இருந்து கேள்விக்கான பதில்தாள் படிவம் அடங்கிய கோப்பினை, பதிலளிப்பவர் பதிவேற்றம் செய்ய இது அனுமதிக்கிறது.
- நேரியல் அளவுகோல் (Linear Scale) : மக்கள் உங்கள் கேள்வியை 0 – 10 அளவில் மதிப்பிடலாம்.
- பல தேர்வு கட்டம் (Multiple Choice Grid) : பதிலளிப்பவர் ஒரு வரிசைக்கு ஒரு பதிலைத் தேர்ந்தெடுக்கும் விருப்பத்தேர்வை இது வழங்குகிறது.
- தேர்வுப் பெட்டி கட்டம் (Checkbox Grid) : மக்கள், ஒரு வரிசைக்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பதில்களைத் தேர்ந்தெடுக்க அனுமதிக்கிறது.
- தேதி (Date) : இதற்கான பதில்களைத் தேதி வடிவமைப்பில் கொடுக்கப்பட வேண்டும்.
- நேரம் (Time) : இதற்கு பதிலளிப்பவர் அந்த நாளின் நேரத்தைக் குறிப்பிட வேண்டும்.

Google படிவ பயிற்சியுடன் வினாக்களைச் சேர்த்தல் எளிது

Google படிவம் ஒருவர்க்கு தேவையான பல வினாக்களை அல்லது பிரிவுகளைச் சேர்ப்பதை எளிதாக்குகிறது. அதிக வினாக்கள் தேவைப்படின் + பொத்தானைக் கிளிக் செய்யவும். தனி வினாக்களுக்கு மற்றொரு பிரிவைச் சேர்க்க சமக்குறிப் (=) போன்று தோன்றும் குறும்படத்தைக் கிளிக் செய்யவும்.

சிக்கலற்ற (Hassle free) வினாடி வினா உருவாக்குதல்

தரவரிசைப்படுத்துதல், முடிவுகளை அனுப்புதல் (கிடைத்தல்) மற்றும் பதில்களைப் பயனரிடமிருந்து திரட்டுதல் போன்றவற்றைத் தானாகவே செய்யும் மின்னணு வினாக்ககளை உருவாக்க Google படிவங்களைப் பயன்படுத்தலாம். திரையின் மேல் பகுதியிலுள்ள 'Settings' – யைக் கிளிக் செய்யவும்(சக்கர குறும்படம்). பிறகு, 'Quizzes' ஐக் கிளிக் செய்து "Make this a Quiz" என மாற்றவும். வினாடிவினா முடிந்த பிறகு 'Save' பொத்தானைக் கிளிக் செய்யவும்.

வினா வகைகளை மாற்ற "Edit Questions" பொத்தானைக் கிளிக் செய்யவும்.

Google படிவத்தில் மற்றவர்களுடன் ஒத்துழைத்தல்

பிற Google பணித்தளம் / G – தொகுதி பயன்பாடுகள் போல, Google படிவம் ஒரு கூட்டு ஆய்வு கட்டமைப்பு ஆகும். ஆவணத்தின் மேல்பகுதியிலுள்ள மூன்று புள்ளிகளைக் கிளிக் செய்து, பிறகு "Add Collaborators" என்பதைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் ஒரே கோப்பில் வேலை செய்ய உங்களது நண்பர்களை அழைக்கலாம்.

அடுத்த படிநிலையில், உங்களது Google படிவ கணக்கை யார் அணுக வேண்டும் என்பதை நீங்கள் கட்டுப்படுத்தலாம். " On Anyone with the link" தேர்வைத் தேர்வு செய்து, பகிரக் கூடிய இணைப்பை (link) உருவாக்கவும். இந்த இணைப்பு பெற்ற எவரும் உங்களது படிவத்தை அணுக முடியும். மற்றவர்களுடன் படிவத்தைப் பகிர்தல், நகலெடுத்து ஒட்டுவதைப் போல எளிதானதாகும். அவர்கள் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் படிவத்தை அணுகலாம்.

செயல்பாடு 1

20 மதிப்பெண் மாதிரி வினாத்தாள் ஒன்றினை Google–படிவம்(Forms) மூலம் உருவாக்குதல்.

4.5 தகவல் தொழில் நுட்பத்தின் எதிர்காலம் (IT)

அறிமுகம்

சமீபத்திய தொழில் நுட்பங்கள் பற்றி இந்த பாடத்தில் விளக்கப்பட்டுள்ளது.

1. செயற்கை நுண்ணறிவு (ARTIFICIAL INTELLIGENCE)

செயற்கை நுண்ணறிவு என்பது கணினியில் பல்வேறு தரவு வடிவங்கள் மற்றும் நுட்பங்களைக் கற்றுக் கொள்வதன் மூலம் மனித நடத்தையைப் பிரதிபலிக்கும் ஒரு நிரலாகும். AI மென்பொருளைக் கொண்டு சேதமானவற்றில் இருந்து புதிதாக திறமையான பயன்பாட்டை உருவாக்கி கட்டமைக்கலாம்.

செயற்கை நுண்ணறிவு பயன்பாடுகள் (Applications)

AI பயன்பாடுகளில் மேம்பட்ட வலை தேடுப்பொறி (எ.கா – Google), பரிந்துரை அமைப்புகள் (Youtube, Amazon மற்றும் Netflix போன்றவை), மனித மொழியைப் புரிந்து கொள்ளுதல் (Siri மற்றும் Alexa), மகிழ்வுந்தை சுயமாக இயக்குதல் (எ.கா. Tesla) சதுரங்கம் போன்ற செயல்திறன் விளையாட்டு அமைப்புகளில் மிக உயர்ந்த மட்டத்தில் தானாக முடிவெடுத்து போட்டியிடுவது போன்றவை அடங்கும்.

குறிப்பிட்ட தொழில்துறைகளில் அல்லது நிறுவனங்களில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்க, ஆயிரக்கணக்கான வெற்றியடைந்த AI பயன்பாடுகள் பயன்படுத்தப்படுகின்றன. சில எடுத்துக்காட்டுகள் – ஆற்றல் சேமிப்பு,ஆழ்ந்த போலிகள், மருத்துவ நோய் கண்டறிதல், இராணுவ தளவாடங்கள் அல்லது விநியோக சங்கிலி மேலாண்மை போன்றவை.

செயற்கை நுண்ணறிவு மென்பொருளின் வகைகள்

1. செயற்கை நுண்ணறிவு தளங்கள் – சேதமானவற்றில் இருந்து புதிதாக ஒரு பயன்பாட்டை உருவாக்க ஒரு வாய்ப்பை (தளத்தை) வழங்குகிறது. உள்ளமைந்த நூலகத்தில் பல நெறிமுறைகள் (Algorithms) வழங்கப்பட்டுள்ளன.
2. தானியங்கி உரையாடல் செயலி (Chatbots) – இந்த மென்பொருள் ஒரு நபர் உரையாடல் செய்வது போன்ற விளைவைக் கொடுக்கும்.
3. ஆழ்ந்த கற்றல் மென்பொருள் (Deep learning software) – படம், குரல் மற்றும் அங்கீகாரத்தின் பிற வடிவங்களைக் கொண்டது.
4. கணினி கற்றல் மென்பொருள் (Machine learning Software) – கணினி கற்றல் மூலம் கணினி தரவைப் பயன்படுத்திக் கற்பதாகும்.

2. தரவு அறிவியல் (DATA SCIENCE)

தரவு அறிவியல் என்பது பல தரப்பட்ட மற்றும் கட்டமைக்கப்படாத தரவு தொகுப்பிலிருந்து, தகவல்களைப் பிரித்தெடுத்து பெறுவதற்காக புள்ளியியல், நிரல்கள், நெறிமுறைகள், செயற்கை நுண்ணறிவு மற்றும் ஆழ்ந்த கற்றல் ஆகியவற்றின் கலவையைப் பயன்படுத்தும் ஒரு களம் (Field) ஆகும். ஒரு தரவு அறிவியல் திட்டத்திலிருந்து (Project) நுண்ணறிவுகளை உருவாக்க, நிரலாக்க குறியீட்டை உருவாக்கி அதை புள்ளியியல் அறிவுடன் இணைக்கும் ஒருவர் தரவு விஞ்ஞானி என்று அழைக்கப்படுகிறார்.

3. கணினி கற்றல் (MACHINE LEARNING)

கணினி கற்றல் என்பது கணினிகளுக்கு முந்தைய சூழ்நிலையில் இருந்து கற்றுக் கொள்ளும் திறனை வழங்கும் ஒரு ஆய்வுத் துறை என்றும் அனுபவத்திலிருந்து கற்றுக் கொள்ளும் நிரலை கணினி கற்றல் நிரல் என்றும் அழைக்கப்படுகிறது. மின்னஞ்சல் வடிகட்டல், குரல் அங்கீகாரம் மற்றும் மருத்துவம் போன்ற பலவகை பயன்பாடுகளில் கணினி கற்றல் நிரல் பயன்படுகிறது.

கணினி கற்றலின் பயன்பாடுகள்

1. வலை தேடுபொறி: Google மற்றும் Firefox போன்ற தேடுபொறிகள் சிக்கலான கற்றல்நெறிமுறையைப் பயன்படுத்தி பக்கங்களை எவ்வாறு தரவரிசைப்படுத்துவது என்பதைக் கணினி கற்றல் மூலம் சிறப்பாகச் செயல்படுத்துகின்றன.
2. குப்பை மின்னஞ்சல் கண்டுபிடிப்பி (Email Spam detector): மின்னஞ்சல் சேவை வழங்குநர் உள்வருகின்றமின்னஞ்சலைப் பிரித்து, குப்பை மின்னஞ்சலைக் குப்பை கோப்புறைக்கு தள்ளிவிடும்.
3. நிழற்படம் அங்கீகாரம் (Image Recognition): கணினி கற்றலின் பொதுவான முக்கிய பயன்பாடுகளில்ஒன்றுநிழற்படஅங்கீகாரம் ஆகும். பொருள்கள், நபர்கள், இடங்கள், இலக்க நிழற்படங்கள் போன்றவைகளை அடையாளம் காண இது உதவுகிறது.

4. பொருட்களின் இணையம் IOT (INTERNET OF THINGS)

இணைய சாதனங்கள் என்பது உணர் கருவிகள் (Sensor) கொண்ட சாதனங்கள், செயல்படுத்தும் திறன், மென் பொருள் மற்றும் இணைத்தின் மூலம் பிற சாதனங்களைக் கணினியோடு இணைத்து, தரவைப் பரிமாற்றம் செய்யும் பிற தொழில்நுட்பங்களை விளக்கும் ஒரு சொற் கூறு ஆகும். ஒரு IOT சூழ்நிலைத்தொகுப்பானது செயலிகள் (Processors), உணர்கருவிகள் மற்றும் தொலைதொடர்பு வன்பொருள்கள் போன்ற அமைப்பைப் பயன்படுத்தும் திறன் சாதனங்களைக் கொண்டுள்ளது. தரவைச் சேகரித்து அனுப்ப தனது சூழ்நிலையில் இருந்து பெறுகிறது. தரவு சேகரித்தல் செயலை எளிதாக்கவும், அதிக இயக்கத்திற்கும் உதவுவதற்கு IOT செயற்கை நுண்ணறிவு மற்றும் கணினி கற்றலைப் பயன்படுத்துகிறது.

பொருட்களின் இணைத்தின் பயன்பாடுகள் :

திறன்மிக்க வீடு (Smart Home) – IOT சாதனங்கள் தானியங்கு வீடு கருத்தின் ஒரு பகுதியாகும் . இது ஒளிரூட்டுதல், வெப்ப மூட்டுதல் மற்றும் குளிரூட்டுதல், ஊடகம் மற்றும் பாதுகாப்பு அமைப்புகள், புகைப்படக் கருவி அமைப்புகள் போன்ற சாதனங்களை உள்ளடக்கியது.

மருத்துவம் மற்றும் சுகாதாரம் – இணைய மருத்துவ சாதனங்கள் என்பது மருத்துவம் மற்றும் சுகாதாரம் தொடர்புடைய நோக்கங்கள், ஆராய்ச்சிக்கான தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு மற்றும் தொடர் கண்காணித்தல் ஆகியவற்றிற்கான IOT – ன் பயன்பாடாகும். மின்னணு சுகாதார அமைப்பை உருவாக்குவதற்கான தொழில் நுட்பம், கிடைக்கக் கூடிய மருத்துவ வளங்களை இணைத்தல் மற்றும் சுகாதார சேவைகள் ஆகியவற்றின் காரணமாக இணைய மருத்துவ சாதனங்களை 'திறன்மிக்க சுகாதாரம்' (Smart Healthcare) என்று குறிக்கப்படுகிறது.

போக்குவரத்து – பல்வேறு போக்குவரத்து அமைப்புகள் முழுவதிலும் தகவல்தொடர்வை ஒருங்கிணைக்க, கட்டுப்படுத்த மற்றும் தகவலைச் செயலாக்கம் செய்ய IOT உதவுகிறது.

5. தரவுப் பகுப்புமுறை (DATA ANALYTICS)

தரவுப் பகுப்புமுறை என்பது தரவின் அனைத்து பயன்களையும் ஆதரிக்க தரவை நிர்வகிக்கும் வழிகள் மற்றும் தீர்மானம், வணிக செயலாக்கம் மற்றும் புதிய வணிக ஆபத்து மற்றும் வாய்ப்புகளைக் கண்டறிதல் போன்ற விளைவுகளை மேம்பட்டதாக உருவாக்க தரவை பகுப்பாய்வு செய்தல் ஆகும்.

தரவுப் பகுப்புமுறை குறிப்பாக நவீன வணிகத்திற்கு முக்கியமானது ஏனெனில், இது அனைத்து வகையான தீர்மானிப்புகளின் முடிவுகளை மேம்படுத்துகிறது.

நிறுவனங்கள் தரவைப் பல வழிகளில் பயன்படுத்துகின்றன. திறன்மிக்க வணிக முடிவுகளை எடுப்பதற்கு இது பெரும்பாலும் அவர்களின் கட்டுப்பாட்டு எல்லைக்கு வெளியே உள்ள தரவை நம்பியிருக்க வேண்டியிருக்கிறது.

மின்னணு வணிக பகுப்புமுறை

மின்னணு வணிக பகுப்புமுறை என்பது வணிகங்கள் தங்கள் நடைமுறைகளை மேம்படுத்துவதற்கு வலைத்தளங்கள், கைப்பேசி பயன்பாடுகள் மற்றும் தேடுப்பொறிகள் போன்ற பல்வேறு வளங்களில் இருந்து மின்னணு தரவைப் பகுப்பாய்வு செய்யும் செயலாகும். இது பயனர்கள் அல்லது வாடிக்கையாளர்களின் நடத்தையைப் பற்றிய தெளிவான பார்வையை நிறுவனத்திற்கு வழங்குகிறது.

மின்னணு பகுப்புமுறை சேகரித்தல், அளவிடுதல், தரமான மற்றும் அதிக எண்ணிக்கையிலான தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்கு நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் கருவியாகும். சிறந்த நிகழ்நிலை அனுபவத்தை வழங்குவதற்காக தற்போதைய வணிகச் செயல்பாடுகளை மேம்படுத்தவும் மாற்றவும் தரவு பயன்படுத்தப்படுகிறது.

வணிக பகுப்புமுறையின் பயன்பாடுகள்

பெரும்பாலான வணிகத் துறைகள் மற்றும் தொழில் துறைகளில் வணிக பகுப்பாய்வு பயன்படுத்தப்பட்டாலும், மிகவும் பொதுவான பயன்பாடுகள் பின்வருமாறு :

1. நிதி – பெருநிறுவனங்கள் தங்களது வரவு – செலவுத் திட்டம் (Budgeting), வங்கி பரிவர்த்தனை, நிதி திட்டமிடல், முன்கணித்தல், தொகு முதலீடு மேலாண்மை (Portfolio Management) போன்றவற்றை மேம்படுத்த வணிக பகுப்புமுறையைப் பயன்படுத்துகின்றன.
2. மனிதவளம் – வணிகங்கள் சிறந்த ஊழியர்களைக் கொண்டவை. மனித வள மேலாளரின் பணி சிறந்த ஊழியர்களைக் கண்டுப்பிடிப்பது மட்டுமல்லாமல் அவர்களை இயக்கநிலையில் வைத்திருப்பதும் அவசியம் ஆகும். வணிக ஆய்வாளர் கல்விப் பின்னணி, ஊழியர் விலகுதல் விகிதம் (attrition rate), வேலையின் சராசரி நேரம் போன்ற உயர் செயல்திறன் கொண்ட ஊழியர்களை வகைப்படுத்தும் தரவு மூலம் இந்த செய்லமுறைக்கு உதவுகிறார்.
3. உற்பத்தி – வணிக ஆய்வாளர்கள் தரவுகளுடன் பணியாற்றி, செயல்பாடுகள் மற்றும் அடிமட்ட நிலையைப் பாதிக்கும் விஷயங்களைப் பங்குதாரர்கள் புரிந்து கொள்ள உதவுகிறார்கள். கருவிகள் செயலிழப்பு, பொருள் இருப்புநிலை மற்றும் பராமரிப்பு செலவுகள் போன்ற விஷயங்களைக் கண்டறிவதன் மூலம் அதிகபட்ச செயல்திறனை உருவாக்க பொருள் இருப்பு மேலாண்மை, அபாயங்கள், விநியோக சங்கிலி மேலாண்மை ஆகியவற்றை சீரமைப்பு செய்து நிறுவனங்களுக்கு உதவுகிறது.

6. தேடுப்பொறி மேம்படுத்தல்

தேடுப்பொறி மேம்படுத்தல் என்பது Google, Firefox மற்றும் பிற தேடுப்பொறிகளில்

வணிகம் தொடர்பான பொருள்கள் அல்லது சேவைகளை மக்கள் தேடும்பொழுது, மேம்படுத்தப்பட்ட வலைத்தளத்தின் காட்சி நிலையை அதிகரிக்க செய்யும் செயல் ஆகும். தேடல் முடிவுகளில் வலைப்பக்கங்களின் சிறந்த காட்சி நிலையானது, கவனத்தை ஈர்த்து, வணிகத்திற்காக வருங்கால மற்றும் நிகழ்கால வாடிக்கையாளர்களைப் பெரிதும் கவர்வதற்கு வாய்ப்பு அதிகம் உள்ளது.

வலைதளத்தில் பக்கங்களுக்கு இடையே வலம் வருவதற்க்கும், ஒரு தளத்தில் இருந்து மற்றொரு தளத்திற்கு செல்வதற்க்கும், அந்த பக்கங்களைப் பற்றிய தகவல்களை சேகரித்து, அவற்றை வரிசைப்படுத்தவும் தேடுபொறிகள் செய்திறன்பொறிகளைப் (bots) பயன்படுத்துகின்றன.

7. முகில் கணினியம் (CLOUD COMPUTING)

முகில் கணினியம் (Cloud computing) என்பது வேகமான கண்டுப்பிடிப்பு, நெகிழ்வான வளங்கள் மற்றும் பொருளாதாரங்களின் அளவு போன்றவற்றை வழங்குவதற்கு சேவையகங்கள், சேமிப்பகம், தரவுத் தளங்கள், வலையமைப்பு, மென்பொருள், பகுப்பு முறை மற்றும் நுண்ணறிவு ஆகிய கணினிச் சேவைகளை இணையம் மூலம் விநியோகிப்பது ஆகும். நீங்கள் பயன்படுத்தும் முகில் கணினிய சேவைகளுக்கு மட்டுமே பணம் செலுத்துகிறீர்கள். இது இயக்கச் செலவுகளைக் குறைக்கவும், உள் கட்டமைப்பை மிகவும் திறமையாக இயக்குவதற்க்கும், வணிகத் தேவைகள் மாறும்போது அளவிடவும் உதவுகிறது. பாரம்பரிய வழி வணிகங்களான தகவல் தொழில் நுட்ப வளங்களைப் பற்றி சிந்திக்கும் போது முகில் கணினியம் ஒரு பெரிய மாற்றமாகும்.

முகில் கணினிய பயன்பாடுகள்

1. முகில் கணினியம் சார்ந்த பயன்பாடுகளை உருவாக்குதல் – வலை, கைப்பேசி மற்றும் API போன்ற பயன்பாடுகளை விரைவாக உருவாக்கவும், வரிசைப்படுத்தவும் அளவிடவும் பயன்படுகிறது. கொள்கலன்கள் (Containers), குபர்னெட்ஸ் (Kubernetes), நுண்சேவைகள் கட்டமைப்பு, API – இயக்க தொடர்பு மற்றும் DevOps போன்ற முகில் கணினியம் சார்ந்த தொழில் நுட்பங்கள் மற்றும் அணுகும் முறைகளின் பயன்பாட்டைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
2. பயன்பாட்டைச் சோதித்து, உருவாக்குதல் – அதிகரித்து அல்லது குறைத்து எளிதாக அளவிடப்படும் முகில் கணினியம் உள்கட்டமைப்புகளைப் பயன்படுத்தி, பயன்பாட்டிற்கான செலவு மற்றும் நேரத்தைக் குறைக்கலாம்.
3. தரவு சேமித்தல், காப்பு பிரதி எடுத்தல் மற்றும் மீட்டெடுத்தல் – எந்த இடத்திலிருந்தும் எந்த சாதனத்திலிருந்தும் இணையத்திற்கு வெளியேயும் அணுகக் கூடிய முகில் கணினி சேமிப்பு அமைப்பிற்கு தரவை மாற்றுவதன் மூலம் குறைந்த விலை மதிப்பில் பெரிய அளவிலான தரவை பாதுகாக்க முடியும்.
4. தரவு பகுப்பாய்வு முகில் கணினியத்தில் உள்ள குழுக்கள், பிரிவுகள் மற்றும் இருப்பிடங்கள் முழுவதும் தரவை ஒருங்கிணைக்கவும். மேலும் கற்றறிந்த முடிவுகளுக்கான மதி நுட்பங்களைக் கண்டறிய, கணினி கற்றல் மற்றும் செயற்கை நுண்ணறிவு போன்ற முகில் கணினிய சேவைகளைப் பயன்படுத்த உதவுகிறது.

8. மேம்படுத்தப்பட்ட உண்மை (AUGMENTED REALITY)

மேம்படுத்தப்பட்டட உண்மை என்பது நிகழ்நேர தகவல்களான உரை, வரைகலை, ஒலி மற்றும் பிற மெய் நிகர் மேம்படுத்தல்களை நிகழ் உலக பொருட்களோடு ஒருங்கிணைப்பதாகும். பயனர்களின் நிகழ் உலக தொடர்போடு பரிவர்த்தனைகளை ஒருங்கிணைத்து அதற்கு மதிப்பை சேர்க்கிறது. குறிப்பாக கைப்பேசி தொழில் நுட்பம் மற்றும் வணிக பயன்பாடுகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களிடையே இது வளர்ந்து வரும் போக்கு ஆகும்.

மேம்படுத்தப்பட்ட உண்மையின் பயன்பாடுகள்

1. **தொல்லியல்:** நவீன நிலப்பரப்பில் தொல்பொருள் அம்சங்களைப் பெருக்குவதன் மூலம் தற்போதுள்ள கட்டமைப்புகளிலிருந்து சாத்தியமான தள கட்டமைப்புகளை உருவாக்க தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களை அனுமதிக்கிறது. இடிபாடுகள் (Ruins), கட்டிடங்கள் (Buildings), நிலப்பரப்புகள் (landscapes) அல்லது பழங்கால மனிதர்கள் போன்ற கணினியில் உருவாக்கப்பட்ட மாதிரிகள், ஆரம்பகால தொல்பொருள் AR பயன்பாடுகளாக மறு சுழற்சி செய்யப்பட்டுள்ளன.

2. **கட்டிடக்கலை:** கட்டிடம் கட்டப்படுவதற்கு முன்பு, கணினியில் உருவாக்கப்பட்ட கட்டமைப்பு படங்கள் நிகழ் உலக உள்ளூர் காட்சியில் மிகைப்படுத்தப்படலாம். AR ஒரு கட்டிடகலை பணித்தளத்தில் பணியமர்த்தப்படலாம், 2D வரைபடத்தை 3D அசைவூட்ட காட்சியாக வழங்கலாம். AR பயன்பாடுகளைப் பயன்படுத்தி கட்டிடக்கலை மேற்பார்வையை மேம்படுத்தலாம். ஒரு கட்டிடத்தின் வெளிப்புறத்தைப் பார்க்கும் பயனர்கள் அதன் சுவர்வழியாகப் பார்க்கவும், அதன் உட்புற பொருட்கள் மற்றும் அமைப்பைப் பார்க்கவும் அனுமதிக்கிறது.

3. **நகர்புற வடிவமைப்பு மற்றும் திட்டமிடல் :** கட்டமைக்கப்பட்ட சூழலில் வடிவமைப்பு மற்றும் திட்டமிடலுக்கான கூட்டுக் கருவிகளாக AR அமைப்புகள் பயன்படுத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டாக கட்டமைக்கப்பட்ட சுற்றுச் சூழல் நிபுணர்களால் கூட்டுப்பார்வைக்காக பட்டியல்களில் திட்டமிட்டபடி உண்மையாக வரைபடங்கள், கட்டிடங்கள் மற்றும் தரவு ஊட்டங்களை உருவாக்க AR பயன்படுத்தப்படலாம்.

4. **தொழில்துறை உற்பத்தி:** AR ஆனது இலக்க வழி முறைகளுடன் காகித கையேடுகளை மாற்றுவதற்கு பயன்படுத்தப்படுகிறது. அவை உற்பத்தியாளரின் பார்வையில் மேலேழுதப்பட்டு செயல்படத் தேவையான மனமுயற்சியை குறைக்கின்றன. AR இயந்திர பராமரிப்பை திறம்பட செய்கிறது. ஏனெனில் இது ஒரு இயந்திரத்தின் பராமரிப்பு வரலாற்றை இயக்குபவர்களுக்கு நேரடி அணுகலை வழங்குகிறது. அச்சடிக்கப்பட்ட கையேடுகளுடன் ஒப்பிடும் போது, இலக்க வழிமுறைகள் மிக எளிதாகத் திருத்தப்பட்டு விநியோகிக்கப்படுவதால், உற்பத்தியாளர்களுக்கு வேகமாக மாறும் தயாரிப்பு வடிவமைப்புகளுக்கு ஏற்ப மெய்நிகர் கையேடுகள் மாற்றிக் கொள்ள உதவுகிறது.

9. மெய்ந்நிகர் உண்மை (VIRTUAL REALITY)

மெய்ந்நிகர் உண்மை என்பது பயனர் கணிணி சூழலில் உருவாக்கப்பட்ட காட்சிகள் மற்றும் பொருள்கள் உண்மையானவை போன்ற தோற்றத்தை உணரச் செய்தல் ஆகும். மெய்ந்நிகர் உண்மை தலையணி (Virtual Reality Headset) அல்லது தலைக்கவசம் (Helmet) எனப்படும் சாதனத்தின் மூலம் சூழல் உணரப்படுகிறது. மெய்ந்நிகர் உண்மை என்பது வளர்ச்சிக்கான மிக உயர்ந்த திறன் கொண்ட தொழில் நுட்பங்களில் ஒன்றாகும்.

மெய்ந்நிகர் உண்மையின் (VR) பயன்பாடுகள்:

1. **வாகனத் தொழில்** (Automotive Industry): மெய்ந்நிகர் உண்மையானது விலை உயர்ந்த முன்மாதிரிகளை இயக்குவதற்கு முன், பொறியாளர்கள் மற்றும் வடிவமைப்பாளர்கள் வாகனத்தின் தோற்றத்தையும், உருவாக்கத்தையும் எளிதாகப் பரிசோதிக்க அனுமதிக்கிறது. BMW மற்றும் Jaguar Land Rover (JLR) போன்ற நிறுவனங்கள் பல வருடங்களாக வாகனத்தின் காட்சி வடிவமைப்பு (Visual Design) மற்றும் பொருள் அவதானிப்பை (Object Obscuration) சரிபார்க்க முன் வடிவமைப்பு மற்றும் பொறியியல் மதிப்பாய்வுகளை (Engineering Reviews) நடத்தி, இயல்பான உற்பத்தியை தொடங்குவதற்கு

பணத்தை செலவிடுவதற்கு முன் VR – ஐ பயன்படுத்துகிறது.



VR ஆனது மனநலப் பிரச்சனைகளுக்கான சிகிச்சையாகவும், Virtual Reality Exposure Therapy சிகிச்சையானது PTSD மற்றும் பதற்றத்திற்கான (Anxiety) சிகிச்சையில் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என கருதப்படுகிறது.

10. கற்றல் மற்றும் மேம்பாடு

பயிற்சி துறையானது VR கற்றல் தரும் வாய்ப்புகளை தழுவ தொடங்கியுள்ளது. VR – ன் நிலையான, மலிவான அளவீடுகளால் மக்கள் ஆபத்து இல்லாத இடத்தில் அனுபவத்தின் மூலம் கற்றுக் கொள்ள முடியும். மெய்ந்நிகர் பேச்சு (Virtual Speech) எடுத்துக்காட்டாக, பொதுப்பேச்சு, தீவிரமாக கவனித்தல் மற்றும் விற்பனை போன்ற மென் திறன்களுக்கு VR பயிற்சி அளிக்கிறது. அவை VR பயிற்சியில் நிகழ்நிலை பாவனைகளை (Online simulations) மின் கற்றலில் (e – learning) இணைகின்றன. சந்திப்பு அறைகள் (Meeting Rooms) முதல் அரங்கம் (Auditorium) வரை VR சூழல்களில் கற்பவர்கள் தங்கள் நம்பிக்கையும், திறன்களையும் வளர்க்க உதவுகிறது.



முடிவுரை

கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு அதிகரித்து வருவதால், இலக்கமயமாக்கல் (digitalization) விரல் நுனியை எட்டுகிறது. எதிர்காலம் சந்தேகத்திற்கு இடமின்றி தொழில் நுட்ப முன்னேற்றங்களைச் சார்ந்துள்ளது. எனவே முக்கிய சமூக ஊடகங்களை அணுகுவதற்கு IT மற்றும் ITes பற்றி அனைவரும் அறிந்திருக்க வேண்டும்.

www.tnschoolbooks.in

மதிப்பீடு

I. சரியான விடையை தேர்ந்தெடுக்கவும் (1 மதிப்பெண்)

1. எண் மற்றும் புல்லட் பாணிகள் MS word ன் எந்த பொருளடக்கத்தில் இருக்கும்?

   அ. கோப்பு ஆ. காட்சி

   இ. முகப்பு ஈ. வடிவம்

2. பின்வருவனவற்றில் எது சொற் செயலாக்கப் பயன்பாடாகும்?

   அ. Microsoft Word

   ஆ. Microsoft Excel

   இ. Microsoft Powerpoint

   ஈ. Microsoft Access

3. MS wordல் .... சீரமைவுகள் உள்ளன.

   அ. 2 ஆ. 3 இ. 5 ஈ 4

4. நீங்கள் Ctrl+R ஐ கிளிக் செய்தால், நீங்கள் ___________ பெறுவீர்கள்

   அ. மையச் சீரமைப்பு

   ஆ. வலது சீரமைப்பு

   இ. இடது சீரமைப்பு

   ஈ. சரியான சீரமைப்பு

5. தலைப்பு மற்றும் அடிக்குறிப்பை எந்த பொருளடக்கத்தில் காணலாம்?

   அ. முகப்பு ஆ. காட்சி

   இ.செருகு ஈ. கருவிகளைச் செருகவும்

6. தலைப்பு, பக்கத்தின் _____________ இருக்கும்.

   அ. மேல் ஆ. கீழே

   இ. மத்தியில் ஈ. பக்கத்தில்

7. பக்க எண்கள் பொதுவாகக் ________ ல் காணப்படும்

   அ. தலைப்பு ஆ. அடிக்குறிப்பு

   இ. நடுவில் ஈ. பெயர் பட்டியல்

8. ஓரங்கள்– கீழ்கண்ட எந்த பொருளடக்கத்தில் காணலாம்?

   அ. முகப்பு ஆ. காட்சி

   இ. தளவமைப்பு ஈ. வடிவம்

9. MS wordல் எத்தனை வகை திசையமைவுகள் உள்ளன?

   அ. 2 ஆ. 3 இ. 4 ஈ. 5

10. வடிவங்கள்– பின்வரும் எந்த பொருளடக்கத்தில் காணலாம்?

    அ. முகப்பு ஆ. காட்சி

    இ. சேர்த்தல் ஈ. கருவிகளைச்

11. இணையதளங்களை இணைக்க, பின்வருவனவற்றில் எதை பயன்படுத்தப்படுத்தலாம்?

    அ. திறன் கலை ஆ. வார்த்தை கலை

    இ. மீத்தொடுப்பு ஈ. இணைப்புகள்

12. பக்கத்தின் அளவைப் பின்வரும் எந்த பொருளடக்கம் பயன்படுத்தி மாற்றலாம்?

    அ. வடிவம் ஆ. சேர்த்தல் இ. தளவமைப்பு ஈ. கோப்பு

13. MS–EXCEL இல் Alt+H+W என்பது _________ பயன்படுத்தப்படுகிறது.

    அ. உரை மடங்குதல் ஆ. இணைத்தல்

    இ. மையம் ஈ. அடித்தல்

14. ஒட்டுவதற்கான குறுக்குவழி விசை பின்வறுவனவற்றில் எது?

    அ. Ctrl + A ஆ. Ctrl + B

    இ. Ctrl + V ஈ. Ctrl + Z

15. எத்தனை இடங்களில் Auto sum விருப்பத்தை பார்க்கலாம்?

    அ. 1 ஆ. 2

    இ. 3 ஈ. 4

16. Google ஆவணங்களின் பயன்பாடு _____றக்கு ஒத்தது.

அ. MS Word ஆ. MS Excel

இ. MS PowerPoint ஈ. MS Access

17. Google சில்லுகளின் பயன்பாடு ____________றக்கு ஒத்தது.

அ. MS Word ஆ. MS Excel

இ. MS PowerPoint ஈ. MS Access

18. நெட்வொர்க் மூலம் கணினி சேவைகளை வழங்குவது ____________ஆகும்.

அ. முகில் (cloud) ஆ. AI

இ. இணையப் பக்கம் ஈ. முகப்புநூல்

19. IoT என்பது

அ. எண்ணங்களின் இணையம்

ஆ. பொருட்களின் இணையம்

இ. விஷயங்களின் இணையம்

ஈ. விஷயங்களின் உள்ளீடு

20. .pdf என்பது இதன் நீட்சியாகும் ___________.

அ. கையடக்க ஆவண வடிவம்

ஆ. கையடக்க ஆவணக் கோப்பு

இ. கையடக்க ஆவணப் புலம்

ஈ. கையடக்க சாதன கோப்பு

II. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும் (2 மதிப்பெண்கள்)

1. Microsoft Word என்றால் என்ன?
2. முகில் கணினியம் என்றால் என்ன?
3. MS–Excel லில் Macro என்றால் என்ன?
4. MS–Excel ல் என்ன வகையான விளக்கப்படங்கள் உள்ளன?
5. தரவு பகுப்பாய்வு பற்றிய சிறு குறிப்பை எழுதவும்.

III. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும் (3 மதிப்பெண்கள்)

1. MS Word இல் Mail merge என்றால் என்ன?
2. ஒரு மீத்தொடுப்பில் விளக்கக்காட்சியில் எவ்வாறு சேர்ப்பது?
3. Excel இல் "IF" செயல்பாடு என்ன?
4. கூகுள் தாள்கள் பற்றி விளக்கவும்.
5. மெய்நிகர் உண்மையின் பயன்பாடுகளை எழுதவும்.

IV. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும் (5 மதிப்பெண்கள்)

1. MS wordல் படங்களை சேர்ப்பதற்க்கான கட்டளைகளை விளக்கவும்.
2. நிகழ்த்துதலில் காணொளியைச் சேர்ப்பதற்க்கான படிகளை எழுதவும்.
3. G– Suites பற்றி சுருக்கமாக விளக்கவும்.
4. தகவல் தொழில்நுட்பத்தின் எதிர்காலம் பற்றி ஒரு சிறு குறிப்பை எழுதவும்.

www.tnschoolbooks.in



5

தொழில்முனைவு

கற்றலின் நோக்கம்

- துவக்கத் தொழில் பற்றியும் மற்றும் தமிழகத்தில் துவக்கத் தொழில்களுக்கான பல்வேறு வாய்ப்புகளைப் பற்றியும் தெரிந்து கொள்ளுதல்.
- இந்திய அளவில் துவக்கத் தொழிலில் உள்ள பல்வேறு நிதி வாய்ப்புகளை கண்டறிதல்
- துவக்கத் தொழில் மூலம் உருவாக்கப்பட்ட பொருளாதார மற்றும் வேலை வாய்ப்புகளைப் புரிந்து கொள்ளுதல்
- இந்தியாவில் துவக்கத் தொழில்களை நோக்கி இளைஞர்கள் தொடக்கமுயற்சிகள் எடுக்க வேண்டியதன் அவசியத்தை உணருதல்.
- பெண் தொழில்முனைவோரை உருவாக்குவதில் சுய உதவிக்குழுவின் பங்கு மற்றும் அதன் முக்கியத்துவத்தை அடையாளம் காணுதல்.

5.1 தமிழ்நாட்டில் துவக்கத் தொழில்கள்

முன்னுரை

துவக்கத் தொழில்கள்(Start–ups) என்பவை புதிதாக ஒரு தொழிலைத் துவங்கி அதன் ஆரம்ப கட்ட செயல்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்கள் ஆகும். இது பொதுவாக நடைமுறை சிக்கல்களைத் தீர்ப்பதற்காக உருவாக்கப்பட்டது. இவை சமூகத்தின் தேவைகளை பூர்த்தி செய்வதில் பெரும்பங்காற்றுகிறது மேலும் அதீத வளர்ச்சி வாய்ப்புகளின் காரணமாக முதலீட்டாளர்களையும் நிதியாளர்களையும் ஈர்க்கின்றன. வழக்கமான நிறுவனங்களைப் போலல்லாமல் அவை ஒரு பொருளின் அடிப்படை வடிவத்தையே மாற்றுகின்றன.



நிதி, கல்வி, மருந்தகத் துறை, மின்னணு வணிகம் மற்றும் இவை தொடர்புடைய பல்வேறு துறைகளில் துவக்கத் தொழில்கள் நாடு முழுவதும் உள்ள படித்த இளைஞர்களுக்கு கோடிக்கணக்கான வேலை வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் பொருளாதாரத்திற்கு மிகப்பெரிய பங்களிப்பை வழங்குகின்றன. நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதில் இவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து, இந்தியாவில் துவக்கத் தொழில்களை ஆதரிக்க இந்திய அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.தமிழ்நாடு உள்துறை துவக்க தொழில் திட்டங்கள் மூலம் மாநிலத்தின் பொருளாதாரத்திற்கு ஆதரவளிக்கிறது.



ஒரு துவக்கத் தொழிலைத் தொடங்க 10 அடிப்படையான படிகள் உள்ளன; அவை பின்வருமாறு

1. ஒரு சிறந்த தொழிலைத் தேர்ந்தெடுத்தல்.
2. வணிகத்திற்கான திட்டத்தை உருவாக்குதல்.
3. பாதுகாப்பான நிதியினை (முதலீடுகள்) தேர்ந்தெடுத்தல்.
4. சிறந்த மற்றும் ஒத்த மனப்பாங்கினைக் கொண்டவர்களை உடன் வைத்திருத்தல்.
5. சட்டத் தேவைகள், ஆவணங்கள் மற்றும் நடைமுறைகள் சரியாகப் பின்பற்றப்படுவதை உறுதி செய்தல்.
6. இடத்தை நிறுவுதல் (இணையவழி அல்லது நேரடி வணிகத்திற்குப் பொருந்தும்).
7. நல்ல சந்தைப்படுத்துதல் திட்டத்தை உருவாக்குதல்(ஒருசிறியமன–வரைபடம்).
8. ஒரு வாடிக்கையாளர் தளத்தை உருவாக்கிப் பின்பற்றுதல்.
9. மாற்றுத் திட்டங்களை தயாராக வைத்திருத்தல்.
10. நமது ஆர்வம், உந்துதல், போக்கு மற்றும் தொழில்நுட்பத்தினை கைவிடாதிருத்தல்.

தமிழ்நாட்டில் துவக்கத் தொழில்கள்

தமிழ்நாடு அரசு ஒரு விரிவான துவக்கத் தொழில் இணைய முகப்பிணை எளிதாக்கி, மாநிலத்தின் துவக்கத் தொழில் சுற்றுச்சூழல் அமைப்பின் அனைத்து பங்குதாரர்களுக்கும் தேவையான அனைத்து அம்சங்களையும் வழங்குகிறது. இதன் மூலம், மாநிலத்தில் வளர்ந்து வரும் துவக்கத் தொழில்களுக்கு ஒரே இடத்தில் தீர்வினை வழங்குகிறது.

துவக்கத் தொழில் – தமிழ்நாடு (https://startuptn.in/) என்பது மாநிலத்தில் உள்ள துவக்கத் தொழில்கள் தொடர்பான அனைத்து தகவல்களுக்கான அதிகாரப்பூர்வ இணையதளமாகும். இந்த இணைய முகப்பினை தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளில் அணுகலாம்.

தமிழ்நாடு அரசு தனது துவக்கத் தொழில் கொள்கையை "தமிழகத்தில் ஒரு துடிப்பான துவக்கத் தொழில் சூழல் அமைப்பை உருவாக்குதல், ஆதரித்தல் மற்றும் வளர்த்தல்" என்ற நோக்கத்துடன் தொடங்கியுள்ளது, இதன் விளைவாக புதுமை மற்றும் தொழில்முனைவோர் உந்துதல், வேலை வாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சியை அடைதல் போன்றவை எளிதாக அமையும்.

இது 2023 ஆம் ஆண்டுக்குள் 10 உலகளாவிய உயர் வளர்ச்சி தொடக்கங்கள் உட்பட 5000 துவக்கத் தொழில்களை உருவாக்க உதவும் நோக்குடன் நிறுவப்பட்டது. தமிழ்நாடு துவக்கத் தொழில் மற்றும் கண்டுபிடிப்புக் கழகம் (Tamil Nadu start up and innovation council TANSIL) என்பது மாநிலத்தில் உள்ள துவக்கத் தொழில் சூழல் அமைப்பிற்கான நிறுவனம் ஆகும். மேலும் இது பாதுகாப்பான காப்பகங்கள் மற்றும் பல பங்குதாரர்களால் ஆதரிக்கப்படுகிறது.

www.tnschoolbooks.in



பதிவுசெய்யப்பட்ட துவக்கத் தொழில்களின் எண்ணிக்கை	கூட்டாளிகள் மற்றும் செயல்படுத்துபவர்களின் எண்ணிக்கை	அரசிடமிருந்து நிதியுதவி பெறும் துவக்கத் தொழில்களின் எண்ணணைகை	ஆதரவளிக்கும் துறைகளின் எண்ணிக்கை
2700+	140+	40+	10+

தொழில்முனைவு மற்றும் வணிகத்தைப் பொறுத்தவரை, தமிழ்நாடு உலகின் தலைசிறந்த வளர்ந்து வரும் மையங்களில் ஒன்றாக உருவெடுத்துள்ளது. முந்தைய ஆண்டுகளில் நூற்றுக்கணக்கான துவக்கத் தொழில்கள் நிறுவப்பட்டன, அவை பெரும் வெற்றியையும் பெற்றன.

வணிகத் திட்டம், உந்துதல் மற்றும் வளங்களை நிர்வகிப்பதற்கான வலுவான தலைமைத்துவ திறன் இருந்தால் ஒருவர் ஒரு துவக்கத் தொழிலை திறம்பட நடத்த முடியும். தொழில்முனைவோர் எப்பொழுதும் ஆக்கப்பூர்வமாக இருக்க வேண்டும் மற்றும் மற்ற போட்டியாளர்களிடம் தன்னை

வேறுபடுத்திக்கொள்ளதனதுதயாரிப்புஅல்லது சேவைக்கு புதுமையான அடையாளத்தினை கொண்டு வர வேண்டும்.

தமிழகத்தின் துவக்கத் தொழில் இணையதளத்தில் ஒரு தொழிலைப் பதிவு செய்வதற்கான படிகள்

1. ஒரு கணக்கை உருவாக்குதல்: வணிக மின்னஞ்சல்/தனிப்பட்ட மின்னஞ்சல் மூலம் பதிவு செய்யலாம்.
2. உங்களை அடையாளம் காணல்: துவக்கத் தொழில் / செயல்படுத்துபவர் / சேவை வழங்குநர் இதன் மூலம் பொருத்தமான ஆதரவினைப் பெறவும்.
3. அங்கீகாரம் பெறுதல்:
4. StartupTN உங்கள் நிலையை சரிபார்த்து அங்கீகரிக்கும்
5. பயன்களைப் பெறவும்: நன்மைகள், சலுகைகள் மற்றும் பேராதரவு.

தமிழ்நாட்டில் இயங்கி வரும் துவக்கத் தொழில்கள்

1. சுலேகா – Sulekha
2. நெட்மெட்ஸ் – Netmeds
3. பேங்க்பஜார் – BankBazaar
4. பின்டோபாக்ஸ் – Flintobox
5. ஜோஹோ – Zoho
6. கிரிசாலிஸ் – Chrysalis
7. லாபோட் – Lawbot
8. புதிய படைப்புகள் – Freshworks
9. வாண்டர் டிரெயில்ஸ் – Wandertrails
10. பைப்கேண்டி – PipeCandy

தமிழ்நாடு துவக்கத் தொழில் கொள்கையின் நோக்கங்கள்

தமிழ்நாடு அரசு "முக்கிய கொள்கை நோக்கங்களை" வரையறுத்துள்ளது:

- மாநிலத்தில் குறைந்தபட்சம் 5000 தொழில்நுட்ப துவக்கத் தொழில்கள் தோன்றுவதை ஊக்குவிக்கவும், எளிதாக்கவும் மற்றும் ஆதரிக்கவும் செயல்படுதல்.
- சுகாதாரம், உணவு, ஆற்றல், தூய்மை மற்றும் கல்வி போன்ற பல்வேறு துறைகளில் உயர் சமூக தாக்கத்திற்கான புதுமையான தொழில்நுட்ப தீர்வுகளை உருவாக்கும் குறைந்தபட்சம் 10 உலகளாவிய உயர் வளர்ச்சி துவக்கத்தொழில்களுக்கு அர்ப்பணிப்பு மற்றும் ஆதரவை வழங்குதல்.
- ஏதுவான உள்கட்டமைப்பை நிறுவுதல் மற்றும் உந்துதலுக்கு உகந்த கீழ்க்கண்ட செயல்முறையை வலுப்படுத்துதல்.
    1. போக்குவரத்து மற்றும் தளவாடங்கள்,
    2. மின்சாரம் மற்றும் மின் சாதனங்கள்,
    3. சுகாதாரக் காப்பு மற்றும் உயிரித் தொழில்நுட்பம்,
    4. விவசாயம்,
    5. புதுப்பிக்கத்தக்க வளங்கள்,
    6. காலநிலை மாற்றம்,
    7. நிதி தொழில்நுட்பம்
    8. தகவல் தொழில்நுட்பம் (IT),
    9. பொருட்களை இணையமாக்கல் (IoT), செயற்கை நுண்ணறிவு (AI),
    10. இயந்திர கற்றல் (ML),
    11. மென்பொருள்–வழி–சேவை (SaaS)
    12. நெசவு
- (பொது மற்றும் தனியார்) பங்குதாரர்களுடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளுதல்.
- இளைஞர்களிடையே தொழில்முனைவை மேம்படுத்தவும், தொழில் ஈடுபாட்டை அதிகரிக்கவும் கல்வி நிறுவனங்களுடன் ஒத்துழைத்தல்.
- துவக்கத் தொழில் கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்கு துவக்கத் தொழில்கள், வசதியாளர்கள், வழிகாட்டிகள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு போதுமான ஊக்கத்தொகை மற்றும் ஆதாரங்களை வழங்குதல்.
- துவக்கத் தொழில்கள் மீது ஏற்கனவே உள்ள தொழிலாளர், மாசு மற்றும் கட்டிட விதிமுறைகள் துறையின் ஒழுங்குமுறை மற்றும் வரிச்சுமையை குறைத்தல்.

- புதிய துவக்கத் தொழில்களை துவக்கப் படிகள் (start steps)என வரையறுக்கப்பட்ட செயல்முறையில் துவக்கத் தொழிலாக அங்கீகாரம் அடைய மேம்படுத்துதல்.
- தமிழ்நாடு துவக்கத் தொழில்களில் முதலீடு செய்வதற்காக இந்தியாவிலும், உலகெங்கிலும் உள்ள புகழ்பெற்ற முதலீட்டாளர்களுடன் கூட்டுசேர்தல்.
- சென்னை, கோயம்புத்தூர், சேலம்,ஈரோடு, மதுரை, திருச்சி, தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய புவியியல் ரீதியாக குறிப்பிட்ட இடங்களில் அதிக அளவிலான துவக்கத் தொழில் பூங்காக்களை உருவாக்குதல்.

தமிழகத் துவக்கத் தொழில்களின் முக்கிய முன்முயற்சிகள்

சந்தைப்படுத்தல், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு நிதி உதவி அளிப்பதன் மூலம் துவக்கத் தொழில் நிறுவனங்களுக்கு தமிழ்நாடு அரசு ஆதரவளிக்கிறது. துவக்கத் தொழில்களுக்கு 50 லட்சம் ரூபாய் வரையிலும், காப்பகங்களுக்கு ஆண்டுக்கு இந்திய மதிப்பில் 50 லட்சம் ரூபாய் வரையிலும் மானியம் வழங்குவதற்காக தமிழ்நாடு துவக்க மானிய நிதித் திட்டத்தை (TANSEED) அமைத்துள்ளது.

மாநில அரசு அளிக்கும் ஆதரவுகள்

- TANSEED 1.0 மூலம் 20 லட்சம் ரூபாய் நிதி உதவியுடன் 5க்கும் மேற்பட்ட துவக்கத் தொழில்கள் அமைக்கப் பட்டுள்ளன.
- EDII–TN மூலம் 55 லட்ச ரூபாய் நிதி உதவியுடன் 10க்கும் மேற்பட்ட துவக்கத் தொழில்கள் அமைக்கப் பட்டுள்ளன.
- TANSEED 3.0 இன் கீழ் தொடக்க நிறுவனங்களுக்கு 10 லட்சம் ரூபாய் வரை துவக்க மானியம் வழங்கப்பட்டது. ஹெட்ஸ்டார்ட் நெட்வொர்க் அறக்கட்டளை மற்றும் வில்க்ரோ இன்னோவேஷன்ஸ்

கைப்பிடித்தம்	நிதி / ஊக்கத்தொகை	பாதுகாப்பு
சட்ட ஆதரவு • ஸ்டார்ட்அப் இந்தியா வலை இணைமுகச் செயலி மூலம் தொழிலாளர் சட்டங்களின் சுய சான்றிதழ் மற்றும் 9 துவக்கத் தொழில் சூழல்களுடன் இணக்கம்	**நிதி** • துவக்கத் தொழில்களில் முதலீடு செய்வதற்கான SIDBI நிதி ரூ 2,500 கோடி ஆரம்ப காலத்திற்கும் நான்கு ஆண்டுகளில் மொத்தம் 10,000 கோடி ரூபாயுடன் அரசாங்கத்தல் அமைக்கப்பட்டுள்ளது	**தொழிற்சாலை** • 31 புத்தாக்க மையங்கள், 13 தொடக்க மையங்கள், 18 தொழில்நுட்ப வணிக காப்பகங்கள், 7 ஆராய்ச்சி பூங்காக்கள் மற்றும் 500 அடல் சிந்தனை ஆய்வகங்கள். • ஏற்கனவே உள்ள நிறுவனங்களில் 35 புதிய காப்பாகங்களும், 35 புதிய தனியார் துறை காப்பகங்களும் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது.
அறிவுசார் சொத்து உரிமைகள் • விரைவான தொடக்க காப்புரிமை பயன்பாடுகள் • அரசு செலவில் அறிவுசார் சொத்து மீதான விண்ணப்பம் தாக்கல் செய்வதில் உதவுவதற்கான வசதியாளர்கள் குழு மற்றும் இதர செலவுகள். • காப்புரிமைகளை தாக்கல் செய்வதில் 80% தள்ளுபடி	**கடன் உத்தரவாதம்** • தேசிய கடன் உத்தரவாத அறக்கட்டளை (NCGTC)/SIDBI மூலம் கடன் உத்தரவாதம் செய்து தரப்படும். நான்கு ஆண்டுகளுக்கு ஆண்டுக்கு 500 கோடி ரூபாய் வரவு செலவுத் திட்டத்துடன் எதிர்பார்க்கப்படுகிறது.	**மானியம்** • NIDHI–புதுமை மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு மையங்களில் (IEDC) இருந்து 20 மாணவர்களுக்கு 10 லட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. • உச்சட்டர் அவிஷ்கர் யோஜனா – ஐஐடி மாணவர்களிடையே மிக உயர்தர ஆராய்ச்சியை வளர்க்க ஆண்டுக்கு 250 கோடி ரூபாய் ஒதுக்குகிறது. • வருடாந்திர காப்பக நிதி ஒதுக்கீடு.
வெளியேறும் வழிமுறை • திவால் மற்றும் திவால் மசோதா 2015 ("IBB") படி, எளிய கடன் அமைப்புகளுடன் கூடிய துவக்கத் தொழில்கள் 90 நாட்களுக்குள் முடிக்கப்படலாம்	**வரி விலக்கு** • 3 ஆண்டுகளுக்கு வருமான வரி விலக்கு • அரசாங்க அங்கீகாரம் பெற்ற நிதியில் முதலீடு செய்யும் நபர்களுக்கு மூலதன ஆதாய வரி விலக்கு. • நியாயமான சந்தை மதிப்புக்கு (FMV) மேல் செய்யப்படும் முதலீடுகளுக்கு வரி விலக்கு	**நிகழ்வுகள்** • புதுமைகளைக் காண்பிப்பதற்கும் ஒத்துழைப்பிற்கான தளத்தை வழங்குவதற்கும் தொடக்க விழாக்களை ஏற்பாடு செய்தல் • பொது மேடைப் பேச்சுகள்

அறக்கட்டளை ஆகியவை இந்த நிகழ்வை நடத்தின.

தொடக்க நிறுவனங்கள் தனியார் முதலீட்டாளர்களுடன் இணைவதற்கு ஒரு தளத்தை வழங்குவதற்காக தமிழ்நாடு அரசு பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துகிறது. தொற்றுநோய் காலங்களின் போதும், அரசாங்கம் மெய்நிகர் நிகழ்வுகள் அல்லது அமர்வுகள் மூலம் முயற்சியைத் தொடர்ந்தது. தொடக்க முதலீட்டாளர்களை இணைக்க வசதியாக சுமார் 5 திட்டங்கள் மாநிலத்தால் வடிவமைக்கப்பட்டன. முதலீட்டாளர் இணைப்பு திட்டத்தில், சோதனை நாட்கள் மற்றும் நிதி திரட்டுவதற்கான வழிகளில் துவக்க தொழில்களுக்கு வழிகாட்டும் திட்டங்கள் ஆகும்.

செயல்பாடு 1

உங்கள் சொந்த வணிகத்திற்கான தொடக்கத் திட்டத்தை வடிவமைக்கவும்.

உதாரணமாக: உங்கள் சொந்த கஃபே, புதுமையுடன் விளங்கும் உங்களின் சொந்த சிற்றுண்டி விற்பனை நிலையம்.

5.2 வணிகத்திற்கான (அரசு மற்றும் அரசு சாரா) நிதி வாய்ப்புகள்

அறிமுகம்

சமீபத்திய ஆய்வின் கூற்றுப்படி, 94% துவக்கத் தொழில்கள்நிதிப்பற்றாக்குறையால்முதல்வருட செயல்பாட்டிலேயே தோல்வியடைந்துள்ளன. எந்தவொரு வணிகத்திற்கும் உயிர்நாடி என்பது நிதி ஆகும். ஒவ்வொரு நாட்டிலும நிதி நிறுவனங்கள், வங்கிகள், வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள் மற்றும் துணிகர மூலதன நிறுவனங்கள் போன்ற நன்கு வளர்ந்த நிதி அமைப்புகள் உள்ளன. இந்த நிறுவனங்கள் அனைத்தும் தொடக்க மற்றும் நிறுவப்பட்ட வணிகங்களின் பல்வேறு நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன.

ஒரு வணிக முயற்சியை ஆதரிப்பதற்காக மூலதனத்தை திரட்டும் செயல் தொடக்க நிதி என அழைக்கப்படுகிறது. பல துவக்கத் தொழில்கள் மூன்றாம் தரப்பினரிடமிருந்து நிதி திரட்டாமல் அவற்றின் நிறுவனர்களில் இருந்து மட்டுமே நிதியினைப் பெறுகின்றனர். (கடன்கள் மற்றும் பங்கு நீர்த்தலைத் தடுக்க). இருப்பினும், பெரும்பாலான துவக்கத் தொழில்கள் மூன்றாம் தரப்பினரிடம் இருந்தும் நிதி திரட்டுகின்றன, குறிப்பாக அவை பெரிதாக வளர்ந்து அவற்றின் செயல்பாடுகளை அளவிடுகின்றன.

துவக்கத் தொழில்களின் நிதி தேவைகள்:

- இணைப்பினை வளர்க்க.
- கருத்து முதல் வளர்ச்சி செயல்முறையை சீராக்க.
- தொடக்க வணிகத்திற்கான எதிர்கால முதலீட்டாளர்களை ஈர்ப்பதன் மூலம் பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்க.
- விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டிற்காக.

	வங்கிக் கடன்: இது மிகவும் மலிவான வணிக நிதி முறை ஆகும்.தொடக்க வணிகத்தில் வெற்றியடைய இரண்டு வருடங்களில் குறைந்தபட்சம் 650 கடன் புள்ளிகள் வைத்திருக்க வேண்டும். இல்லையேல் அதிக அளவு வருமானத்தைக் கொண்டிருக்க வேண்டும்.
	நிகழ் நிலை கடன்கள்: அதிக ஒப்புதல் விகிதங்கள் மற்றும் விரைவான நிதி நிகழ் நிலை கடன்களில் மட்டுமே கிடைக்கும்., ஆனால் பெரும்பாலான வணிகத்திற்கு கடன்களைப் பெற ஒரு வருட காலம் தேவைப்படுகிறது. அதிக வட்டி விகிதங்கள் மற்றும் அடிக்கடி திருப்பிச் செலுத்தும் காலக்கெடுவுடன் வணிக நிதியுதவியின் மிகவும் விலையுயர்ந்த விருப்பமாக இருக்கலாம்.

www.tnschoolbooks.in

	கடன் வரி இது உங்கள் சொந்த இடத்திலேயே பெறக்கூடிய பிரபலமான நிதியுதவி முறை. நிதி அறிக்கைகள் மற்றும் வணிகத்தில் சிறிது கவனம் தேவைப்படும். சிறிய கடன் வரம்புகள் வளர்ந்து வரும் வணிகங்களுக்கு நிதியின் பெரும்பகுதியைக் காட்டிலும் கூடுதலாக துணைபுரிகிறது
	துணிகர மூலதனம் வணிகக் கட்டுப்பாடு இருக்கும் இடங்களில் இது சரியான தீர்வாகும். முதலீட்டாளர் பெரிய அளவிலான நிதியுதவிக்கு ஒரு பெரிய வலையமைப்பு மற்றும் வணிக ஆலோசனையை உருவாக்க இவை வழிவகுக்கும். வணிகத்திற்குப் பொருந்தாத முதலீட்டாளரைத் தேர்ந்தெடுப்பதில் எச்சரிக்கையாக இருப்பது அவசியம்.
	கூட்ட நிதி நிதியளிப்பு நெகிழ்வுத்தன்மை மற்றும் பரந்த மக்கள் வலையமைப்பின் மூலம் வாடிக்கையாளர்களின் கருத்துக்களைப் பெற உதவுகிறது. துரதிர்ஷ்டவசமாக, நீங்கள் எவ்வளவு நிதியைப் பாதுகாக்க முடியும் என்று உங்களுக்குத் தெரியாது, எனவே இது ஒரு நிலையான நிதி ஆதாரமாக நம்பமுடியாதது
	இடாப்புக் காரணியாக்கம் இது வணிகத்துடன் சேர்ந்து வளரும் கடன் இல்லாத நிதி. ஒப்புதல் பெறுதல் ஏழுதானது என்பதால் துவக்கத் தொழில்களுக்கு ஏற்ற ஒன்றாக இவை உள்ளன.. விண்ணப்பித்த 3 நாட்களுக்குள் ஒப்புதல்கள் மற்றும் நிதியுதவியை வழங்குகிறது

நிதியின் வகைகள்

- அரசு நிதி
- அரசு சாரா நிதி

அரசு நிதி

01 ஸ்டார்ட் அப் இந்தியா முயற்சி

02 ஈபிஸ் இடைமுகம்

03 அடல் பாதுகாப்பு மையம்

04 மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்தின் சர்வதேச காப்புரிமையை பாதுகாக்க உதவி செய்யும் திட்டம்.

05 முத்ரா வங்கிகள்

06 பெருகும் மானியத் திட்டம்

07 சிறு மற்றும் குறு நிறுவனங்களின் கடன் உத்தரவாதம் அளிக்கும் நிதி

08 மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா(STP)

09 நியுஜன் கண்டுபிடிப்பு மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு மையம்

10 பால் பொருட்கள் செயலாக்க மற்றும் கட்டுமான வளர்ச்சி நிதி

1. ஸ்டார்ட் அப் இந்தியா முயற்சி



- ஸ்டார்ட்–அப் இந்தியா திட்டத்துடன் அரசாங்கம் I–MADE திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- 1 மில்லியன் மொபைல் துவக்கத் தொழில் பயன்பாடுகளை உருவாக்குவதில் இந்திய தொழில்முனைவோருக்கு உதவுதல் மற்றும் குறைந்த வட்டியில் கடன்கள் மற்றும் சிறுகடன்களை வழங்குவதே இதன் நோக்கங்கள் ஆகும்.
- நடுத்தர அல்லது குறைந்த சமூக–பொருளாதார பின்னணியில் உள்ள தொழில்முனைவோருக்கு ஏற்றது.
- இத்திட்டத்திற்கு ரூ. 20,000 கோடி இதுவரை ஒதுக்கப்பட்டுள்ளது.

2. ஈபிஸ் (eBiz) இடைமுகம்

- அரசாங்கத்திலிருந்து வணிகத்திற்கு (G2B) செல்லும் தகவல்தொடர்புக்காக இணையத்தின் உதவியுடன் தொடங்கப்பட்ட முதல் தளம் இதுவே ஆகும்.
- இந்த இடைமுகத்தின் முக்கிய நோக்கம் வணிகத்திற்கு ஏற்ற இணைய வழி சேவையை உருவாக்கி நாட்டின் வளர்ச்சியை ஆதரிப்பதாகும்.
- இது அனைத்து இந்திய வணிக முதலீட்டாளர்கள் மற்றும் தொழில்முனைவோருக்கு தகவல் தொடர்பு மையமாக செயல்படுகிறது.
- இந்த தளம் ஐந்து வெவ்வேறு இந்திய மாநிலங்களில் 29 சேவைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

3. அடல் பாதுகாப்பு மையம் (AIC)

- அடல் பாதுகாப்பு மையம் என்பது இந்தியாவில் தொழில்முனைவு மற்றும் புதுமைகளை மேம்படுத்துவதற்கான ஒரு முயற்சியாகும்.
- இது பல்வேறு பங்குதாரர்களுக்கு தொழில் முனைவோர் சந்தையில் இணைந்து பணியாற்ற ஒரு தளத்தை வழங்குகிறது. இது NITI ஆயோக் 2016 இல் தொடங்கப்பட்டது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட துவக்கத் தொழில் நிறுவனங்களுக்கு ஐந்தாண்டு காலத்தில் ரூ.10 கோடி நிதியுதவி வழங்கப்படும்.
- சுகாதாரம், போக்குவரத்து, எரிசக்தி, விவசாயம், கல்வி, சுகாதாரம் மற்றும் நீர் ஆகிய துறைகளில் ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் மற்றும் புதிய நிறுவனங்கள் விண்ணப்பிக்கலாம்.

4. மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் சர்வதேச காப்புரிமைப் பாதுகாப்பிற்கான ஆதரவுத் திட்டம் (SIP–EIT)

- SIP–EIT என்பது மின்னணு தகவல் பரிமாற்றத்தை ஊக்குவிக்கும் வகையில் சர்வதேச காப்புரிமை தாக்கல் செய்வதற்கான MSMEகள் மற்றும் தொழில்நுட்ப தொடக்க அலகுகளுக்கு நிதி உதவி வழங்கும் திட்டமாகும்.
- தகவல் தொடர்பு தொழில்நுட்பங்கள் மற்றும் மின்னணுவியல் துறையில்

சர்வதேச அளவில் பணிபுரிய நிதி உதவி வழங்கப்படுகிறது.

- திருப்பிச் செலுத்தும் வரம்பு அதிகபட்சமாக ஒரு கண்டுபிடிப்புக்கு ரூ. 15 லட்சம் அல்லது விண்ணப்பத்தை தாக்கல் செய்வதற்கும் செயலாக்குவதற்கும் ஏற்படும் மொத்தக் கட்டணங்களில் 50%, இவற்றில் எது குறைவோ அவை வழங்கப்படும்.
- விண்ணப்பதாரரால் சர்வதேச காப்புரிமை தாக்கல் செய்யப்படும் எந்த நிலையிலும் இந்த ஆதரவு திட்டம் பயன்படுத்தப்படலாம்.

5. முத்ரா வங்கிகள்

முத்ரா (MUDRA) வங்கி ஏப்ரல் 8, 2015 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இது பிரதான் மந்திரி முத்ரா யோஜனாவின்(PMMY) கீழ் வருகிறது. இவை கடன் வசதியை மேம்படுத்தவும், கிராமப்புறங்களில் சிறு வணிக வளர்ச்சியை அதிகரிக்கவும் உருவாக்கப்பட்டது.

இந்தியாவில் வளர்ச்சியடைய விரும்பும் சிறு வணிகத்தை ஆதரிப்பதே இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தியதன் முக்கிய நோக்கமாகும். அரசு இந்தியாவில் துவக்கத் தொழில் கலாச்சாரத்தை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் 2015ல் 10,000 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்தது.

பண்ணை அல்லாத சிறு அல்லது குறு நிறுவனங்கள் மற்றும் கார்ப்பரேட் அல்லாத சிறு வணிக நிறுவனங்களுக்கான தொடக்கக் கடனாக ரூ. 10 லட்சம் வரையிலான கடன் தொகையை வழங்க முத்ரா வங்கிகள் பொறுப்பேற்றுள்ளன.

6 . பெருகும் மானியத் திட்டம் (MGS)

- மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை (DeitY) பெருகும் மானியத் திட்டத்தை (MGS) நிறுவியது. இந்தத் திட்டத்தைத் தொடங்கியதன் நோக்கம், தயாரிப்பு மற்றும் தொகுப்பின் மேம்பாட்டிற்காக கல்வியாளர்கள் அல்லது நிறுவனங்கள் மற்றும் தொழில்துறைக்கு இடையே ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டின் (R&D) ஒத்துழைப்பை ஊக்குவிப்பதாகும்.
- இத்திட்டத்தின் கீழ் நிறுவன மட்டத்தில் சந்தைப்படுத்தல் செய்யக்கூடிய பொருட்களின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கு தொழில்துறை ஆதரவளித்தால், தொழில்துறையின் பங்களிப்பை விட இரண்டு மடங்கு நிதியுதவியை அரசாங்கம் வழங்கும்.
- அரசாங்க மானியங்கள் ஒரு திட்டத்திற்கு அதிகபட்சமாக ரூ. 2 கோடி வரை இருக்கும், மேலும் ஒவ்வொரு திட்டத்தின் காலமும் இரண்டு வருடங்களுக்கும் குறைவாக இருக்கும். தொழிற்சங்கங்களுக்கு, மூன்று ஆண்டுகளுக்கு, 4 கோடி ரூபாய் செலவாகும்.

7. குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாத நிதி அறக்கட்டளை (CGTMSE)

தொடக்க நிறுவனங்கள், குறு மற்றும் சிறு வணிகங்கள் மற்றும் சிறு நிறுவனங்களுக்கு பூஜ்ஜிய பிணைய வணிகக் கடன்கள் போன்ற கடன்களை வழங்குவதற்காக இந்திய அரசாங்கத்தால் CGTMSE நிறுவப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ், சிட்பி – இந்திய சிறு தொழில் மேம்பாட்டு வங்கி (SIDBI – Small Industries Development Bank of India) உடன் இணைந்து அதிகபட்சமாக ரூ.100 லட்சத்தை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

8. மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா(STP)

மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா (STP) என்பது 100% ஏற்றுமதியில் கவனம் செலுத்தும் ஒரு திட்டமாகும். இது கணினி மென்பொருள் மற்றும் தொழில்முறை சேவைகளின் ஏற்றுமதியினை ஊடகங்கள் அல்லது தொடர்பு இணைப்புகள் மூலம் அதிகரிக்க முனைகின்றன.

9. நியூ ஜென் கண்டுபிடிப்பு மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு மையம்

தேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப தொழில்முனைவோர் மேம்பாட்டு வாரியம் என்பது நியூ ஜென் IEDC திட்டத்தை நிறுவிய இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் ஒரு அங்கமாகும். இந்திய இளைஞர்களின் தொழில் முனைவு மற்றும் படைப்பாற்றல் உணர்வை ஊக்குவிப்பதே இத்திட்டத்தின் முதன்மை நோக்கமாகும்.

10. பால் பதப்படுத்துதல் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (DIDF)

- இவை பால் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள், பல மாநில பால் கூட்டுறவு சங்கங்கள், பால் சங்கங்கள், மாநில பால் பண்ணை கூட்டமைப்புகள் மற்றும் NDDB துணை நிறுவனங்கள் போன்றவை நபார்டு வங்கியிடமிருந்து கடனுக்காக விண்ணப்பிக்க வேண்டிய தேவைகள் மற்றும் தகுதிகளைப் பூர்த்தி செய்கின்றன. இறுதிக் கடன் வாங்குபவரிடமிருந்து குறைந்தபட்சம் 20% கட்டணமும், 80% அதிகபட்ச கட்டண விகிதமுமாக இந்தக் கடன் வழங்கப்படுகிறது.

அரசு சாரா நிதி

1. PRISM's தொழில்நுட்ப முனைவோர் முன்னேற்ற நிகழ்வு (TePP)

TePP என்பது அரசாங்கத்தின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் ஒரு முயற்சியாகும். இந்தியாவின் தனிப்பட்ட கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதும் நிதியுதவி அளித்து வெற்றிகரமான நிறுவனங்களாக மாற்றுவதற்கு ஆதரவளிப்பதும் இத்திட்டத்தின் நோக்கம் ஆகும்.

தனிநபர்கள் இந்த திட்டத்தை துவக்கத் தொழில் மானியங்களைப் போன்று பயன்படுத்தி, ஒரு புதுமையான யோசனையை அடுத்த கட்டங்களுக்கு எடுத்துச் சென்று வணிகமயமாக்கலாம். இதற்கு ரூ. 2 லட்சம் முதல் ரூ. 100 லட்சம் நிதி வசதியும் அளிக்கப்படுகிறது.

2. நாஸ்காம் (nasscom)

மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் | நாஸ்காம்®

நாஸ்காமின் 10,000 துவக்கத் தொழில்கள் திட்டம் 10 ஆண்டுகளில் 10,000 இந்திய துவக்கத் தொழில்களுக்கு நிதியளிக்கும் யோசனையுடன் 2013 இல் தொடங்கப்பட்டது. துவக்கத் தொழில் நிதியைத் தேர்ந்தெடுக்கும் போது பின்பற்றப்படும் செயல்முறைகள் பின்வருமாறு:

தேர்ந்தெடுக்கப்பட்ட துவக்கத் தொழில்கள் அரசாங்க நிதி மற்றும் முதலீட்டாளர்கள் உதவியுடன் பணத்தை திரட்ட உதவுகின்றன.

3. எல்லையற்ற இந்தியா

எல்லையற்ற இந்தியா என்பது ஆரம்ப கட்ட சமூக தொழில்முனைவோர் தங்கள் துவக்கத் தொழில்களை வளர்க்க உதவும் சமூக நிறுவனங்களாகும். இந்த அமைப்பு முதல் 0–5 ஆண்டுகளுக்கு ஆரம்ப நிலை துவக்கத் தொழில்களை ஆதரிக்கிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட துவக்கத் தொழில்கள் மற்றும் சமூக நிறுவனங்களுக்கு தூண்டல் பட்டறைகள் வழங்குதல், வளர்ச்சி அளவீட்டினை அமைத்தல், தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி, தள வருகைகள், இணைப்புகள், நிதியுதவி மற்றும் பிற ஆதரவு வழங்கப்படுகிறது. இது தான் ஆதரவளிக்கும் நிறுவனங்களில் 38% இலாப நோக்கற்றவை ஆகும்.

4. துவக்கத் தொழில் மண்டலங்கள்

துவக்கத் தொழில் மண்டலங்கள் கட்டுமான நிறுவனங்களுக்கான முழு அளவிலான சேவைகள் மற்றும் வளங்களைக் கொண்ட ஒரு தொடக்க நிறுவனத்திற்கு உதவுகின்றன. இவை நிதியளித்தல், வழிகாட்டுதல், திறமைக்கான அணுகல், நெட்வொர்க்கிங் வாய்ப்புகள் மற்றும் வட அமெரிக்க சந்தைகளில் கால்பதித்தல் போன்றவற்றை ஊக்குவிக்கிறது. இவை ஆண்டு முழுவதும் இணைய விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்கிறது. துவக்கக் கட்டத்தில் விண்ணப்பதாரர்கள் முறையான வணிகத் திட்டத்துடன் விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை. மானியத்திற்கான நிதித் தொகை ரூ.50 லட்சம் முதல் ரூ.3 கோடி வரை கிடைக்கும்.

5. அமிட்டி சர்வதேசப் பாதுகாப்பு

அமிட்டி கண்டுபிடிப்புக் காப்பகம் | அமிட்டி துணிகர முதலீடு

ஆதரவு:
அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்
சிறு குறு மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்கள் அமைச்சகம்

அமிட்டி சர்வதேசப் பாதுகாப்பு நிதி என்பது பல்வேறு முதலீட்டு பங்குதாரர்களின் அமைப்பாகும். இதன் மூலம் வணிகங்கள் நிதி ஆதரவை உருவாக்க முடியும். அமிட்டி சர்வதேசப் பாதுகாப்பு நிதி தொழில்முனைவோர் மற்றும் துவக்க தொழில்களுக்கு கீழ்கண்ட வழிகளில் உதவி புரிகின்றன:

- அமிட்டி துணிகர முதலீட்டின் மூலம் நேரடி முதலீடுகள் செய்தல்.
- நிதி நிறுவன திட்டங்கள் மூலம் கடன்/பங்கினை உயர்த்துதல்.
- HNI (அதிக முதல் கொண்ட நபர்கள்) முதலீட்டாளர்கள் மற்றும் துணிகர முதலீட்டு நிதிகள் மூலம் முதலீடு செய்தல்.

6. அமிர்தா டிபிஐ

இந்தியாவில் அதிகம் அறியப்படாத துவக்கத் தொழில் மானியங்களில் ஒன்றான அமிர்தா டிபிஜ (TBI) ஒரு இலாப நோக்கற்ற துவக்கத் தொழில் பாதுகாப்பு அமைப்பாகும். அரசாங்கத்தால் இது சற்று ஆதரிக்கப்படுகிறது. இது ஆரம்ப மற்றும் வளர்ச்சிக் கட்டத்தில் துவக்கத் தொழில் மற்றும் தொழில்முனைவோருக்கு நிதியளித்து, அவற்றிற்கு வழிகாட்டி, வளர்ச்சியை அடைய உதவுகிறது.

இது ஒரு துவக்கத் தொழிலுக்கு ரூ. 1 கோடி வரை நிதியளிக்கிறது, மேலும் துணிகர முதலீடு மற்றும் முதலீட்டாளர் இணைப்பிற்கான விருப்பங்களையும் வழங்குகிறது.

செயல்பாடு 1

முந்தைய பாடத்தில் நீங்கள் ஒரு யோசனை/தயாரிப்பு/நிறுவனத்திற்கான தொடக்கத் திட்டத்தை உருவாக்கியிருப்பீர்கள். இப்போது உங்கள் நிறுவனத்தின் வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல பல்வேறு ஆதாரங்களைக் கண்டறியுங்கள். அவ்வாதாரங்கள் உங்கள் நண்பர்கள், குடும்பத்தினர் மற்றும் பிற நிதி திரட்டும் வழிகளாகவும் இருக்கலாம்.

முதலீட்டாளர்களுக்கு உங்கள் தயாரிப்புகள் பற்றி தெரிவிப்பதன் மூலம் நீங்கள் தேர்வு செய்யும் நிதி முறைகளை பட்டியலிடுங்கள்.

பொருள்/ நிறுவனத்தின் பெயர்

____

பெறுதல் முறை

____

நிதி திரட்டு வழி

____

5.3 துவக்கத் தொழில்கள் (பொருளாதார மற்றும் வேலைவாய்ப்பு அம்சங்கள்)

இந்தியாவின் ஆட்டோமொபைல், வணிக வாகனங்கள், வாகன பாகங்கள், தோல் பொருட்கள், ஜவுளி, மென்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள்(ITeS) போன்ற துறைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழ் நாட்டின் பங்களிப்பு அளப்பரியது.

தொழில்நுட்ப கண்டுபிடிப்பு மற்றும் தயாரிப்பு மேம்பாட்டில் தமிழ்நாடு போதிய உயரத்தை அடைந்துள்ளது. உள்கட்டமைப்பு வசதிகளில், நாட்டிலேயே சிறப்பாக செயல்படும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. தமிழ்நாடு மொத்த பதிவு விகிதம் அதிகம் கொண்ட மாநிலம் ஆகும். ஏனெனில், பல்வேறு மாநிலங்கலைச் சேர்ந்த மாணவர்களுக்கான இலக்காக தமிழ்நாடு உள்ளது. அதிக எண்ணிக்கையிலான திறமையான மனிதவளத்தை வழங்குவதோடு தொழில்நுட்ப ரீதியாக தகுதிவாய்ந்த மனிதவளத்தின் அடிப்படையிலும் சிறந்த மாநிலமாக உள்ளது.

பல்வேறு துறைகளில் புதிய தயாரிப்புகள் மற்றும் செயல்முறைகளை கண்டுபிடிப்பதற்காக தொழில்முனைவோர், மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் IIT–Madras மற்றும் பல நம்பிக்கைக்குரிய காப்பகங்கள், நாட்டின் சிறந்த மற்றும் புகழ்பெற்ற காப்பகங்களை தமிழ்நாடு கொண்டுள்ளது. மென்பொருள்–வழி–சேவையில் (SaaS) துவக்கத் தொழில்களுக்கான இலக்காக நமது மாநிலம் செயல்பட்டு வருகிறது. இதனால், தமிழ்நாடு மட்டுமின்றி, நாடு முழுவதும் செழித்து வரும் பல துவக்கத் தொழில் நிறுவனங்களுக்கு நமது மாநிலம் ஒரு பொருத்தமான இடமாக உள்ளது.

துவக்கத் தொழில்களில் வேலை வாய்ப்பு

- ஒருவர் புதிதாக தொழில் தொடங்கும் போது, மற்றவர்களுக்கும் வேலை வாய்ப்புகளை உருவாக்குகின்றனர். ஒரு வணிகம் சிறியதாக இருந்தாலும் பல பணிகளையும் பொறுப்புகளையும் கொண்டுள்ளது. ஒரு தொழிலதிபராக நிதிகளை ஒழுங்கமைப்பது, பொருட்களை வாங்குவது, பொருட்கள் மற்றும் சேவைகளை சந்தைப்படுத்துவது முதல் விற்பனையைத் துவங்குவது வரை அனைத்தையும் ஒருவரே கவனித்துக்கொள்வது சாத்தியமில்லை. எல்லாவற்றையும் அவர்களால் செய்ய முடியாது. எனவே அவர்கள் வேலைக்கு ஆட்களை அமர்த்த முற்படுவர். இதன்மூலம், புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு வேலையில்லாத் திண்டாட்டம் குறையும்.
- துவக்கத் தொழில்கள் மற்றும் சிறிய நிறுவனங்களில் வேலைகளைப் பெறுவது எளிதான ஒன்றே. ஒரு நபர் ஒரு புதிய நிறுவனத்தை அமைக்கும் போது, தொடர்புடைய திறன்களைக் கொண்ட அவரது வட்டத்தில் உள்ளவர்கள் அந்த நபரை அணுகி துவக்கத் தொழிலின் ஒரு பகுதியாக மாறலாம், இதனால் வேலை கிடைப்பது எளிதாகிறது. ஆனால் பெரிய நிறுவனங்களில் புதியவர்கள் மற்றும் குறைந்த அனுபவம் உள்ளவர்களுக்கான வேலை வாய்ப்புகளானது சற்று கடினமான ஒன்று.
- பெருநிறுவனங்களை விட சிறு தொழில்கள் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. பெரிய நிறுவனங்களில் காலியிடங்கள் இருந்தாலும், தேர்வு செயல்முறை கடுமையாக இருக்கும், மேலும் ஆற்றல் இருப்பினும் ஒருசிலரால் மட்டுமே அப்பணிகளைச் செய்ய முடியும்.
- மறுபுறம், சிறு வணிகங்கள் வளர்ச்சிக்கு ஏற்றவாறு, தங்கள் குழுவை விரிவாக்க புதிய பணியாளர்கள் தேவைப்படுவார்கள். எனவே, வேலை தேடுபவர்கள் தங்கள் திறமை, ஆர்வம் மற்றும் தகுதிக்கு ஏற்ற

வேலை வாய்ப்புகளைக் கண்டறிய ஒரு பொன்னான வாய்ப்பைப் பெறுவார்கள்.

மேலும், நாம் ஒரு புதிய நிறுவனத்தில் சேரும்போது, அதன் அடித்தளத்திலிருந்தே அதனுடன் தொடர்பு கொள்கிறோம். முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட வேலை முறையை பின்பற்ற வேண்டியதில்லை. தமக்கேற்ற விதிமுறைகளை உருவாக்க இது சாத்தியமான சூழலைத்தருகிறது. படிப்படியாக, நிறுவனம் விரிவடையத் தொடங்கும் போது, ஆரம்பத்திலிருந்தே நிறுவனத்தில் பணிபுரிந்ததால் தொழிலாளர்கள் முதலாளிக்கு இன்றியமையாதவர்களாகி விடுகின்றனர். இது வணிகத்திற்கு பாதுகாப்பான சூழலை உருவாக்கும்.

துவக்கத் தொழில்களின் பொருளாதார வளர்ச்சிக்கு அரசின் முயற்சிகள்

மாநில அரசு துவக்கத் தொழில்களுக்கு ஆரம்ப கால நிதி மற்றும் பிற ஒத்துழைப்பை வழங்குவதன் மூலம் தமிழகத்தின் பொருளாதார சூழ்நிலைகளை மேம்படுத்த உதவியுள்ளது. இது பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கின்றது. அரசின் சில முக்கிய நடவடிக்கைகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:

1. தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் துவக்கத் தொழில்களுக்கு போதுமான நிதி ஒதுக்கீட்டினை அரசு உறுதி செய்துள்ளது.
2. SIDBI போன்ற தொழில்முறை நிதி நிறுவனத்திற்கு நிதிவசதி அளித்துள்ளது. இது 2012 ஆம் ஆண்டு SEBI ஒழுங்குமுறையின் கீழ் ஒரு மாற்று முதலீட்டு நிதியாக (AIF) பதிவு செய்யப்பட்டது. இந்த நிதியானது தமிழ்நாட்டில் நிறுவப்பட்ட துவக்கத் தொழில்கள் மற்றும் சிறு குறு மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களில் செலுத்துவதற்காக மாற்று முதலீட்டு நிதியில் சேர்க்கப்பட உள்ளது. இந்த நிதியில் தமிழக அரசு 75 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது. 2019-2020 நிதியாண்டில் முதல் தவணையாக 25 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது.
3. புதுமையான யோசனைகள் சிறப்பு புதுமை திட்டங்களால் வளர்க்கப்படுகின்றன. (புதுமை வவுச்சர் திட்டம் போன்றவை).
4. தமிழ்நாடு தொடக்க விதை மானிய நிதி (TNSSGF) ரூ. 50 கோடி ஒதுக்கீட்டில் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளுக்காக நிதி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து முதல் ஆண்டில் 5 கோடி திரட்டப்பட்டுள்ளது. TNSSGF–ஆனது, தொழிலைத் தொடங்கும் முன்னரே கருத்துக்களுக்கு நிதியுதவியை வழங்கும். மேலும் மாணவர்கள்/ ஆசிரியர்கள்/தனிநபர்களின் புதுமையான யோசனைகளின் முன்மாதிரி மற்றும் சோதனையை ஆதரிக்கும்.
5. TNSSGF ஆனது கல்வி நிறுவனம் மற்றும் தனியார் தொழில்நுட்ப வணிக காப்பகங்களுக்கு 1:3 என்ற விகிதத்தில் தொழில்துறை மூலம் நிதி திரட்டினால் அதிகபட்சமாக ரூ.50 லட்சம் வரை சுழற்சி முறையில் நிதியை வழங்கும். அதன் முழு முயற்சியாக தனியார் தொழில்நுட்ப வணிக காப்பகங்கள் பொதுமக்களுக்காகத் திறக்கப்பட்டுள்ளது.
6. துவக்கத் தொழில்களுக்கு நிதியளிப்பதற்காக மற்ற நாடுகளைச் சேர்ந்த வெளிநாடு வாழ் இந்தியர்கள்/இந்திய வம்சாவளியினர்/ முதலீட்டாளர்கள் / துணிகர முதலீட்டாளர்கள் அல்லது தனிப்பட்ட முதலீட்டாளர்களை ஈர்க்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசின் நோக்கங்கள் பின்வருமாறு

1. சுற்றுச்சூழலுக்கு உகந்த பசுமை துவக்கத் தொழில்களுக்கு கூடுதல் ஆதரவை வழங்குதல்.
2. நீர், கழிவு மேலாண்மை, சுகாதாரம், உணவு, கல்வி, காலநிலை மாற்றம் போன்ற துறைகளில் சமூக தாக்கத்தை உருவாக்கும் துவக்கத் தொழில் நிறுவனங்களுக்கு இந்த திட்டம் சிறப்பு கவனம் செலுத்துகிறது.
3. சமூக தாக்கத்தை மையப்படுத்திய நடவடிக்கைகளில் மாணவர்களின் பங்களிப்பை ஊக்குவித்தல்.
4. இந்தத் திட்டம் கிராமப்புறத் தொழில்முனைவோரை துணிகர நிதியுதவி மூலம் ஊக்குவிக்கும். மேலும்,

www.tnschoolbooks.in

கிராமப்புறங்களில் செயல்படும் துவக்கத் தொழில்கள் மற்றும் காப்பகங்களுக்கு ஆதரவளித்தல்.

5. குறிப்பிட்ட சமூக, கிராமப்புற மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சனைகளில் பெரும் சவால்களை தீர்க்கும் ஏற்பாடுகள் வரவேற்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட புதுமையான தீர்வுகள் மற்றும் யோசனையை செயல்படுத்துவதற்கான ஆரம்ப மானியம் மற்றும் தொடர் நிதியுதவி வழங்கப்படுகிறது.

6. கிராமப்புற/சமூக தொழில்முனைவோரால் உருவாக்கப்பட்ட தொழில்நுட்பங்கள்/மாதிரிகளை ஏற்றுக்கொள்வதற்கான வழிமுறையை உருவாக்குதல்.

மானியங்கள்

- மாநிலம் முழுவதும் உள்ள புகழ்பெற்ற நிறுவனங்கள், கல்லூரிகள், காப்பகங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனங்களுடன் இணைந்து தமிழக துவக்கத் தொழில் மற்றும் காப்பகப் பணியகம் தொலைதூரம் சென்றடையும் திட்டங்களை நடத்துகிறது.
- BIRAC, DST/NSTEDB, CSIR, DEITY மற்றும் GITA ஆகியவற்றின் ஆராய்ச்சி மானியங்களைப் பெறுவதற்கு, தொழில்துறையுடன் இணைந்து, தயாரிப்பு அல்லது செயல்முறை கண்டுபிடிப்புகளை உருவாக்க கல்வி நிறுவனங்கள் உதவுகின்றன.
- கூட்டாண்மை குழுக்களில் நடைமுறையில் உள்ள சமூக பொறுப்பு விதிமுறைகளைப் பயன்படுத்தி துவக்கத் தொழில்கள் மற்றும் காப்பகத் திட்டங்களுக்கு நிதியளிக்க உந்துதல்.
- மாநில அரசு மற்றும் முன்னணி வங்கிகளுடன் இணைந்து மாவட்ட தலைமையகத்தில் உள்ள சில வங்கிக் கிளைகளை துவக்கத் தொழில் மற்றும் சிறு குறு நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கு ஆதரவளிக்கிறது. மேலாளர்களை உணர்திறன் செய்வதற்காக நோக்குநிலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்தல்.
- சந்தைப்படுத்தல், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிகழ்வுகள் மூலம் துவக்கத் தொழில்களை எளிதாக்குகிறது. கல்வித்துறையில் புதுமைகளை வளர்ப்பதற்கான உத்வேகத்தை வழங்க, தமிழ்நாடு அரசு, மாணவர்கள், ஆசிரியர்கள், கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் தொழில்முனைவோருக்கு ஏற்ற திட்டங்கள் மற்றும் ஊக்கத்தொகைகள் மூலம் கல்வி ஆராய்ச்சி மற்றும் வளாக சூழலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பல்கலைக்கழகம், கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களும் தொழில் முனைவோர் வளர்ச்சியில் ஈடுபட்டுள்ளன.

7. தொழில்–கல்வி தொடர்புகளை எளிதாக்குதல்.

8. வளர்ந்து வரும் தொடக்க/தொழில்துறைக்கு உதவ, தேவை அடிப்படையிலான நவீன படிப்புகள்/திட்டங்களுக்கான ஒரு சாளரத்தை நிறுவுதல்.

செயல்பாடு 1

இணையத்தைப் பயன்படுத்தி, துவக்கத் தொழில்களுக்கு உதவ இந்தியாவின் பிற மாநில அரசுகள் வழங்கிய சில வழிகளைக் கண்டறியவும். அவற்றை கீழே பட்டியலிடவும்:

மாநிலத்தின் பெயர்
அவை வழங்கும் நிதி மற்றும் பிற உதவிகள்

	• ____________________ • ____________________
	• ____________________ • ____________________
	• ____________________ • ____________________

5.4 இளம் துவக்கத் தொழில்கள்

அறிமுகம்

இளையதலைமுறைஅல்லதுஇளைஞர்களால் இயக்கப்படும் துவக்கத் தொழில் மிகவும் ஆற்றல்மிக்கதாகவும் தொழில்நுட்பம் சார்ந்ததாகவும் உள்ளது. இணைய வழி சந்தைப்படுத்தல் மற்றும் பிற இணைய வழி சேவைகள் இளைய தலைமுறையினரைப் பெரிதும் ஈர்க்கின்றன. இது இளம் துவக்கத் தொழில்களை உள்ளடக்கியது.

புதிய ஆர்வமுள்ள வணிக முயற்சிகளை விவரிப்பதற்காக, இளம் துவக்கத் தொழில்கள் என்ற கருத்து சில காலமாக நம்மைச் சுற்றி அதிகரித்து வருகிறது. இணைய மற்றும் மெய்நிகர் வணிக முறைகளும் இதில் அடங்கும். இளைஞர்களின் ஆர்வம், எதிர்காலத்தில் அவர்களின் வளர்ச்சியை ஆதரிக்கவும், துவக்கத் தொழில்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் வழிவகுக்கும்.

மேலும், இவற்றிற்க்கு தற்போதுள்ள ஆதரவு தெளிவானது மற்றும் தொடக்க அபாயங்களைக் குறைத்து, அவர்களின் வெற்றிக்கான வாய்ப்பை அதிகரிக்கக் கூடியது. இதன் விளைவாக, இளைஞர்கள் உட்பட அதிகமானோர் தங்கள் துவக்கத் தொழில்களை உருவாக்குகிறார்கள். மேலும், கூட்டு முயற்சிகளையும் எடுக்க விரும்புகிறார்கள். அனுபவம் வாய்ந்த வல்லுநர்கள், இளைஞர்களிடம் இல்லாத அனுபவம் மற்றும் முடிவெடுக்கும் திறன்களைக் கொண்டிருப்பதால், தொடக்கத் தொழில்களில் ஈடுபடுவதற்கு மிகவும் பொருத்தமானவர்களாகத் தோன்றலாம். ஆயினும்கூட, இளம் தொழில் வல்லுநர்கள் குறிப்பிட்ட திறன்களைக் கொண்டுள்ளனர். அவை ஒரு தொடக்க நிறுவனராக இருக்க ஏற்றதாக இருக்கும்.

இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு, பின்வரும் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.



துவக்கத் தொழில் என்றால் என்ன? துவக்கத் தொழில்கள் ஏன் இளைஞர்களுக்கு ஏற்றதாக இருக்கின்றன?

ஒரு இளம் துவக்கத் தொழில் என்பது திடமான, ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் நிறுவனத்தின் மீது ஆர்வம் மிக்க ஒன்றாகும்.

வணிகம் அல்லது தொடக்கங்கள் என்று வரும்போது இளைய தலைமுறையினர் மிகவும் ஆக்கப்பூர்வமாகவும், புதுமையாகவும், ஆற்றல் மிக்கவர்களாகவும், உள்ளனர். எதிர்காலத்திற்கான தெளிவான பார்வை மற்றும் நோக்கம் கொண்ட துவக்கத் தொழில்களின் தற்போதைய போக்குகளின் அடிப்படையில்புதுமையான யோசனைகளைப் புரிந்துகொள்ள இது உதவுகிறது.

இளைஞர்களை அடிப்படையாகக் கொண்ட தொடக்க வணிகம்

துவக்கத் தொழில் என்பது அதன் செயல்பாடுகளின் ஆரம்ப கட்டத்தில் இருக்கும் ஒரு நிறுவனம் ஆகும். இவை இளம் பிஞ்சுகளை போன்றவை. சில வருடக் கணக்கில் அவை தம்மை இவ்வாறு வகைபடுத்திக்கொள்ளக் காரணம் யாதெனில், முறையான திட்டமிடலின்மை, செயல்திறனின்மை, பதவி உயர்வின்மை அல்லது யோசனைகளின் பற்றாக்குறையாக இருக்கலாம்.

பலதரப்பட்ட எண்ணம் கொண்ட தொழில்முனைவோரால் அல்லது கூட்டு முயற்சியால் துவக்கத் தொழில்கள் கண்டறியப்பட்டன. சந்தையில் அடையாளம் காணப்பட்ட தேவை அல்லது அளிப்பின் அடிப்படையில் வணிகத் திட்டங்கள் அடையாளம் காணப்படும். கவனிக்க வேண்டிய முதன்மையான பணி என்னவெனில், ஒரு நல்ல வணிகத் திட்டத்தை உருவாக்குவதுதான். அது மீண்டும் திட்டமிடக்கூடியதாகவும், மறுபரிசீலனை செய்யக்கூடியதாகவும், ஏற்கவும் மாற்றவும் தயாராக இருக்கும் ஒன்றாகவும், புதிய தொழில்நுட்பத்தை ஏற்கும் வகையிலும் இருத்தல் வேண்டும்.

ஒரு நல்ல வணிகத் திட்டமானது நிதி மற்றும் மக்கள் ஆதரவினைப் பெற அடிப்படைத் திறவுகோல் போன்றது. இவை துவக்கத் தொழில்களின் தொடக்க காலங்களில் ஆதரவினைப்பெறவும் தொடர்ந்துபயனிக்கவும் எதுவாக இருக்கும். துவக்கத் தொழில்களுக்கு கணிசமான அளவில் முதல் தேவைப்படுகிறது. அவர்கள்அதைமுதலீட்டாளர்கள் மூலமாகவோ அல்லது தற்போதுள்ள தொடக்க ஆதரவு அமைப்பு மூலமாகவோ மட்டுமே பெற முடியும். ஆரம்ப முதலீடு, சிறு வணிக கடன்கள் மற்றும் மானியங்கள், காப்பகங்கள், துணிகர முதலீட்டாளர்கள் மற்றும் பிற முதலீட்டாளர்கள் போன்றவையே சாத்தியமான முதலீட்டு வாய்ப்புகள் ஆகும்.

இருப்பினும், துவக்கத் தொழில்களில் முதலீடு செய்வது அதிக சிக்கலை மேற்கொள்ளும் காரணியாகவே அறியப்படுகிறது. இருப்பினும் இது அதிக வருவாய் ஈட்டும் வணிகமாகும். ஒரு துவக்கத் தொழில் தோல்வியடையும் விகிதமும் அதிகமாகவே உள்ளது. எனவே நல்ல வணிகத் திட்டம் மிகவும் அவசியம்.

ஒவ்வொரு துவக்கத் தொழில் உரிமையாளரும் கருத்தில் கொள்ள வேண்டிய மற்றொன்று, துவக்கத் தொழிலுக்கு ஒரு சிறந்த பெயரைக் கொடுப்பதாகும். இது சிறந்த அடையாளத்தை பெறவும், போட்டியை தவிர்க்கவும், முதலீட்டாளர் மற்றும் வாடிக்கையாளரின் நம்பிக்கையை ஊக்குவிக்கவும் உதவுகிறது. வலுவான மற்றும் அர்த்தமுள்ள பெயரைக் கண்டறிய, பல்வேறு பெயரிடும் இணையதளங்கள் உள்ளன.

துவக்க தொழில்களை நோக்கிய இளந்தலை முறையினர்

பல இளம் மற்றும் வரவிருக்கும் தலைமுறையினருக்கு, ஒரு தொழிலைத் தொடங்கும் எண்ணம் அவர்கள் கடந்து சென்ற அனுபவங்கள் மற்றும் நிகழ்வுகள் மூலம் தோன்றியிருக்கும். வணிக வகைகள், ஒரு பெரிய பொறுப்பு, சொந்த வணிகம் இவற்றை பொருட்படுத்தாமல் ஒரு நபர் தனது முழு அமைப்பின் மீதும் அதிகபட்ச கட்டுப்பாட்டை வைத்திருக்க அனுமதிக்கிறது,இதன் மூலம் ஒருவரின் வேலை மற்றும் வருமானத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கு வழிவகுக்கிறது.

எப்பொழுது ஒவ்வொருவரும் தமது சொந்த துவக்க தொழில்களை துவங்குவது? சராசரியாக மூத்த வயது உடையோர் ஒரு தொழிலை துவங்குவதை காட்டிலும் இளம் தலைமுறையினர் ஒரு தொழிலை துவங்குவதன் மூலம் அதிக லாபம் ஈட்ட முடியும். மேலும் இது பல நன்மைகளையும் உருவாக்கும். அவற்றுள் சில கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

நீண்ட கால பலன்களுக்கான திட்டமிடல் – லாபத்தின் அடிப்படையில் வெற்றிகரமான வணிக உத்தியை உருவாக்குவது எளிதான காரியம் அல்ல. ஒரு வணிகத்திற்கு நிறைய சிந்தனை செயல்முறைகள் தேவைப்படும். அனுபவம், அறிவு, புரிந்துகொள்ளும் திறன் மற்றும் நேரத்தைப் பொருட்படுத்தா முயற்சிகள், முதலீடு செய்யப்பட்ட நிதி மற்றும் பல ஒரு வெற்றிகரமான நிறுவனத்திற்குத் தேவை. எனவே, சிறுவயதிலிருந்தே துவக்கத் தொழில்களில் ஈடுபடுவது நமது இலக்கை முன்கூட்டியே துவங்கவும், உறுதியாகவும், புதுமையான முறையில் அடையவும் உதவுகிறது. ஒரு வணிகத்தில் செலவழித்த நேரம் மற்றும் அதன் வளர்ச்சியானது ஒரு நிறுவனத்தை வழிநடத்த தேவையான திறன்கள் மற்றும் அறிவை வளர்ப்பதை ஆதரிக்கும் ஒரு கற்றல் செயல்முறையாகும்.

இடர் சகிப்புத் திறன் – ஒரு நபர் வணிகத்தின் இடர் மற்றும் அபாயத்தை எதிர்கொள்ளத் தயாராக இல்லாவிட்டால், வணிகம் சிறப்பாக அமையாது. இதனால் புதிதாக துவக்க தொழில் துவங்க முயற்சிகள் குறைவாகவே இருக்கும். ஒரு தொழிலை துவங்கி பின்னர் ஆபத்தினை எதிர்கொள்ள தயாராக இல்லை என்றால் மன அழுத்தம் கூடும். வயதானவர்களை காட்டிலும் இளைஞர்கள் அதிகமான உறுதியுடன் இருப்பதால், இளம் தலைமுறையினருக்கு இது ஏற்ற தொழில் முறையாகும். பல்வேறு இடர் மேலாண்மை முறைகளையும் மனதில் கொள்ள வேண்டும். காப்பீடு மாற்றத்தை சந்திக்கும் தொழில்நுட்பம் போன்றவற்றை மனதில் கொள்ள வேண்டும்.

தேவையான உந்துதல் – ஆண்டுகள் செல்லச் செல்ல ஊக்கமும் ஆர்வமும் குறையும் என்று கூறப்படுகிறது. எந்தவொரு சூழ்நிலையிலும் கற்றுக்கொள்வதற்கும் வெற்றிபெறுவதற்கும் ஆர்வத்துடன் இருக்கும் ஒரு இளம் நிபுணரின் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் யாரோ ஒருவர் விரைவாக அடையாளம் காண முடியும். மேலும், தோல்வியின் துரதிர்ஷ்டவசமான நிகழ்வில், ஊக்கமே நம்மை தொடர்ந்து செல்ல வைக்கிறது.

ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் மாற்றியமைத்தல் – ஒரு இளம் மற்றும் ஆற்றல்மிக்க நிபுணராக இருப்பதால், புதிய சூழ்நிலைகள் மற்றும் தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப தம்மை மாற்றிக்கொள்ள எளிதாக இருக்கும். அதாவது இளைஞர்கள் குறிப்பிட்ட பணி விதிகளை வெளிப்படுத்தவில்லை என்றாலும் புதிய தொழில்நுட்பங்களை மாற்றியமைப்பதில் மிகவும் ஆர்வமாக இருப்பர். வயதானவர்களை விட இளைஞர்கள் தற்போதைய தொழில்நுட்ப போக்குகளை மிக எளிதாக பின்பற்றுகிறார்கள் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இது துவக்கத் தொழில்களுக்கு மிகவும் முக்கியமானது.

இளம் துவக்கத் தொழில்முனைவோரின் வகைகள்

இளம் தலைமுறையினரிடமிருந்து பல வகையான துவக்கத் தொழில்கள் அமைக்கப் பெறுகின்றன. அவற்றில் சில பின்வருமாறு;

சிறு வணிக தொழில்முனைவோர்

இது பெரும்பாலும் அறியப்பட்ட வகை ஆகும். இந்த வகையான தொழில்முனைவோர் பொதுவாக தங்கள் வணிகத்தை அவர்களின் ஆர்வங்களிலிருந்து (கலைகள், சமையல், தொழில்நுட்ப திறன்கள் போன்றவை) உருவாக்குகிறார்கள். மற்றொரு வணிகத்தில் பணியாளராக பணிபுரிவதை விட, தங்கள் வணிகத்தை உருவாக்கி, தங்களுக்காக வேலை செய்யலாம். இது ஒரு அமைதியான, எளிமையான மற்றும் எளிதான வழியாகும்.

துவக்கத் தொழில்முனைவோர்

ஒரு துவக்கத் தொழில்முனைவோர்(start–up entrepreneur) என்பவர், குறிப்பிட்ட துறையில் விடுபட்ட அம்சம், தயாரிப்பு அல்லது

சேவையைத் தேடி அவற்றுக்கான தீர்வுகளை வழங்குகிறார். இந்த வகையான இளம் தொழில்முனைவோர் தொழில்நுட்பத்தில் கவனம் செலுத்த முனைகிறார்கள்.

பெரிய அளவிலான துவக்கத் தொழில்முனைவோரின் பிரபலமான எடுத்துக்காட்டுகள் கிக் எகானமி பயன்பாடுகளான உபர் (uber), டூர்தேஷ் (Doordash) மற்றும் பல. இந்த தொழில்முனைவோர் கடன்கள், மக்கள் குவியும்தளங்கள் (கிக்ஸ்டார்ட்டர் போன்றவை) அல்லது புதிய வணிகங்களில் முதலீடு செய்ய விரும்பும் துணிகர முதலீட்டாளர்களிடமிருந்து நிதியுதவியைப் பெற்று, தங்கள் வணிகங்களைத் தொடங்குவதற்கும் நிதியளிக்கவும் முயற்சி செய்கிறார்கள்.

சமூக தொழில்முனைவோர்

ஒரு சமூகத் தொழில்முனைவோர் சமூகச் சிக்கல்களைத் தங்கள் தயாரிப்புகள் மற்றும் சேவைகள் மூலம் தீர்க்க விரும்புகிறார்கள். இந்த வகை இளம் தொழில்முனைவோர் சிறந்த எதிர்காலத்தை அமைப்பதில் கவனம் செலுத்துகிறார்கள். இந்த இலக்கை அடைய உதவும் ஒரு கருவியாக அவர்கள் பணத்தைப் பார்க்கிறார்கள்.

சமூக தொழில்முனைவோர் இலாப நோக்கற்ற மற்றும் சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு புதிய நிறுவனங்களைத் தொடங்குகின்றனர்.

புதுமையான தொழில்முனைவோர்

4. **குழு வங்கி:** இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தன்னிச்சையாக இணைக்கப்பட்ட வங்கிகள் ஒரே பங்கு நிறுவனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படும் அமைப்பாகும். பங்கு நிறுவனமானது வங்கியியல் நிறுவனமாகவோ அல்லது வங்கியியல் அல்லாத நிறுவனமாகவோ இருக்கலாம். குழு வங்கியியலின் கீழ், தனிப்பட்ட வங்கிகளானது அலகு வங்கிகளாகவோ, கிளைகளை இயக்கும் வங்கிகளாகவோ அல்லது இரண்டின் கலவையாகவோ இருக்கலாம்.

5. **தூய வங்கியியல் மற்றும் கலப்பு வங்கியியல்:** வங்கியின் கடன் வழங்கும் நடவடிக்கைகளின் அடிப்படையில், வங்கி பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது:

   (அ) தூய வங்கியியல்: தூய வங்கியியலின் கீழ், வணிக வங்கியானது தொழில், வர்த்தகம் மற்றும் வணிகத்திற்கு குறுகிய கால கடன்களை மட்டுமே வழங்குகின்றன. இவை குறுகிய கால நிதிகளில் மட்டுமே நிபுணத்துவம் பெற்றது.

   (ஆ) கலப்பு வங்கியியல்: கலப்பு வங்கியியல் என்பது வணிக வங்கியானது வணிக வங்கியியல் மற்றும் முதலீட்டு வங்கியியல் என்ற இரண்டு செயல்பாடுகளில் ஈடுபடுகிறது.இதில் வணிக வங்கிகள் பொதுவாக குறுகிய கால மற்றும் நடுத்தர கால கடன்களை வழங்குகின்றன.

6. **உறவு வங்கியியல்:** இது தனிப்பட்ட தொடர்புகளை மேம்படுத்துவதற்கும், வங்கிக்கு மிகவும் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருப்பதற்கும் வங்கி மேற்கொள்ளும் முயற்சிகளைக் குறிக்கிறது. அத்தகைய இலாபகரமான கணக்குகளை வங்கியில் தக்கவைத்துக்கொள்ள அல்லது புதிய கணக்குகளை ஈர்ப்பதற்காக, வங்கிகள் அத்தகைய வாடிக்கையாளர்களுடன் நல்உறவைப் பேணுவது அவசியமாகிறது.

7. **குறுகிய வங்கியியல்:** ஒரு வங்கியானது வைப்புகளைச் சேகரிப்பதில் மட்டுமே கவனம்செலுத்தி,குறிப்பிட்ட பிராந்தியத்தில் பணத்தைக் கடனாக வழங்குவது அல்லது முதலீடு செய்வது அல்லது அரசாங்கப் பத்திரங்களில் மட்டுமே நிதியை முதலீடு செய்வது போன்ற சில தேர்ந்தெடுக்கப்பட்ட செயல்பாடுகளில் கவனம் செலுத்துகிறது. இவ்வகை கட்டுப்படுத்தப்பட்ட குறைந்தபட்ச

வங்கியியல் செயல்பாடுகள் 'குறுகிய வங்கியியல்' என்று குறிப்பிடப்படுகிறது.

8. **முழுமை வங்கியியல்:** முழுமை வங்கியியல் என்பது பரந்த மற்றும் விரிவான வங்கியியல் செயல்பாடுகளைக் குறிக்கிறது.

9. **பிராந்திய வங்கியியல்:** கிராமப்புற மற்றும் புறநகர் பகுதிகளில் சிறு கடன் பெறுபவர்களுக்கு போதுமான மற்றும் சரியான நேரத்தில் கடன்களை வழங்குவதற்காக, மத்திய அரசு மற்றும் மாநில அரசுகள் சில வணிக வங்கிகளுடன் இணைந்து இந்தியா முழுவதும் பிராந்திய கிராம வங்கிகள் எனப்படும் பிராந்திய வங்கிகளை ஏற்படுத்தியது.

10. **உள்ளூர் வங்கிகள்:** போட்டிச் சூழலைக் கொண்டு வருவதற்கும், பிராந்திய வங்கிகளின் பற்றாக்குறைகளைப் போக்குவதற்கும், கிராமப்புற மற்றும் புறநகர் மையங்களில் தனியார் துறையின் கீழ் செயல்படும் இவ்வங்கிகளை நிறுவ அரசு அனுமதித்துள்ளது. இவை உள்ளூர் பகுதி வங்கிகள் எனப்படும்.

11. **மொத்த விற்பனை வங்கியியல்:** மொத்த விற்பனை அல்லது பெருநிறுவன வங்கியியல் என்பது வரையறுக்கப்பட்ட பெரிய அளவிலான வாடிக்கையாளர்களைக் கையாள்வதைக் குறிக்கிறது. ஆயிரக்கணக்கான சிறிய கணக்குகளை பராமரிப்பதற்கும், அதிக பரிவர்த்தனை செலவுகளை மேற்கொள்வதற்க்கு பதிலாக, மொத்த விற்பனை வங்கியியலின் கீழ், வங்கிகள் பெருநிறுவன வாடிக்கையாளர்களை கையாள்கின்றன மற்றும் பெரிய கணக்குகளை மட்டுமே வைத்திருக்கின்றன.

12. **தனி வங்கியியல்:** தனி வங்கியியல் அல்லது தனிப்பட்ட வங்கியியல் என்பது பெருநிறுவன வாடிக்கையாளர்களின் வங்கிச் சேவையாக இல்லாமல், பணக்கார நபர்களுக்கான தனிப்பட்ட வங்கிச் சேவையாகும். இது தனிப்பட்ட வாடிக்கையாளர்களின் தேவைகள், அவர்களின் விருப்பத்தேர்வுகள் மற்றும் அவர்களுக்குத் தேவையான பொருட்கள் அல்லது சேவைகளைப் பூர்த்தி செய்கிறது. கணக்குகள், கடன்கள், வெளிநாட்டு நாணயத் தேவைகள், முதலீட்டு வழிகாட்டுதல் போன்ற அனைத்து வகையான தனிப்பட்ட சேவைகளும் இதில் அடங்கும்.

13. **சில்லறை விற்பனை வங்கியியல்:** சில்லறை விற்பனை வங்கியியலானது வணிக வங்கியியலின் ஒரு முக்கிய வடிவமாகும், இது பெருநிறுவன வாடிக்கையாளர்களைக் காட்டிலும் நுகர்வோரை இலக்காகக் கொண்டுள்ளது.இது வங்கிகள் தங்களின் தயாரிப்புகளை விற்பனை செய்வதற்கு வாடிக்கையாளர்களை அணுகும் முறையாகும்.

செயல்பாடு 1

கீழ்காணும் வங்கிகளுக்கு எடுத்துக்காட்டுகளை தருக

வங்கியின் வகை	வங்கியின் பெயர்
செலுத்துதல் வங்கி	
சிறு நிதி வங்கி	
கூட்டுறவு வங்கி	
தனியார் துறை வங்கி	
பொதுத்துறை வங்கி	

8.5 பங்குச் சந்தை

அறிமுகம்

மற்ற சந்தைகளைப் போலவே, பங்குச் சந்தை என்பது பங்குகளை வாங்கும் மற்றும் விற்கும் இடமாகும். இது பத்திரங்கள்,

பங்குகள் மற்றும் பிணைப்பு பத்திரங்களை வாங்குவதற்கும் விற்பதற்கும் ஆதாரமாக உள்ளது. பங்கு என்பது ஒரு நிறுவனத்தின் உரிமையில் பங்குவகிப்பதாகும். ஒரு நபர் ஒரு நிறுவனத்திற்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளை வாங்க பணம் செலுத்தினால், அவர் பங்குதாரராக மாறுகிறார்.

பொது நிதி (stocks) என்றால் என்ன, பங்குகள் என்றால் என்ன?

- 'பங்குகள்' என்பது மக்கள் வாங்கக்கூடிய சிறிய நிறுவனங்களாகும். உதாரணமாக ஒரு பங்கை வாங்கியவுடன், ஒரு நிறுவனத்தின் ஒரு சிறிய பகுதி சொந்தமாகிறது.
- 'பொது நிதி' (stocks) என்பது மிகவும் பொதுவான சொல்லாகும், இது பல்வேறு நிறுவனங்களில் உள்ள பல பங்குகளை விவரிக்கும் போது பயன்படுத்தப்படுகிறது.

பொது நிதிச் சந்தை என்பது பங்குச் சந்தையைப் போன்றது. முக்கிய வேறுபாடு என்னவென்றால், பொது நிதிச் சந்தையானது பத்திரங்கள், பரஸ்பர நிதிகள், பெருதிகள் மற்றும் நிறுவனங்களின் பங்குகள் போன்ற நிதிக் கருவிகளை வர்த்தகம் செய்ய உதவுகிறது. பங்குச் சந்தை பங்குகளின் வர்த்தகத்தை மட்டுமே அனுமதிக்கிறது.

ஒரு பங்குச் சந்தை எவ்வாறு செயல்படுகிறது

பங்குச் சந்தை என்பது ஒரே ஒரு இயங்கு சந்தை அல்ல. இது பொதுநிதிகளை வர்த்தகம் செய்யக்கூடிய அனைத்து பங்குச் சந்தைகளின் தொகுப்பாகும். ஒவ்வொரு பங்குச் சந்தையிலும் பல நிறுவனங்கள் உள்ளன. நிறுவனங்கள் பத்திரங்களை மக்களுக்கு விற்கின்றன. மக்கள் தங்களுக்குள் பத்திரங்களை வர்த்தகம் செய்ய (விற்க மற்றும் வாங்க) பங்குச் சந்தையை பயன்படுத்துகின்றனர். பங்குச் சந்தை விற்பனைக்கான பத்திரங்களையும் அவற்றின் விலைகளையும் பட்டியலிடுகிறது. விற்பவர்களுக்கும் வாங்குபவர்களுக்கும் இடையே பத்திரங்களை மாற்றுவதையும் இது நிர்வகிக்கிறது.

பல்வேறு பத்திரங்களின் விலையானது உயர்வோ அல்லது வீழ்ச்சியோ, அல்லது இரண்டுமாகவோ பங்குச் சந்தையானது நாள் முழுவதும், ஒவ்வொரு நாளும் திறந்திருக்கும். இதில் மக்கள் பத்திரங்களை அவர்கள் செலுத்தியதை விட அதிக விலைக்கு விற்று பணம் சம்பாதிக்கிறார்கள்.

பொதுநிதிச் சந்தையில் வர்த்தகம் செய்யப்படும் நிதிக் கருவிகள்

1. பத்திரங்கள்
2. பங்குகள்
3. பெருதிகள் (Derivatives)
4. பரஸ்பர நிதிகள்

பங்குச் சந்தையில் முதலீடு செய்வது எப்படி?

- பங்குச் சந்தையில் முதலீடு செய்ய முதலில் ஒரு வர்த்தக (trading) கணக்கு மற்றும் டிமேட் (DEMAT) கணக்கு தொடங்க வேண்டும்.
- பணம் மற்றும் பங்குகளின் பரிமாற்றத்திற்க்கு வசதியாக இந்த வர்த்தக மற்றும் டிமேட் கணக்குகளை சேமிப்புக் கணக்குடன் இணைக்கப்பட வேண்டும்.
- டிமேட் மற்றும் வர்த்தக கணக்குகள் வேறுபட்டவை என்பதை நினைவில் கொள்ளவும்.
- பரிவர்த்தனை செய்யப்படும் நாளானது வர்த்தக தேதி என்று அழைக்கப்படுகிறது, இது 'டி டே' ('TDay') என குறிப்பிடப்படுகிறது.
- அந்த நாளின் முடிவில் மேற்கொள்ளப்படும் அனைத்து பரிவர்த்தனைகளுக்கான ஒப்பந்தக் குறிப்பை தரகர் வழங்க வேண்டும்

- ஒரு பங்கை வாங்கும்போது, அது T+2 நாளின் முடிவில் டிமேட் (DEMAT) கணக்கில் பிரதிபலிக்கும்
- இந்தியாவில் உள்ள அனைத்து பங்கு தீர்வுகளும் T+2 அடிப்படையில் செயல்படுகிறது.
- நாம் பங்குகளை விற்கும்போது, பங்குகள் உடனடியாக கட்டுப்படுத்தப்பட்டு, T+2 நாளில் விற்பனை வருமானம் மீண்டும் வரவு வைக்கப்படும்

ஊக வணிகர்

ஒரு ஊக வணிகர் என்பவர், அடிப்படை பங்கு விலையின் சாத்தியமான நகர்வுகள் குறித்த தனது பார்வைகளின் அடிப்படையில் சந்தையில் பந்தயம் கட்டுபவர் ஆவார். ஊக வணிகர்கள் எதிர்பார்க்கப்படும் எதிர்கால விலை நகர்வுகளின் அடிப்படையில், கணக்கிடப்பட்ட அபாயங்களை எடுத்துக்கொள்கிறார்கள். அவர்கள் விரைவான மற்றும் பெரிய ஆதாயங்களைப் பெறுவார்கள் என்று நம்புகிறார்கள், ஆனால் எப்போதும் வெற்றி வாய்ப்பாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. ஊக வணிகர்கள் தான் மூலதனச் சந்தையில் ஏற்ற இறக்கத்தை (பத்திரங்களின் சந்தை விலையில் ஏற்ற இறக்கங்கள்) செலுத்துகிறார்கள். காளை, கரடி, கலை மான் மற்றும் முட வாத்து ஆகிய நான்கு வகையான ஊக வணிகர்கள் உள்ளனர்.



1. காளை

ஒரு காளை என்பது எதிர்காலத்தில் பத்திரங்களின் விலைகள் உயரும் என்று எதிர்பார்க்கும் ஒரு ஊக வணிகர் ஆவார். இவர் விலை உயர்வை எதிர்பார்த்து, எதிர்காலத்தில் அதிக விலைக்கு விற்கும் நோக்கத்துடன் தற்போது பங்குகள் மற்றும் மற்ற பத்திரங்களை வாங்குகிறார்.

2. கரடி

ஒரு கரடி ஊக வணிகர் எதிர்காலத்தில் விலை குறையும் என்று எதிர்பார்க்கிறார் மற்றும் எதிர்காலத்தில் குறைந்த விலையில் அவற்றை வாங்கும் நோக்கில் தற்போது பத்திரங்களை விற்கிறார்.

3. கலை மான்:

ஒரு கலை மான் என்பது பங்குச் சந்தையில் ஒரு எச்சரிக்கையான ஊக வணிகர் ஆவார். அவர் புதிய நிறுவனங்களின் பங்குகளுக்கு விண்ணப்பித்து, ஒதுக்கீடு கிடைத்தால் அவற்றை முனைமத்தில் விற்க எதிர்பார்க்கிறார். ஒதுக்கீட்டுப் பணத்தைச் செலுத்த அழைக்கப்படுவதற்கு முன்பே அவர் பங்குகளை விற்கிறார். அவர் ஒரு முனைம வேட்டையர் என்றும் அழைக்கப்படுகிறார்.

4. முட வாத்து:

ஒரு கரடி ஊக வணிகர் தனது பொறுப்புகளை நிறைவேற்ற கடினமாக இருக்கும் போது, அது ஒரு முட வாத்து போல் போராடுவதாக கூறப்படுகிறது.

செபி (SEBI)

SEBI என்பது Securities and Exchange Board of India. இது 1992 இல் இந்திய அரசாங்கத்தால் நிறுவப்பட்ட ஒரு சட்டப்பூர்வ ஒழுங்குமுறை அமைப்பாகும், இது பத்திரச் சந்தையை ஒழுங்குபடுத்துவதோடு பத்திரங்களில் முதலீடு செய்யும் முதலீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாக்கிறது. பங்குச் சந்தை மற்றும் பரஸ்பர நிதிகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதையும் SEBI கட்டுப்படுத்துகிறது.

SEBI யின் நோக்கங்கள்

1. **முதலீட்டாளர் பாதுகாப்பு:** SEBIயை அமைப்பதன் மிக முக்கியமான நோக்கங்களில் இதுவும் ஒன்றாகும். வழிகாட்டுதலை வழங்குவதன்

மூலம் முதலீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாப்பது மற்றும் முதலீடுகள் பாதுகாப்பானது என்பதை உறுதிப்படுத்துகிறது.

2. வர்த்தகம் மற்றும் பங்குச் சந்தையின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்தி மோசடிகள் மற்றும் முறைகேடுகளைத் தடுத்தல்
3. போக்கெழுதுபவர்கள், தரகர்கள் போன்ற நிதி இடைத்தரகர்களுக்கான நடத்தை நெறிமுறையை உருவாக்குதல்.
4. சட்ட விதிமுறைகள் மற்றும் சுய ஒழுங்குமுறை ஆகியவற்றுக்கு இடையேயான சமநிலையை பேணுதல்.

பங்குச் சந்தை அட்டவணை

- ஒரு பங்குச் சந்தை அட்டவணையானது (The stock markets index) ஒட்டுமொத்த பொருளாதாரத்தின் அழுத்தமானியாக செயல்படுகிறது
- மேலே செல்லும் அட்டவணையானது சந்தை பங்கேற்பாளர்கள் நம்பிக்கையுடன் இருப்பதைக் குறிக்கிறது
- கீழே செல்லும் அட்டவணையானது சந்தை பங்கேற்பாளர்கள் அவநம்பிக்கையுடன் இருப்பதைக் குறிக்கிறது
- இந்தியாவில் இரண்டு முக்கிய அட்டவணைகள் உள்ளன – BSEயின் சென்செக்ஸ் மற்றும் NSE யின் நிஃப்டி
- அட்டவணைகள் பல்வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படலாம் அவை தகவல், தரப்படுத்தல், வர்த்தகம் மற்றும் ஹெட்ஜிங்
- அட்டவணை வர்த்தகம் (Index trading) என்பது அட்டவணையின் மிகவும் பிரபலமான பயன்பாடாகும்
- அட்டவணையை உருவாக்க இந்தியா தடையற்ற சந்தை மூலதனமாக்கல் மிதவை முறையைப் பின்பற்றுகிறது
- குறிப்பிட்ட துறைகளின் ஆர்வங்களை வெளிப்படுத்தும் வகையில் துறை சார்ந்த அட்டவணைகள் உள்ளன

செயல்பாடு 1

பின்வரும் பங்குச் சந்தைகளுக்கான அதிகாரப்பூர்வ இணையதளத்தின் பெயர்களை எழுதவும்

1. BSE
2. NSE
3. OTCEI

8.6 வரிவிதிப்பு

அறிமுகம்

வரிவிதிப்பு என்பது வரி விதிக்கும் அதிகாரத்தைக் குறிக்கும். பொதுவாக ஒரு அரசாங்கம், தனது குடிமக்கள் மற்றும் பொதுமக்கள் மீது ஒரு நிதிக் கடமையை சுமத்துவது வரி எனப்படும். அரசு அல்லது அதிகாரிகளுக்கு வரி செலுத்துவது என்பது காலம் காலமாக நிகழக்கூடிய ஒன்றாகும்.

"வரிவிதிப்பு" என்ற சொல் வருமானம், மூலதன வரவு மற்றும் நில வரி முதலிய அனைத்து வகையான வரிகளுக்கும் பொருந்தும். வரிவிதிப்பு என்பது பொதுவாக

ஒரு செயல் என்று குறிப்பிடப்படுகிறது. இதன் மூலம் கிடைக்கும் வருவாய் "வரி" என்று அழைக்கப்படுகிறது.

நேரடி மற்றும் மறைமுக வரிகள்

வரியானது அதனை யார் செலுத்துகிறார்கள், அவற்றின் இறுதிச் சுமையை யார் ஏற்கிறார்கள், எந்த அளவுக்கு அதனைக் குறைக்க முடியும் என பல்வேறு அளவுகோல்களின்படி பல வழிகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. வரிகள் பொதுவாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வகைப்படுத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டாக வருமான வரி மற்றும் விற்பனை வரி. நேரடி மற்றும் மறைமுக வரிகளை வேறுபடுத்துவதற்கான அளவுகோல்களில் பொருளாதார வல்லுநர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. மேலும் கார்ப்பரேட் வருமான வரி அல்லது சொத்து வரி போன்ற சில வரிகள் எந்த வகைக்குள் வர வேண்டும் என்பது தெளிவாக வரையறுக்கப்படவில்லை. நேரடி வரியானது வரி செலுத்துபவரால் மற்றொருவர் மீது மாற்ற முடியாத ஒன்றாகும், அதேசமயம் மறைமுக வரியில் இது சாத்தியமாகிறது.

நேரடி வரிகள்

நேரடி வரிகள் என்பது நபர்கள் (எ.கா. தனிநபர்கள்) மீதான வரிகளாகும், மேலும் அவை பொதுவாக வருமானம், நுகர்வு அல்லது நிகரச் செல்வம் ஆகியவற்றின் அடிப்படையில், செலுத்துபவரின் செலுத்தும் திறனை அடிப்படையாகக் கொண்டவை. எ.கா., வருமான வரி.

மறைமுக வரிகள்

பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தி, நுகர்வு, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி உள்ளிட்ட பரிவர்த்தனைகள் மீது மறைமுக வரியானது விதிக்கப்படுகிறது. பொதுவான மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட விற்பனை





வரிகள், மதிப்புக் கூட்டு வரிகள் (VAT), உற்பத்தி அல்லது உற்பத்தியின் ஏதேனும் ஒரு அம்சத்தின் மீதான வரிகள், சட்டப் பரிவர்த்தனைகள் மீதான வரிகள் மற்றும் சுங்கம் அல்லது இறக்குமதி வரிகள் ஆகியவை இதற்கு உதாரணங்கள் ஆகும். எ.கா., சரக்கு மற்றும் சேவை வரி (GST).

பல்வேறு வகையான வரிவிதிப்பு முறைகள்

வரிவிதிப்பு அனைத்து வகையான வரிகளுக்கும் பொருந்தும். கீழ்க்காணும் பட்டியலில் உள்ள அனைத்தும் வரி விதிப்பில் அடங்கும். (ஆனால் இவை மட்டும் அல்ல):

- **வருமான வரி:** தனிநபர்கள் மற்றும் வணிகங்கள் உட்பட, தங்கள் அதிகார வரம்பிற்கு உட்பட்ட அனைத்து நபர்களின் வருமானத்தின் மீதும் அரசாங்கம் வருமான வரியை விதிக்கும்.
- **பெரு நிறுவன வரி:** ஒரு வணிக இலாபத்தின் மீது இவ்வகை வரி விதிக்கப்படுகிறது.
- **மூலதன ஆதாயங்கள்:** இது பங்குகள், பத்திரங்கள் அல்லது நிலம் உள்ளிட்ட சில சொத்துக்களை விற்பதன் மூலம் மக்கள் அல்லது வணிகங்கள் பெறும் மூலதன ஆதாயங்கள் மீதான வரி ஆகும்.
- **சொத்து வரி:** சொத்து வரி உள்ளூர் அரசாங்கத்தால் மதிப்பிடப்பட்டு, சொத்தின் உரிமையாளரால் செலுத்தப்படுகிறது. சொத்து மற்றும் நில மதிப்புகளின் அடிப்படையில் இந்த வரி கணக்கிடப்படுகிறது.
- **மரபுரிமை வரி:** இது இறந்த நபரின் சொத்துக்களை மரபுரிமையாகப் பெற்ற தனிநபர்கள் மீது விதிக்கப்படும் ஒரு வகை வரி.
- **விற்பனை வரி:** பொருட்கள் மற்றும் சேவைகளின் விற்பனையின் மீது அரசாங்கத்தால் விதிக்கப்படும் நுகர்வு வரி. இது மதிப்பு கூட்டப்பட்ட வரி (VAT), சரக்கு மற்றும் சேவை வரி (GST), மாநில அல்லது மாகாண விற்பனை வரி மற்றும் கலால் வரி போன்ற பல வழிகளில் விதிக்கப்படும்.

வரிகளின் நன்மைகள்

- வரிகள் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தல் மற்றும் அரசாங்கம் செலவழிப்பதற்கான

நிதியை வழங்குதல் ஆகிய நன்மைகளைக் கொண்டது. இவை அரசாங்கத்தால் பல்வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றுள் சில,

- பொது உள்கட்டமைப்புக்கான நிதி
- வளர்ச்சி மற்றும் நலத்திட்டங்கள்
- பாதுகாப்பு செலவுகள்
- அறிவியல் ஆராய்ச்சி
- பொது காப்பீடு
- மாநில மற்றும் அரசு ஊழியர்களின் சம்பளம்
- அரசாங்க செயல்பாடுகள்
- பொது போக்குவரத்து
- ஓய்வூதிய திட்டங்கள்
- சட்ட அமலாக்கம்
- பொது சுகாதாரம்
- பொது கல்வி

வரி செலுத்துவதன் நன்மைகள்

வரி விதிக்கப்படுவோர், (அடிப்படை விலக்கு வரம்பை மீறும் வருவாய்க்கு மட்டும்) தங்கள் வருமான வரிக் கணக்கைத் தாக்கல் செய்வது கட்டாயமானதும் நன்மை பயப்பதும் ஆகும். வரி விலக்கிற்கு பின்னரும் தாக்கல் செய்வதே நல்லது. நமது வருமானம் அடிப்படை விலக்கு வரம்பை விட குறைவாக இருந்தாலும், வரிகளை தாக்கல் செய்வதில் நன்மைகள் உள்ளன. சரியான நேரத்தில் வரி செலுத்துவதால் கிடைக்கும் சில நன்மைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- **கடன் ஒப்புதல்கள்:** வீட்டுக் கடன்கள், வாகனக் கடன்கள் போன்ற கடனுக்காக விண்ணப்பிக்கும் போது பெரிய வங்கிகள் 2 முதல் 3 ஆண்டிற்கு உரிய வருமான வரிக் கணக்குகளின் நகலைக் கோரலாம். வருமான வரி இரசீது அதிக கடன் தொகையைப் பெறவும் முதலில் நிராகரிக்கப்பட்ட கடன் விண்ணப்பத்தை மறுபரிசீலனை செய்யவும் உதவும். ஏனென்றால், வங்கிகள் நமது வருமானத்தின் அடிப்படையில் கடனைத் திருப்பிச் செலுத்தும் திறனைக் கணக்கிடுகின்றன. வருமான வரி அறிக்கைகள் முந்தைய ஆண்டுகளில் செலுத்தப்பட்ட வருமானம் மற்றும் அதற்கு செலுத்தப்பட்ட வரிகளின் அளவைத் தெளிவாக வழங்குகிறது.
- **அயல்நாட்டுநுழைவுச்சீட்டுவிண்ணப்பங்கள்:** பல வெளிநாட்டு தூதரகங்கள் அயல்நாட்டு நுழைவுச்சீட்டு நேர்காணலின் போது முந்தைய ஆண்டுகளின் வருமான வரிக் கணக்கை கேட்பார். சிலருக்கு மிகச் சமீபத்தியது போதுமானதாக இருக்கும், மற்றவர்களுக்கு 2–3 வருடங்கள் மதிப்புள்ள வருமான வரி சான்று வழங்கப்பட வேண்டும். இது இங்கிலாந்து, அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் கனடாவிற்கு கட்டாயமாகும், ஆனால் தென்கிழக்கு ஆசிய நாடுகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு இது மிகவும் அவசியமில்லை. ஏனென்றால், வரி ஏய்ப்புக்காக நாட்டை விட்டு வெளியேற முயற்சிக்கவில்லை என்பதற்கு வருமான வரிக் கணக்குகளே சான்றாகும். பொழுதுபோக்கிற்காகவோ அல்லது வியாபாரத்திற்காகவோ வெளிநாடுகளுக்குச் செல்லும்போது கூட, நமது வருமான வரி ரசீதுகளை எடுத்துச் செல்வது சாலச் சிறந்தது, ஏனெனில் ஏதேனும் அவசரநிலையின் போது தூதரகத்தின் உதவியை நாட வேண்டியிருக்கும். அப்போது இது பயனுள்ளதாக இருக்கும்.
- **சுயதொழில் செய்பவர்கள்:** சுய தொழில் செய்வோர், ஆலோசகர்கள், தொழில்முனைவோர் மற்றும் நிறுவனங்களின் கூட்டாளர்கள் படிவம் 16க்கு தகுதியற்றவர்கள். அவர்களின் ஆண்டு வருமானம் அடிப்படை விலக்கு வரம்பை மீறினால், வருமானச் சான்றாக

வருமான வரி ரசீதுகளை வழங்கலாம். இது வரி செலுத்தியதற்கான ஆதாரமும் கூட. எந்தவொரு நிதி அல்லது வணிக நடவடிக்கைக்கும் இது அவசியம் ஆகும்.

- **அரசாங்க ஒப்பந்தங்கள்:** இது கடுமையான விதிகளாற்ற தனிப்பட்ட அரசாங்கத் துறையைச் சார்ந்தது. இருப்பினும் ஏதேனும் அரசாங்க டெண்டர்களுக்கு விண்ணப்பிக்கும் போது வருமான வரி ரசீதுகள் சில சமயங்களில் வழங்கப்பட வேண்டும். இது ஒரு நபருக்கு போதுமான வருமானம் இருப்பதையும், பணம் செலுத்தும் கடமைகளை செயல்படுத்த முடியும் என்பதையும் உறுதிப்படுத்துகிறது.
- **இழப்புகளைக் கீழ் கொண்டு செல்லுதல்:** குறுகிய கால அல்லது நீண்ட கால மூலதன இழப்புகள் பொதுவாக அடுத்தடுத்த ஆண்டுகளில் பெறப்பட்ட மூலதன ஆதாயங்களுக்கு எதிராக சரிசெய்யப்படும். எடுத்துக்காட்டாக, ஒரு வருடத்தின் நீண்ட கால மூலதன இழப்பை தொடர்ந்து 8 ஆண்டுகள் வரை முன்னெடுத்துச் செல்லலாம், அது இழப்பு ஏற்பட்ட ஆண்டில் இழந்தவற்றை மீட்டெடுக்கச் செய்யும். ஒரு நீண்ட கால மூலதன இழப்பை அந்த ஆண்டின் குறுகிய கால மூலதன ஆதாயத்துடன் மட்டுமே சரிசெய்ய முடியும். ஆனால் ஒரு குறுகிய கால மூலதன இழப்புகள், குறுகிய கால மற்றும் நீண்ட கால ஆதாயங்களுக்கு எதிராக சரிசெய்யப்படலாம். இருப்பினும், வருமான வரி கணக்கு தாக்கல் செய்திருந்தால் மட்டுமே இதைப் பெற முடியும்.
- **வரி திரும்பப் பெறுதல்களை கோருதல்:** வருமான வரிக் கணக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தால் மட்டுமே வருமான வரி துறையிடமிருந்து செலுத்த வேண்டிய பணத்தைத் திரும்பப்பெறக் கோர முடியும். வருமானம் வரி விலக்குக்குக் கீழே இருந்தாலும், திரும்பப் பெறல் தாக்கல் செய்யப்பட்டால், வெவ்வேறு சேமிப்புக் கருவிகளில் இருந்து பணத்தைத் திரும்பப் பெறலாம். இதற்கு நிலையான வைப்பு ஒரு உதாரணமாகும். இதில் 10% வரி விலக்கு அளிக்கப்படுகிறது.
- **ஆயுள் காப்பீடு:** ரூ.50 லட்சம் முதல் ரூ.1 கோடி வரை ஆயுட் காப்பீடு தொகையை வருமான வரிக் கணக்குகளை வழங்குவதன் மூலம் மட்டுமே பெற முடியும். இது ஆண்டு வருமானத்தை சரிபார்க்க உதவுகிறது. வருமான வரி திரும்பப் பெறல் இரசீதுகள் அல்லது அதிக வருமானம் இருக்கும்போது மட்டுமே இத்தகைய உயர் காப்பீடு வழங்கப்படுகிறது.
- **இழப்பீடு:** சுயதொழில் செய்பவர்களுக்கு, உடல் ஊனம், விபத்து, மரணம் விளைவிக்கும் மோட்டார் வாகன விபத்து ஆகியவை ஏற்பட்டால் இழப்பீடு கோருவதற்கு வருமான வரி ரசீதுகள் வழங்கப்பட வேண்டும். ஏனென்றால், சரியான இழப்பீட்டைப் பெறுவதற்கு, நபரின் வருமானம் முதலில் நிறுவப்பட வேண்டும்.

வரி செலுத்தாமல் இருப்பதற்கான அபராதம்:

வரி ஏய்ப்பு செய்யும் எந்தவொரு தனிநபர் அல்லது நிறுவனத்திற்கும் அரசாங்கம் பல்வேறு அபராதங்களை விதிக்கிறது. அதன் அளவு செலுத்தப்படாத வரியின் வகையைப் பொறுத்தது. வரியாக செலுத்த வேண்டிய தொகையை, அபராதம் மற்றும் அதன் வட்டி ஆகியவற்றை அபராதமாக செலுத்த வேண்டும்.

வருமான வரியை கற்றுக்கொள்வோம்

வருமான வரி என்பது தனிநபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு அவர்கள் ஈட்டிய வருமானம் அல்லது லாபத்தின் அடிப்படையில்

விதிக்கப்படும் வரியாகும். வருமான வரி பொதுவாக வருமானத்தின் வரி விகிதத்தின் விளைவாக கணக்கிடப்படுகிறது.

வருமான வரி விலக்குகள்

வரி செலுத்துகைக்கு உட்பட்ட வருமானத்தில் ரூ.3 லட்சத்திற்கு மேல் சம்பாதிப்பவர்கள் தங்களின் பொருந்தக்கூடிய வரி அடைப்புக்குறியின் அடிப்படையில் வருமான வரி செலுத்த வேண்டும். இது தனிநபர் செலுத்த வேண்டிய வருமான வரியின் அளவாகும், இருப்பினும், ஒரு சில வரிகள் சேமிப்பு உத்திகளைப் பயன்படுத்துவதன் மூலம் குறைக்கப்படும். ELSS, பரஸ்பர நிதிகள், PPF, EPF, வரி–சேமிப்பு நிலையான வைப்பு, அஞ்சல் அலுவலக சேமிப்புத் திட்டங்கள், ஆயுள் காப்பீடு, உடல்நலக் காப்பீடு மற்றும் பிற முதலீடுகள் போன்றவை விலக்கு செலவுகளுக்கு எடுத்துக்காட்டுகள் ஆகும். இவற்றுள் பெரும்பாலானவை 1961 வருமான வரிச் சட்டத்தின் 80C மற்றும் 80D பிரிவுகளின் கீழ் விலக்கு பெறத் தகுதியானவை.

வருமான வரித் திரும்பப் பெறுதல்:

தனிநபர்கள், சம்பளம் பெறுபவர்களாக இருந்தாலும் அல்லது சுயதொழில் செய்பவராக இருந்தாலும், ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிற்குப் பிறகும் வருமான வரியை தாக்கல் செய்ய வேண்டும். அவரது வருமானத்தைப் பொறுத்து இந்த ஆவணம் பல்வேறு ஆதாரங்களில்இருந்துதரவுகளைவழங்குகிறது. வரி செலுத்துபவரின் ஆண்டு வருவாய், வரி சேமிப்பு முதலீடுகள்/செலவுகள், மொத்த வரிப் பொறுப்பு, முன்கூட்டிய வரி செலுத்திய மற்றும் வேறு சில அந்த ஆதாரங்களுள் அடங்கும். பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு முன், வருமான வரித் துறை ஒப்புகை எண்ணை வழங்கிய பிறகு, தாக்கல்செய்யப்பட்டவற்றின் உண்மைதன்மையை மதிப்பிடும் அதிகாரி சரிபார்க்கிறார்.

செயல்பாடு 1

இந்தியாவில் தனிநபர் வருமானத்துக்கான வரியின் சதவீதத்தைக் கண்டறியவும்

1. ₹ 5,00,000 வரை …….%
2. ₹ 5,00,001 – ₹ 10,00,000 …….%
3. ₹ 10,00,000 க்கு மேல் …….%

8.7 சரக்கு மற்றும் சேவை வரி (GST)

அறிமுகம்

சரக்கு மற்றும் சேவை வரி (GST– Goods and Services Tax) என்பது சரக்குகள் மற்றும் சேவைகளின் விநியோகத்தில் இந்தியாவில் பயன்படுத்தப்படும் மதிப்புக் கூட்டு வரியின்(VAT) வழி தோன்றலாகும். ஜிஎஸ்டி என்பது வாட் வரியின் டிஜிட்டல் வடிவமாகும், இதில் நாம் பொருட்கள் மற்றும் சேவைகளையும் கண்காணிக்க முடியும். VAT & GST இரண்டும் ஒரே வரிவிதிப்பு அடுக்குகளைக் கொண்டுள்ளன.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி வசூலிப்பதற்கு ஐந்து வெவ்வேறு வரி அடுக்குகளாக பிரிக்கப்பட்டுள்ளன:

1. 0% – அத்தியாவசிய பொருட்கள்
2. 5% – வெகுஜன நுகர்வு பொருட்கள்,
3. 12% – பதப்படுத்தப்பட்ட உணவு
4. 18% – தனிப்பட்ட பராமரிப்பு மற்றும் சாதனங்கள்.
5. 28% – ஆடம்பர பொருட்கள்.

இருப்பினும், பெட்ரோலியப் பொருட்கள், மதுபானங்கள் மற்றும் மின்சாரம் ஆகியவை ஜிஎஸ்டியின் கீழ் வரி விதிக்கப்படுவதில்லை. அதற்குப் பதிலாக முந்தைய வரி முறையின்படி தனிப்பட்ட மாநில அரசுகளால் தனித்தனியாக வரி விதிக்கப்படுகிறது.

www.tnschoolbooks.in

GST யின் கீழ் வரிகள்

GST பல வரிகளை உள்ளடக்கியது அவைகள்:

- மத்திய கலால் வரி
- சேவை வரி
- கூடுதல் சுங்க வரி
- கூடுதல் கட்டணம்
- மாநில அளவிலான மதிப்பு கூட்டு வரி
- ஆக்ட்ரோய் (Octroi)

மாநிலங்களுக்கு இடையேயான சரக்கு போக்குவரத்துக்கு விதிக்கப்பட்ட மற்ற வரிகளும் GST யின் கீழ் நீக்கப்பட்டுள்ளன. பொருட்கள் மற்றும்/அல்லது சேவைகளின் விற்பனை, பரிமாற்றம், கொள்முதல், பண்டமாற்று, குத்தகை அல்லது இறக்குமதி போன்ற அனைத்து பரிவர்த்தனைகளுக்கும் GST விதிக்கப்படுகிறது.

சரக்கு மற்றும் சேவை வரிக்குள் அகப்படாத பொருட்கள்

- மனித நுகர்வுக்கான மது (அதாவது வணிக பயன்பாட்டிற்கு இல்லாதது).
- பெட்ரோல் மற்றும் பெட்ரோலிய பொருட்கள் (ஜிஎஸ்டி பிற்காலத்தில் பொருந்தும்), அதாவது பெட்ரோலியம் கச்சா, அதிவேக டீசல், மோட்டார் எரிவாயு (பெட்ரோல்), இயற்கை எரிவாயு, விமான விசையாழி எரிபொருள்.

பெயரிடலின் ஒத்திசைவான குறியீட்டு அமைப்பு (HSN code)

பெயரிடலின் ஒத்திசைவான அமைப்புக் குறியீடுகளின் நோக்கம் GSTயை முறையாகவும் உலகளவில் ஏற்றுக்கொள்ளவும் செய்வதாகும்.

சரக்கு மற்றும் சேவை வரி நெட்வொர்க் (GSTN)

GSTN மென்பொருள் இன்ஃபோசிஸ் தொழில்நுட்ப அமைப்பினால் உருவாக்கப்பட்டது. இது கணினி வளங்களை வழங்கும் தகவல் தொழில்நுட்ப நெட்வொர்க் NIC ஆல் பராமரிக்கப்படுகிறது. "சரக்கு மற்றும் சேவை வரி நெட்வொர்க்" (GSTN) என்பது ஒரு அதிநவீன வலையமைப்பை உருவாக்குவதற்காக செயல்படுத்தப்படும் ஒரு இலாப நோக்கமற்ற அமைப்பாகும், இது பங்குதாரர்கள், அரசு மற்றும் வரி செலுத்துவோர் ஆகியோர், ஒரே மூலத்திலிருந்து தகவல்களை பெறுவதற்கு அணுகக்கூடியது.

சரக்கு மற்றும் சேவை வரியை அது சம்பந்தப்பட்ட பரிவர்த்தனையின் அடிப்படையில் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒரு வணிகமானது அதன் சரக்கு மற்றும் சேவை வரியைத் தீர்மானிக்கும் முன், பின்வரும் அட்டவணையை மதிப்பிடுவது அவசியம்.

சரக்கு மற்றும் சேவை வரியின் வகைகள்

1. மாநில சரக்கு மற்றும் சேவை வரி (SGST)

இது ஒரு மாநிலத்திற்குள் சேவைகள் மற்றும் தயாரிப்புகளின் விற்பனைக்கு செலுத்த வேண்டிய வரியைக் குறிக்கிறது. இது மதிப்பு கூட்டப்பட்ட வரி, நுழைவு வரி, மாநில விற்பனை வரி, பொழுதுபோக்கு வரி, கூடுதல் கட்டணம் மற்றும் வரியின் மீதான வரி உட்பட முந்தைய வரிகளை மாற்றுகிறது.

2. மத்திய சரக்கு மற்றும் சேவை வரி (CGST)

மாநிலங்களுக்குள் பொருட்களின் விநியோகத்திற்கு விதிக்கப்படும் வரி CGST ஆகும். CGST என்பது மத்திய அரசால் சரக்குகள் மற்றும் சேவைகள் ஆகிய இரண்டிற்கும் மாநிலங்களுக்குள்ளான பரிமாற்றத்திற்கு விதிக்கப்படும் வரியாகும். இதில் சேவை வரி, மத்திய கலால் வரி, CST, SAD, சுங்க வரி போன்றவை அடங்கும்.

3. யூனியன் பிரதேச சரக்கு மற்றும் சேவை வரி (UTGST)

இவை அந்தமான் நிக்கோபார், டாமன் மற்றும் டையூ, சண்டிகர், தாத்ரா நகர் ஹவேலி போன்ற யூனியன் பிரதேசங்களில் பொருட்கள் மற்றும் சேவைகளின் விற்பனைக்கு பொருந்தும் வரிகள்.

www.tnschoolbooks.in

4. ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி (IGST)

மாநிலங்களுக்கு இடையேயான பொருட்கள் மற்றும் சேவைகளின் விற்பனையானது வரிவிதிப்புக்கு வழிவகுக்கிறது இது IGST எனப்படும். வணிகங்கள் சேவைகள் மற்றும் தயாரிப்புகளை ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு மாற்றும் போது, இவ்வரியை செலுத்த வேண்டும்.

செயல்பாடு 1

சரக்கு மற்றும் சேவை வரியில் (GST) உள்ளடக்கப்பட்ட ஏதேனும் 2 மத்திய வரிகளைக் கண்டறியவும்

1 …………………….…………………………

2 …………………….…………………………

மதிப்பீடு

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் (1 மதிப்பெண்)

1. TVM –ன் விரிவாக்கம்

   அ) Time Value of Marketing

   ஆ) Time Value of Money

   இ) Time Value of Mark

   ஈ) Time Value of Management

2. பின்வருவனவற்றுள் எது பணத்தின் கால மதிப்பிற்க்கான சூத்திரம்?

   அ) PV=FV/(1+r) ஆ) FV=PV/(1+r)

   இ) PV=FV/(1–r) ஈ) FV=PV/(1–r)

3. டிஜிட்டல் ஊடகம் மூலம் நிதி பரிவர்த்தனைகளை வழங்குவது _________ என அழைக்கப்படுகிறது

   அ. இணைய நிதியியல்

   ஆ. கைபேசி நிதியியல்

   இ. டிஜிட்டல் நிதியியல்

   ஈ. தொலை நிதியியல்

4. டிஜிட்டல் நிதியியல் ____________ற்கு மிகவும் முக்கியமானதாகும்.

   அ. நிலையற்ற பொருளாதாரம்

   ஆ. பணமில்லா பொருளாதாரம்

   இ. சந்தை பொருளாதாரம்

   ஈ. பணப்புழக்க பொருளாதாரம்

5. பணத்தின் கால மதிப்பிற்க்கான சூத்திரத்தில் "r" என்பது எதனை குறிக்கிறது.

   அ. தற்போதைய மதிப்பு

   ஆ. எதிர்கால மதிப்பு

   இ. வட்டி விகிதம்

   ஈ. வரி விகிதம்

6. பின்வருவனவற்றுள் எது டிஜிட்டல் நிதியியல் சேவைகளின் பலன் அல்ல?

   அ. அனைத்து இடங்களிலும் அணுகக் கூடியது.

   ஆ. மிகவும் எளிமையானது மற்றும் திறன்வாய்ந்தது

   இ. சூழலுக்கு இணக்கமானது

   ஈ. அதிக டிஜிட்டல் செலவீனம்.

7. பின்வரும் எந்தத் துறையில் நிதி தொழில்நுட்பத்தை (Fintech) பயன்படுத்த முடியாது?

   அ. வேளாண்மை ஆ. காப்பீடு

   இ. சில்லரை வர்த்தகம் ஈ. ஓவியம்

8. பின்வருவனவற்றுள் எது டிஜிட்டல் நிதியியல் சேவையின் உதாரணம் அல்ல?

   அ. ஏடிஎம்(ATM)

   ஆ. பண வைப்பு இயந்திரம்

   இ. விற்பனை புள்ளி (PoS)

   ஈ. செலுத்து சீட்டு

9. பின்வருவனவற்றுள் எது டிஜிட்டல் நிதியியல் உள்ளடக்கத்தின் பாகம் அல்ல?

அ. பரிவர்த்தனை தளம்

ஆ. சில்லரை விற்பனை முகவர்

இ. மின்னணு சாதனம்

ஈ. பணம் செலுத்தும் இடம்

10. பின் வருவனவற்றுள் எது காப்பீட்டில் நிதி தொழில்நுட்பத்தின் நன்மையாகும்?

அ. கூடுதல் வளங்களை அணுகுதல்

ஆ. தனியுரிமை சவால்கள்

இ. வெவ்வேறு விதிமுறைகள்

ஈ. நிதியியல் நிச்சயமற்ற தன்மை

11. பின்வருவனவற்றுள் எது நிதியியல் கருவி அல்ல?

அ. நிலம்

ஆ. தங்கம்

இ. பிணைப்பு பத்திரம்

ஈ. கட்டிடம்

12. SEBI– ன் விரிவாக்கம்?

அ. Securities and Exchange Board of India.

ஆ. Stock and Exchange Board of India.

இ. Securities and Export Board of India.

ஈ. Stock and Export Board of India.

13. பின்வருவனவற்றுள் எது வங்கியின் அம்சம் அல்ல?

அ. எப்போதும் வளர்ந்து வருகிறது

ஆ. தொடர்புகளை ஒன்றிணைக்கிறது

இ. சந்தைப்படுத்தல் வணிகம்

ஈ. பெயர் அடையாளம்

14. எந்த ஊகவணிகர் விலை உயர்வை எதிர்பார்க்கிறார்?

அ. காளை

ஆ. கலைமான்

இ. கரடி

ஈ. முடவாத்து

15. பின்வருவனவற்றுள் எது முனைம வேட்டையர் என அழைக்கப்படுகிறது?

அ. காளை

ஆ. கலைமான்

இ. கரடி

ஈ. முடவாத்து

16. எந்த ஊகவணிகர் விலை குறைவை எதிர்பார்க்கிறார்?

அ. காளை

ஆ. கலைமான்

இ. கரடி

ஈ. முடவாத்து

17. பரந்த அளவிலான செயல்பாடுகளை கொண்ட வங்கி ___________ என அழைக்கப்படுகிறது.

அ. சிறிய நிதி வங்கி

ஆ. உள்ளூர் பகுதி வங்கி

இ. முழுமை வங்கி

ஈ. தனி வங்கி

18. GST– ன் விரிவாக்கம்

அ. General Sales Tax

ஆ. Goods and Services Tax

இ. Goods and Sales Tax

ஈ. General Services Tax

19. GST _______ ன் வழி தோன்றலாகும்.

அ. மதிப்பு கூட்டு வரி

ஆ. வருமான வரி

இ. பொழுதுபோக்கு வரி

ஈ. சேவை வரி

20. UTGST _________________ இருந்து வசூலிக்கப்படுகிறது.

அ. மாநிலங்களில்

ஆ. மாவட்டங்களில்

இ. யூனியன் பிரதேசங்களில்

ஈ. நாடு முழுவதிலும்

II. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும் (2 மதிப்பெண்கள்)

1. பணத்தின் கால மதிப்பு என்ற கருத்தை விளக்கவும்.
2. டிஜிட்டல் நிதியியல் கல்வியறிவு என்றால் என்ன?
3. காப்பீட்டு துறையில் நிதி தொழில்நுட்பம் பற்றி விளக்கம் தரவும்.
4. மறைமுக வரி என்றால் என்ன?
5. GSTN – விளக்கம் தரவும்.

III. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும் (3 மதிப்பெண்கள்)

1. டிஜிட்டல் நிதியியல் சேவை என்றால் என்ன?
2. தூய மற்றும் கலப்பு வங்கியியல் முறையை விளக்கவும்.
3. சில்லரை வர்த்தகத்தில் நிதி தொழில்நுட்பம் என்றால் என்ன? அதன் அம்சங்களை விளக்கவும்.
4. வருமான வரி மற்றும் அதன் விலக்கு பகுதி பற்றி விளக்கம் தரவும்.
5. சரக்கு மற்றும் சேவை வரி (GST) – சிறு குறிப்பு தரவும்.

IV. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும் (5 மதிப்பெண்கள்)

1. டிஜிட்டல் நிதியியல் சேவையின் நன்மைகள் யாவை?
2. ஏதேனும் ஐந்து வங்கியியல் அமைப்பு வகைகளை பற்றி விவரிக்கவும்.
3. SEBI என்றால் என்ன? அதன் நோக்கத்தை விவரிக்கவும்.
4. சரக்கு மற்றும் சேவை வரி (GST) ன் வகைகளை விரிவாக விளக்கவும்.

www.tnschoolbooks.in

வேலைசார்ந்த உலகிற்குத் தயாராகுதல்

கற்றலின் நோக்கம்

- உலகமயமாதலைப் புரிந்து கொள்ளுதல்
- உலகளாவிய வேலைக் கலாச்சாரம் மற்றும் அதை பாதிக்கும் காரணிகளைப் புரிந்து கொள்ளுதல்
- வேலை சந்தையின் ஆய்வு மற்றும் பொருத்தமான வேலைகளை அடையாளம் காணும் முறைகளைப் புரிந்து கொள்ளுதல்
- பணித் திறன்கள் மற்றும் அதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளுதல்
- நிலையான தொழில் மற்றும் நிலையான தொழிலை உருவாக்குவதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளுதல்
- வாடிக்கையாளர் தொடர்பு மற்றும் அதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளுதல்
- வாடிக்கையாளர் உறவை கட்டமைத்தலுக்கான முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளுதல்
- வேலைசார் இணையதளங்களை பற்றி அறிந்து கொள்ளுதல்
- LinkedIn இணையதளம் மற்றும் சுயவிவர உருவாக்கம் ஆகியவற்றைப் பற்றி அறிந்து கொள்ளுதல்

9.1 உலகமயமாக்கல்

அறிமுகம்

உலகமயமாக்கல் என்பது கருத்துக்கள், அறிவு, தகவல், பொருட்கள் மற்றும் சேவைகள் உலகம் முழுவதும் பரவும் செயல்முறையாகும். வணிகத்தில், ஒருங்கிணைந்த பொருளாதாரங்களை விவரிக்க உலகமயமாக்கல் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. தடையற்ற வர்த்தகம், நாடுகளிடையே மூலதனத்தின் சீரான சுழற்சி மற்றும் தொழிலாளர் சந்தைகள் உட்பட வெளிநாட்டு வளங்களை எளிதாக அணுகுதல் ஆகியவற்றால், வருமானத்தை அதிகரிக்கவும், பொது நன்மைக்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

உலகமயமாக்கலின் வகைகள்

1. **பொருளாதார உலகமயமாக்கல்:** இதில், சர்வதேச நிதியியல் சந்தைகளின் ஒருங்கிணைப்பு மற்றும் நிதி பரிமாற்றத்தின் ஒருங்கிணைப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தப்படுகிறது. சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களான, வட அமெரிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் மற்றும் டிரான்ஸ்–பசிபிக்

XII_TM_EMPS_CH09-2023.indd 168 13/03/2023 17:14:58

கூட்டாண்மை போன்றவை பொருளாதார உலகமயமாக்கலின் எடுத்துக்காட்டுகளாகும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் செயல்படும் பன்னாட்டு நிறுவனங்கள், பொருளாதார உலகமயமாக்கலில் பெரும் பங்கு வகிக்கின்றன.

2. **அரசியல் உலகமயமாக்கல்:** இந்த வகையானது அரசியல், பொருளாதார மற்றும் கலாச்சார ரீதியாக நாடுகளை ஒன்றிணைக்கும் தேசிய கொள்கைகளை உள்ளடக்கியது. நேட்டோ மற்றும் ஐ.நா போன்ற அமைப்புகள் அரசியல் உலகமயமாக்கல் முயற்சியின் ஒரு பகுதியாகும்.

3. **கலாச்சார உலகமயமாக்கல்:** உலகமயமாக்கலின் இந்த அம்சம், கலாச்சாரங்கள் ஒன்றிணைவதற்கு காரணமான தொழில்நுட்பங்கள் மற்றும் சமூகக் காரணிகளின் மீது அதிக அளவில் கவனம் செலுத்துகிறது. எளிதான தகவல்தொடர்பு, சமூக ஊடகங்களின் பரவல் மற்றும் வேகமான மற்றும் சிறந்த போக்குவரத்து வசதிகள் இதில் அடங்கும்.

9.2 உலகளாவிய வேலை கலாச்சாரம்

அறிமுகம்

அனைத்து பன்முக கலாச்சார நிறுவனங்கள் சீரான செயல்பாட்டை உறுதிசெய்யும் வகையிலும், வணிகத்தை அளவிட மற்றும் அடிமட்டத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் வகையிலும் பணியாளர்களை நிர்வகிக்க வேண்டும். இருவர் ஒரே மாதிரியானவர்கள் அல்ல. இரண்டு கலாச்சாரங்களும் ஒரே மாதிரியானது அல்ல.

உலகளாவிய வேலை கலாச்சாரத்தை பாதிக்கும் பொதுவான காரணிகள்

கலாச்சாரம், நடத்தை, மதம், மொழி, வாடிக்கையாளர் விருப்பத்தேர்வுகள், கல்வி நிலை, பழக்கவழக்கங்கள் மற்றும் தடைகள், குறுக்கு–கலாச்சார தழுவல், வெவ்வேறு நிறுவன/தொழிலாளர் மதிப்பீடுகள் மற்றும் மேலாண்மையில் உள்ள வேறுபாடுகள் ஆகியவை உலகளாவிய பணி கலாச்சாரத்தை பாதிக்கும் முக்கிய காரணிகள் ஆகும்.

குறுக்கு கலாச்சார தடைகளை எவ்வாறு எதிர்கொள்வது

- பன்முகத்தன்மையைத் ஏற்றுக்கொண்டு, கலாச்சார வேறுபாடுகளுக்கு இடமளித்தல்
- தடையற்ற தகவல் தொடர்புகளை ஊக்குவித்தல்
- குழு விதிமுறைகள் மற்றும் பரஸ்பர நிறுவன கலாச்சாரம் பற்றிய திறந்த விவாதங்களை நடத்துதல்
- பரஸ்பர கண்ணோட்டம் அல்லது பொதுவான காரணத்தைச் சுற்றி குழுவைத் திரட்டுதல்
- ஒரு உலகளாவிய தலைவராக கலாச்சார பன்முகத்தன்மைக்கு வழிகாட்டுதல்

9.3 வேலை சந்தை ஆய்வு

அறிமுகம்

வேலை சந்தை ஆய்வு என்பது ஒரு குறிப்பிட்ட வேலைக்கான வேலை சந்தையை பகுப்பாய்வு செய்வதற்கான ஒரு அளவு மற்றும் பண்பு

XII_TM_EMPS_CH09-2023.indd 169 13/03/2023 17:15:01

முறையாகும். இது ஒரு குறிப்பிட்ட வேலையின் ஈட்டும் தன்மையை தீர்மானிக்கிறது. இது ஒரே மாதிரியான வேலைகளை வழங்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை உட்பட, ஒரு தொழிலைப் பற்றிய விரிவான தகவல்களைச் சேகரிக்கும் பயனுள்ள பயிற்சி ஆகும். வேலைச் சந்தை ஆய்வு மூலம் ஒருவர் பலம் மற்றும் பலவீனங்கள் அல்லது வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்களைத் தீர்மானிக்க முடியும், மேலும் ஒரு குறிப்பிட்ட வேலையின் விவரத்தைப் பற்றிய தெளிவைப் பெறவும் முடிவுகளை எடுக்கவும் உதவுகிறது.

வேலை சந்தை ஆய்வு செய்யும் போது கருத்தில் கொள்ள வேண்டிய கேள்விகள்

- சாத்தியமிகு ஆட்சேர்ப்பு செய்யும் நிறுவனங்கள் எது?
- நிறுவனங்கள் ஆட்சேர்ப்பு செய்வதற்கு எத்தகைய அமைப்புகள் மற்றும் முறைகளை பின்பற்றுகின்றன?
- எத்தனை இணையான வேலைகள் உள்ளன?
- வேலை சந்தை எவ்வளவு பெரியது?
- எனது நேரடி மற்றும் மறைமுக போட்டி என்ன?
- எனது போட்டியின் பலம் மற்றும் பலவீனம் என்ன?

வேலை சந்தை ஆராய்ச்சி செய்வது எப்படி?

- படிப்புக்கான குறிப்பிட்ட வேலையை அமைத்தல்
- தொழில்துறை கண்ணோட்டத்தைப் பெறுதல்
- இலக்கு நிறுவனங்களில் கவனம் செலுத்துதல்
- அவர்களின் ஆட்சேர்ப்பு முறைகளை கற்றல்
- வேலைகள் பற்றிய கூடுதல் தகவல்களை சேகரித்தல்
- ஆய்வின் முடிவுகளை பகுப்பாய்வு செய்தல்
- முடிவுகளை நடைமுறைப் படுத்துதல்

செயல்பாடு 1

நீங்கள் B.Sc (கணினி அறிவியல்) பட்டதாரி என்று கற்பனை செய்து பாருங்கள். சில வேலைகளுக்கான பணியமர்த்தல் செயல்முறை நடைபெறுகிறது. நீங்கள் தகுதியுடைய வேலையைத் தேர்ந்தெடுக்கவும்

1. தரவு ஆய்வாளர்
2. நர்சிங்
3. நிரல் உருவாக்குநர்
4. கட்டிட கட்டுமானம்
5. கணினி பயிற்சியாளர்
6. விவசாயம் மற்றும் தோட்டக்கலை
7. மென்பொருள் உருவாக்குநர்
8. கணக்காளர்
9. மருத்துவர்
10. டேட்டா என்ட்ரி ஆபரேட்டர்

9.4 பணித் திறன்கள் (வேலைவாய்ப்பு)

அறிமுகம்

ஒரு பணித் திறன் என்பது ஒரு தனிநபரின் செயல்திறனை வரையறுக்கவும் அளவிடவும் பயன்படும் ஒரு குறிப்பிட்ட வேலைக்குத் தேவையான திறன், பண்பு அல்லது நடத்தை பற்றிய விளக்கமாகும். பணித் திறன்களானது பல வேலைப் பாத்திரங்கள் மற்றும் வேலையில் இருப்பவர் தனது வேலையை திறம்படச் செய்வதற்கு பெற்றிருக்க வேண்டிய அல்லது பெற வேண்டிய திறன்களை ஒருங்கிணைக்கும் ஒரு கட்டமைப்பாகும்.

XII_TM_EMPS_CH09-2023.indd 170 13/03/2023 17:15:01

பணித் திறன்களின் முக்கியத்துவம்

- பணியாளர்களுக்கு வேலையில் எதிர்பார்க்கப்படும் திறன்கள், வெளிப்படுத்த வேண்டிய முக்கிய நடத்தைகள் மற்றும் அவர்களின் திறன் நிலைகளை அதிகரிக்க உதவுகிறது
- பணியாளர்களின் பலம், வளர்ச்சிக்கான பகுதிகள், பரிந்துரைக்கப்பட்ட பயிற்சி மற்றும் வளர்ச்சி நடவடிக்கைகள் குறித்து அவர்களின் மேற்பார்வையாளர்களுடன் கலந்துரையாடுதல்
- குறிப்பிட்ட பயிற்சி மற்றும் மேம்பாட்டு வாய்ப்புகளில் கவனம் செலுத்துதலானது, பணியாளர்கள் வளரவும் சிறந்து விளங்கவும் உதவும்
- குறிப்பாக மேற்பார்வையாளர்கள் மற்றும் மேலாளர்களாக ஆவதற்கு அல்லது தொழிலை மாற்றுவதில் ஆர்வமுள்ள ஊழியர்களுக்கு ஒரு புதிய வேலையில் எதிர்பார்க்கப்படும் திறன்களைப் புரிந்து கொள்ள உதவுகிறது.

சிறந்த 10 பணித் திறன்கள் மற்றும் அவற்றை மேம்படுத்துவதற்கான செயல்பாடு

1. **தொடர்பு மற்றும் ஆளிடைத் திறன்கள் (Interpersonal Skills)**

   தொடர்பு மற்றும் ஆளிடைத் திறன்கள் என்பது நாம் எதை அடைய விரும்புகிறோம் என்பதை விளக்குதல் மற்றும் நமது கருத்துக்களையும் அபிப்ராயத்தையும் தெளிவாக வெளிப்படுத்தும் திறன் ஆகும். மற்றவர்கள் சொல்வதை அல்லது அறிவுறுத்துவதைக் கேட்பது, புரிந்துகொள்வது மற்றும் செயல்படுவது ஆகியவை இதில் அடங்கும்.

   திறனை மேம்படுத்துவதற்கான செயல்பாடு: உங்கள் படிப்பின் ஒரு பகுதியாக அறிக்கைகள் மற்றும் செயல்பாடுகளை தவறாமல் எழுதுதல்.

2. **சிக்கலைத் தீர்க்கும் திறன்**

   தர்க்க ரீதியாக சிந்தித்து பின்னடைவுகளுக்கு தீர்வு காணும் திறனாகும்.

   திறனை மேம்படுத்துவதற்கான செயல்பாடு: சிக்கலைத் தீர்ப்பதில் கவனம் செலுத்தும் பாடதிட்டத்தை தேர்வுசெய்தல்.

3. **சுய ஊக்கம்**

   புதிய யோசனைகள், தீர்வுகளைக் கொண்டு வருவதற்கான திறன் மற்றும் அறிவுறுத்தல் இல்லாமல் சுயமாக செயல்பட ஆர்வமுள்ள திறன்களாகும்.

   திறனை மேம்படுத்துவதற்கான செயல்பாடு: வேலை வாய்ப்புகள் அல்லது பயிற்சிக்கான நிறுவனங்களை அணுகுதல்.

4. **அழுத்தத்தின் கீழ் பணி**

   பணி அழுத்தத்தின் கீழ் வளைந்து கொடுக்காமல் காலக்கெடுவுக்குள் சிறந்த செயல்திறனை வழங்கும் திறன்

   திறனை மேம்படுத்துவதற்கான செயல்பாடு: வேலை, படிப்பு மற்றும் குடும்ப கடமைகளைச் சுற்றியுள்ள நேரத்தை சமநிலைப்படுத்துதல்.

5. **நிறுவன திறன்கள்**

   நிறுவன திறன் என்பது காலக்கெடுக்களை சந்திக்கும் வகையில் ஒவ்வொரு நகர்வையும் திட்டமிடுவதை வலியுறுத்தும் ஒரு முறையான அணுகுமுறை ஆகும்.

   திறனை மேம்படுத்துவதற்கான செயல்பாடு: அலுவலகம்/சமூக நிகழ்வை ஒழுங்கமைக்க உதவுதல்.

6. **குழு மனப்பான்மை**

   ஒரு பணி அல்லது இலக்கை நிறைவேற்ற பல்வேறு பின்னணிகள், துறைகள் மற்றும் நிபுணத்துவம் கொண்ட மற்றவர்களுடன் சிறப்பாக பணி செய்யும் திறன் ஆகும்

XII_TM_EMPS_CH09-2023.indd 171 13/03/2023 17:15:01

திறனை மேம்படுத்துவதற்கான செயல்பாடு: ஒரு குழுவில் சேர்தல் அல்லது குழு பணிகளில் ஈடுபடுதல்.

7. **கற்றல் திறன்**

புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்வதற்கான ஆர்வம் இன்றைய தொழில்நுட்ப உலகில் இன்றியமையாத திறனாக உள்ளது, இதில் திறன் இடைவெளிகள் விரைவாகத் தோன்றுகின்றன, மேலும் திறன் மேம்பாடு தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

திறனை மேம்படுத்துவதற்கான செயல்பாடு: புதிய பொழுதுபோக்கை மேற்கொள்ளுதல் அல்லது புதிய திறன்களைக் கற்றுக்கொள்ளுதல்.

8. **எண் மற்றும் தரவு திறன்கள்**

எண் மற்றும் தரவு திறன்கள் என்பது ஒரு கருத்தை விளக்க தரவுகளை பயன்படுத்தும் திறன் ஆகும்

திறனை மேம்படுத்துவதற்கான செயல்பாடு: கருத்தை விளக்க வரைபடங்கள் மற்றும் அட்டவணைகளைப் பயன்படுத்தவும்.

9. **பன்முகத்தன்மை முக்கியத்துவம்**

பணியிடங்களில் உள்ளவர்கள் வெவ்வேறு பின்னணியில் இருந்து வருகிறார்கள். வெவ்வேறு வயது, மதம் மற்றும் அரசியல் கருத்துக்களைக் கொண்டவர்களுடன் இணைந்து பணியாற்றக் கற்றுக்கொள்வது நமது தொழில் முன்னேற்றத்திற்கு அவசியமாகும்.

திறனை மேம்படுத்துவதற்கான செயல்பாடு: பிற துறையில் பணிபுரிய ஆர்வமுடன் இருத்தல்.

10. **சொல்லாடல் திறன்**

அனைத்து பங்குதாரர்களின் கருத்துக்களையும் கேட்ட பிறகு முடிவுகளை எடுக்கக்கூடிய வெற்றி–வெற்றி விளைவுகளை நோக்கி செயல்படும் திறன் ஆகும்

திறனை மேம்படுத்துவதற்கான செயல்பாடு: அன்றாட வாழ்வில் சொல்லாடாலை பயிற்சி செய்தல்.

செயல்பாடு 1

நீங்கள் ஒரு நிறுவனத்தில் கணக்காளராக உள்ளீர்கள். உங்கள் சக ஊழியர்களில் ஒருவர் எப்போதும் உங்களுடன் பேசிக்கொண்டே இருப்பார். பணியிடங்களில் பேசுவது நல்லதல்ல என்பதை நீங்கள் புரிந்துகொள்கிறீர்கள். உங்கள் மேலாளர்களில் ஒருவர் இந்த காட்சியைப் பார்க்கிறார். வேலை நேரத்தில் பேசுவது நல்லதல்ல என்பதை உங்கள் சக ஊழியருக்கு நீங்கள் தெரிவிக்க விரும்புகிறீர்கள். அவர்களை காயப்படுத்தாமல் எப்படி செய்தியை தெரிவிப்பீர்கள்?

உங்கள் பதில்:

____

____

____

9.5 நிலையான தொழில்

அறிமுகம்

ஒரு நிலையான தொழில் என்பது முழு பணி வாழ்க்கைச் சுழற்சியில் காலம் முழுதும் நிலைத்திருக்கும் ஒன்றாகும். ஒரு நிலையான தொழில் என்பது பல ஆண்டுகளாக ஒரே மாதிரியான திறன்களைக் கோரும் வேலைவாய்ப்புடன் வளரக்கூடியது. மேலும் அது நமது திறன்களையும் அனுபவத்தையும் சிறப்பாக பயன்படுத்துகிறது. ஒரு நிலையான தொழில் அதன் காலம் முழுவதும் ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும், திறன் மற்றும் வேலைவாய்ப்புடன் இருக்க உதவுகிறது.

ஒரு நிலையான தொழில் என்பது அவர்களின் நலன்கள், பலம், மதிப்புகள், தொடர்ந்து கற்றல் மற்றும் புதுப்பித்தலை வழங்குகிறது. இறுதியில், ஒரு நிலையான தொழிலை உருவாக்குவது தொழில் மற்றும் வாழ்க்கையின் பல அம்சங்களை நீண்ட காலத்திற்கு பராமரிக்கும் திறனை வழங்குகிறது.

- வேலை செயல்திறன் மற்றும் உற்பத்தித்திறன்

- வேலை வாய்ப்பு
- வேலை–வாழ்க்கை சமநிலை
- ஆரோக்கியம்



ஒரு நிலையான தொழிலை எவ்வாறு உருவாக்குவது

- **நாம் பொறுப்பில் உள்ளோம் என்பதை அறிந்து கொள்ளுதல்**

நிறைவான, அர்த்தமுள்ள மற்றும் நமது திறன்கள், அனுபவம் மற்றும் வாழ்க்கை இலக்குகளை சிறப்பாகப் பயன்படுத்தக்கூடிய ஒரு தொழிலை நம்மால் மட்டுமே உருவாக்க முடியும்.

- **வளர்ச்சி மனப்பான்மையைக் கொண்டிருத்தல்**

கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு மூலம் நமது திறன்களை வளர்த்துக் கொள்ள முடியும் என்று நாம் புரிந்து கொள்ளும்போதும், நிலையான தொழிலை உருவாக்குவதற்கான நமது சக்தி எல்லையற்றது.

- **நம்மை உற்சாகப்படுத்தும் நபர்களுடன் பணிபுரிதல்**

சில நபர்களுடன் பணிபுரிவது நமது வேலையில், நாளுக்கு நாள் நம்மை உற்சாகமாகவும், ஆர்வமாகவும் உணரச் செய்யும். இது நிலையான தொழிலை மேம்படுத்த உதவுகிறது.

- **இறுதி ஆட்டத்தை நோக்குதல்**

ஒரு நிலையான தொழில் என்பது இறுதி ஆட்டத்தை பற்றியது. மாறிக்கொண்டே இருக்கும் பணியிடத்தில் எதிர்காலப் போக்குகளுக்கு ஏற்றார்போல் நம் எதிர்கால பார்வைகளில் கவனம் செலுத்துதல்.

- **நெகிழ்வாக இருத்தல்**

நிலையான தொழில் வாழ்க்கையின் அடிப்படைகளில் ஒன்று நெகிழ்வுத்தன்மை மற்றும் வேலை–வாழ்க்கை சமநிலையைக் கொண்டிருப்பது. நமது பணிக்காலத்தில் நாம் மகிழ்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும், உற்பத்தித் திறனுடனும் இருக்க வேண்டும்.

செயல்பாடு 1

தற்காலிக தொழிலாளர்கள் பற்றிய தகவல்களை சேகரிக்கவும். ஒரு நிலையான தொழிலைக் கொண்டவரிடமிருந்து அவர்கள் எவ்வாறு வேறுபடுகிறார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? தற்காலிக தொழிலாளியாக இருப்பதன் நன்மைகள் மற்றும் தீமைகளை கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் பட்டியலிடுங்கள்.

நன்மைகள்	தீமைகள்

9.6 வாடிக்கையாளர் தொடர்பு

அறிமுகம்

ஒரு வாடிக்கையாளர் தொடர்பு என்பது ஒரு வாடிக்கையாளர் மற்றும் ஒரு நிறுவனம் அல்லது ஒரு நிறுவனத்தின் தனிநபருக்கு இடையேயான தகவல் தொடர்புகளை குறிக்கிறது. ஒரு வாடிக்கையாளருடனான ஒவ்வொரு தொடர்புகளும் அவர்களுடன் இணைப்பை ஏற்படுத்தவும், அவர்களை மகிழ்விக்கவும், அவர்களின் தக்கவைப்பு மற்றும் கவனத்தை ஈர்க்கவும் ஒரு வாய்ப்பாகும்.

வாடிக்கையாளர் தொடர்புகளின் முக்கியத்துவம்

நம்பகத்தன்மை: ஒருவரின் வணிகம் நம்பகமானதா என்பதை வாடிக்கையாளர்கள்

அறிய விரும்புகிறார்கள். நல்ல வாடிக்கையாளர் சேவையை வழங்குதல், தொடர்ந்து பின்தொடர்வதை உறுதி செய்தல் மற்றும் வாடிக்கையாளர் பின்னூட்டத்தின் அடிப்படையில் செயல்படுதல் ஆகியவை ஒருவரின் நம்பிக்கையைப் பெறவும் வாடிக்கையாளர் விசுவாசத்தைப் பேணவும் உதவுகிறது.

உத்தரவாதம்: நிறுவனத்துடன் வணிகம் செய்வதன் மூலம் வாடிக்கையாளர்கள் சரியான தேர்வை செய்துள்ளார்கள் என்பதை அவர்களுக்கு உறுதிப்படுத்த வேண்டும். வாடிக்கையாளர்களுக்கு நிகழ்நேர உதவி மற்றும் ஒருவரின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வது போன்றவை அவர்களின் முடிவை சரிபார்க்க உதவும்.

பரிவு: ஒவ்வொரு வாடிக்கையாளரும் தங்களை புரிந்து கொள்ள விரும்புகிறார்கள். உதவி குழுக்கள் தங்களின் கண்ணோட்டத்தை உணர வேண்டுமென வாடிக்கையாளர்கள் விரும்புகிறார்கள். பல்வேறு மையங்களின் மூலம் தனிப்பயனாக்கப்பட்ட வாடிக்கையாளர் தொடர்புகள் வாடிக்கையாளர்களை கவனிக்கக் கூடியதாகவும் திருப்தியாகவும் உணர உதவுகிறது.

பதிலளித்தல்: எந்த வாடிக்கையாளர்களும் காத்திருக்க விரும்புவதில்லை. அவர்கள் தங்கள் பிரச்சினைகளுக்கு விரைவான மற்றும் பயனுள்ள தீர்வை எதிர்பார்க்கிறார்கள். சுய–சேவை விருப்பங்கள், தானியங்கி உரையாடல் செயலி (chatbots) மற்றும் சரியான நேரத்தில் பதில்கள் கிடைப்பது போன்றவை அவர்களின் அதிருப்தியைக் குறைக்கவும், மகிழ்ச்சியான வாடிக்கையாளர்களை உருவாக்கவும் உதவுகிறது.

ஒவ்வொரு வாடிக்கையாளரின் தொடர்பையும் நேர்மறையாக மாற்றுவதற்கான பயனுள்ள வழிகள்

- வெளிப்படையாக இருத்தல்
- தொடர்பு மற்றும் தகவல் பரிமாற்றம்
- வாடிக்கையாளர் பாராட்டுக்களை வெளிப்படுத்துதல்
- சிக்கல்களை விரைவாக தீர்த்தல்
- பரிவு காட்டுதல்
- தொடர்புகளை முடிந்தவரை எளிதாக்குதல்
- வாடிக்கையாளர் விசுவாசத்தை ஊக்குவித்தல்
- வாடிக்கையாளர்களை மேம்படுத்துதல்
- வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளைப் புரிந்து கொள்ளுதல்
- ஒரு நல்ல கலாச்சாரத்தை வளர்த்துக் கொள்ளுதல்

9.7 வாடிக்கையாளர் உறவுகளை உருவாக்குதல்

அறிமுகம்

வாடிக்கையாளர்களுடன் பணிபுரியும் உறவை உருவாக்குவது வணிகத்தின் நீண்டகால வெற்றிக்கு முக்கியமாகும். வாடிக்கையாளர் உறவை உருவாக்குவது என்பது முந்தைய, தற்போதைய மற்றும் சாத்தியமான வாடிக்கையாளர்களுடனான தொடர்புகளை

நிர்வகிப்பதாகும். தங்கள் வாடிக்கையாளர் உறவுகளை நன்கு நிர்வகிக்கும் நிறுவனங்கள் வாடிக்கையாளர் அனுபவ உத்தியை உருவாக்குகின்றன, இது வாடிக்கையாளர் தக்கவைப்பை வலுப்படுத்துகிறது மற்றும் புதிய வாடிக்கையாளர் அணிதிரட்டலை ஊக்குவிக்கிறது.

வாடிக்கையாளர் உறவுகளை உருவாக்குவதன் முக்கியத்துவம்

வாடிக்கையாளரின் வாழ்நாள் மதிப்பை அதிகரிக்கவும் (CLV):

வாடிக்கையாளர்களை நீண்ட காலத்திற்க்கு வணிகத்தில் தக்கவைப்பதன் மூலம், வாழ்நாள் உறவில் அவர்கள் அளிக்கும் பயன் அதிகரிக்கிறது. உயர் CLV என்பது ஒவ்வொரு வாடிக்கையாளரும் நிறுவனத்திற்கு அதிக வருவாயைக் கொண்டு வருவதாகும்.

வாடிக்கையாளர் இடையூறுகளை குறைத்தல்:

பெரும்பாலான வாடிக்கையாளர்கள் தங்களுக்கு மோசமான வாடிக்கையாளர் அனுபவம் இருந்தால் ஒரு நிறுவனத்திடமிருந்து வாங்குவதை நிறுத்துகிறார்கள். வாடிக்கையாளர் உறவுகளை உருவாக்குவதற்கும் சிறந்த அனுபவங்களை வழங்குவதற்கும் நிறுவனம் சரியான நுட்பங்களைப் பின்பற்றும் போது, அது வாடிக்கையாளர்களை மீண்டும் கொண்டுவருகிறது மற்றும் வாடிக்கையாளர்கள் நிறுவனத்தை விட்டு வெளியேறும் வாய்ப்புகளை குறைக்கிறது.

வாடிக்கையாளர் விசுவாசத்தை மேம்படுத்துதல்:

ஒரு புதிய வாடிக்கையாளரைப் பெறுவதற்கு ஏற்கனவே இருக்கும் வாடிக்கையாளரைத் தக்கவைத்துக்கொள்வதை விட ஐந்து மடங்கு அதிகமாக செலவாகும். ஒரு நிறுவனத்தின் வாடிக்கையாளர் உறவுகளை பராமரிக்கும் விதமானது அதன் வாடிக்கையாளர் விசுவாசத்தை தீர்மானிக்கிறது. சிறந்த வாடிக்கையாளர் சேவையின் மூலம் வாடிக்கையாளர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவது அவர்களின் திருப்தியின் அளவை அதிகரிக்கிறது.

வாடிக்கையாளர் உறவுகளின் தரத்தை மேம்படுத்துவதற்கான உத்திகள்:

- தனக்கான வாடிக்கையாளர்கள் யார் என்பதை அறிதல்
- தனிப்பயனாக்கும் தகவல்தொடர்பு
- வாடிக்கையாளர் பின்னூட்டத்தை சேகரித்தல்
- நேர்மையாக இருப்பதன் மூலம் நம்பிக்கையை வளர்த்தல்
- வாடிக்கையாளர்களுக்கு வெகுமதி அளித்தல்
- பதிலளிக்கக்கூடிய உதவியை வழங்குதல்
- வாடிக்கையாளர்களுக்கு பயிற்றுவித்தல்
- நேர்மறையான வாடிக்கையாளர் அனுபவங்களை வழங்குதல்
- உகந்த வாடிக்கையாளர் உறவு மேலாண்மை மென்பொருளைப் பயன்படுத்துதல்

செயல்பாடு 1

கவி ஒரு இளம் தொழில்முனைவோர், அவர் ஆடை வடிவமைப்பாளர் கடையை நடத்தி வருகிறார். அவர் இளம் தொழில்முனைவோராக இருப்பினும் வாடிக்கையாளர்களைக் கையாள்வதில் வல்லவர். அவர் எப்போதும் தனது கடையில் வாடிக்கையாளர்களுக்கு தண்ணீர் மற்றும் சிற்றுண்டிகளை வழங்குகிறார். அவர் பகுதி நேரமாக கடையை நடத்தி வருகிறார், ஆனால் அருகிலுள்ள முழு நேரமாக இயங்கும் கடையை விட அதிக வாடிக்கையாளர்களைப் பெறுகிறார். நீங்கள் ஒரு வணிகத்தை நடத்துவதாக கற்பனை செய்து கொள்ளுங்கள். வாடிக்கையாளர்களுடன் நல்ல உறவை உருவாக்க சில ஆலோசனைகளை கொடுங்கள்.

1. ____________________

2. ____________________

3. ____________________

XII_TM_EMPS_CH09-2023.indd 175 13/03/2023 17:15:02

9.8 இணையதளங்கள் மூலம் வேலைகளுக்கு விண்ணப்பித்தல்

அறிமுகம்

வேலைவாய்ப்பு இணையதளங்கள் என்பவை வேலைகளை விளம்பரப்படுத்தும் மற்றும் தற்குறிப்புகளைத் தேடும் இணையதளங்கள் ஆகும். அவை ஏறக்குறைய ஒவ்வொரு பணியமர்த்தல் செயல்முறையின் ஒருங்கிணைந்த பகுதியாக உள்ளன மற்றும் அவற்றை திறம்பட பயன்படுத்தும்போது குறைந்த செலவில் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரரிடம் எடுத்துச்செல்லுகின்றன.

ஒரு நிறுவனத்திற்கும் ஒரு விண்ணபதாரருக்கும் இடையிலான பாலமாக வேலை இணையதளங்கள் உள்ளன. இவ்வகை வலைத்தளங்கள் பல நிறுவனங்கள் தங்களின் வேலைக்கான காலியிடங்களை இடுகையிடும், இதனால் வேலை தேடுபவர்கள் கிடைக்கும் வேலைகளைப் பற்றி அறிந்து கொள்வதோடு அந்த வேலைகளுக்கு விண்ணப்பிக்கலாம். இது விண்ணப்பதாரர்கள் மற்றும் நிறுவனங்களை இணைத்து, ஒன்றான வளர்ச்சிக்கு உதவுகிறது.



இந்தியாவில் உள்ள 5 பிரபல வேலை வாய்ப்பு இணையதளங்கள்

- Naukri.com.
- LinkedIn.
- Indeed.com.
- Glassdoor.
- Monster.com.

சரியான ஆட்சேர்ப்பு தளங்களின் பண்புகள்

பட்டியலிடப்பட்ட சிறந்த நிறுவனங்கள்

சிறந்த இணைய வேலைவாய்ப்பு தளங்கள் முதன்மையான நிறுவனங்களுடன் இணைந்து, திறன்மிக்க விண்ணப்பதாரர்களுக்கு சிறந்த வேலையை வழங்குகின்றன.

முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்தல்:

ஆட்சேர்ப்பு செய்பவர்களுக்கும் வேலை தேடுபவர்களுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதில் வேலைவாய்ப்பு இணையதளங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. தகுதிவாய்ந்த வேலை தேடுபவர்கள், தங்களின் அறிவு மற்றும் திறன்களைப் பயன்படுத்தி பொருத்தமான வேலையைத் தேடுகிறார்கள். மறுபுறம், பணியமர்த்துபவர்கள் சரியான திறமை, தகுதி, பொருத்தமான மற்றும் காலியிடத்தை பூர்த்தி செய்யக்கூடிய திறன் ஆகியவற்றைக் கொண்ட விண்ணப்பதாரர்களைத் தேடுகிறார்கள். இன்னும் எளிமையான வார்த்தைகளில், இது வேலை தேடுபவர்கள், புதியவர்கள் அல்லது அனுபவம் வாய்ந்தவர்கள் மற்றும் முதலாளிகள் ஒருவருக்கொருவர் தேவைகளைப் பூர்த்தி செய்யச் சந்திக்கும் தளமாகும்.

தரமான சேவை

தரமான வேலைவாய்ப்பு இணையதளங்கள் தற்குறிப்பு எழுதும் சேவைகள் மற்றும் தேவைக்கேற்ப அவற்றைப் பதிவேற்றம் செய்வதன் மூலம் சிறந்த முடிவுகளையும் திருப்தியையும் அளிக்கின்றன. மேலும் வேலை தேடுபவர்களுக்கு, வழக்கமாக வேலை சார்ந்த விழிப்பூட்டல்களை வழங்குகின்றன.

இலவசம் அல்லது பணம் செலுத்துதல்

பலர் நிதிநிலை சரியில்லாததால், குறிப்பாக அவர்கள் வேலைக்குப் புதியதாக இருந்தால், வேலை இணையதளங்களுக்குப் பணம் செலுத்துவதில்லை. ஆனால் அதே நேரத்தில் அனுபவம் வாய்ந்த விண்ணப்பதாரர்கள், ஆட்சேர்ப்பு இணையதளங்களின் தரமான சேவையின் காரணமாக

XII_TM_EMPS_CH09-2023.indd 176 13/03/2023 17:15:03

www.tnschoolbooks.in

பணம் செலுத்துகிறார்கள். ஒரு நல்ல விண்ணப்பதாரரை பணியமர்த்துவதற்கு உதவும் பல இணையதளங்கள், ஆட்சேர்ப்பு நிறுவனத்தால் பணம் செலுத்தப்படுகிறன.

எளிதான பதிவு:
பதிவு நடைமுறை சிக்கலானதாக இருக்கக்கூடாது, ஏனெனில் எந்த ஒரு விண்ணபதாரரும் தனது பதிவை உறுதிப்படுத்த பல்வேறு படிகளைப் பூர்த்திசெய்ய விரும்பமாட்டார்கள்.

தற்போதைய வாய்ப்புகள்:
எப்போதும், சிறந்த வேலைவாய்ப்பு இணையதளங்கள் தினசரி அடிப்படையில் தற்போதைய வேலைவாய்ப்புகளைக் காட்டுகின்றன. எனவே விண்ணப்பதாரர்கள், தாங்கள் ஒரு வேலையில் இடம்பெறும்வரை விண்ணப்பிக்க வேண்டும்.

வலைப்பதிவு/ ஆலோசனைப் பக்கம்:
வேலை தேடுபவர்களுக்கு ஆலோசனைகள் அல்லது உதவிக்குறிப்புகளை வழங்க வேலைவாய்ப்பு இணையதளங்கள் வலைப்பதிவுப் பக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும். நேர்காணல்கள், தவிர்க்க வேண்டிய தவறுகள், தொழில்துறையின் சமீபத்திய போக்குகள் ஆகியவற்றை எதிர்கொள்ள இது அவர்களுக்கு உதவும்.

மொபைல் பயன்பாடு
வேலை தேடுபவரின் வசதிக்காக, எந்த நேரத்திலும் எங்கு வேண்டுமானாலும் அதைச் சரிபார்க்க மொபைல் செயலி இருக்க வேண்டும். இது வேலை தேடுபவர் மற்றும் வேலைவாய்ப்பு இணையதளம் ஆகிய இரண்டிற்கும், அவர்தம் கணக்கை செயலில் வைத்திருக்க உதவும்.

செயல்பாடு 1

வேலைவாய்ப்பு இணையதளங்களில் ஏதேனும்ஒன்றைப்பார்வையிடவும்.பாரம்பரிய ஆட்சேர்ப்பு முறைக்கும் வேலைவாய்ப்பு இணையதளங்களுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைக் குறிப்பிடவும்

பாரம்பரிய ஆட்சேர்ப்பு	வேலைவாய்ப்பு இணையதளங்கள்
எ.கா: நேருக்கு நேர் தொடர்பு	நேரடி தொடர்பு இல்லை. அனைத்தும் இணையத்தில் மேற்கொள்ளப்படும்.

9.9 LinkedIn சுயவிவர உருவாக்கம்

அறிமுகம்

LinkedIn என்பது இணையத்தில் உள்ள உலகின் மிகப்பெரிய தொழில்முறை வலையமைப்பு ஆகும். சரியான வேலை அல்லது உள்ளுறைப் பயிற்சியைக் கண்டறிதல், தொழில்முறை உறவுகளை இணைத்தல் மற்றும் வலுப்படுத்துதல் மேலும் தொழிலில் வெற்றிபெறத் தேவையான திறன்களைக் கற்றுக்கொள்ள ஒருவர் LinkedIn ஐப் பயன்படுத்தலாம்.

LinkedIn இணையதளத்தில் சுயவிவரத்தை உருவாக்குதல்

படி 1: LinkedIn இன் அதிகாரப்பூர்வ வலைதளத்திற்குச் செல்லவும், அதாவது in.linkedin.com

படி 2: மேல் வலது மூலையில் உள்ள சேர்தல் (join in) அல்லது பதிவு செய்தல் (sign up) பொத்தானை கிளிக் செய்யவும்.

படி 3: ஒரு புதிய பக்கம் திறக்கும்.

படி 4: முதல் மற்றும் கடைசி பெயர், மின்னஞ்சல் முகவரி மற்றும் கடவுச்சொல் போன்ற விவரங்களை நிரப்பவும்.

படி 5: Join now அல்லது Agree and Join என்பதைக் கிளிக் செய்யவும்

XII_TM_EMPS_CH09-2023.indd 177 13/03/2023 17:15:03

www.tnschoolbooks.in



படம் 9.9 LinkedIn உள்நுழைவு.

படி 6: ஒரு பாதுகாப்பு சோதனை வெளிப்படும்.

படி 7: ஒரு புதிய பக்கம் தோன்றும்

படி 8: உங்கள் நாடு, மாநிலம் மற்றும் நகரம்/மாவட்டம் உள்ளிட்ட தேவையான விவரங்களை நிரப்பவும்

படி 9: Next பொத்தானை கிளிக் செய்யவும்



படம்: 9.10 LinkedIn இன் வரவேற்பு பக்கம்

படி 10: ஒரு புதிய பக்கம் உங்கள் முன் தோன்றும்.

படி 11: தேவையான தகவலை நிரப்பவும்.

படி 12: 'நான் ஒரு மாணவன்' (I'm a student) அல்லது தொடரவும் (Continue) என்பதை கிளிக் செய்யவும்



படம் 9.11 LinkedIn கணக்கு உருவாக்கம்

படி 13: உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட்ட உறுதிப்படுத்தல் குறியீட்டைக் (Confirmation code) கேட்கும் புதிய பக்கம் தோன்றும்.

படி 14: குறியீட்டை உறுதிசெய்த பிறகு, ஒப்புக்கொள் (Agree) என்பதை கிளிக் செய்து உறுதிப்படுத்தவும்.

படி 15: உங்கள் முகப்புப் பக்கம் திறக்கும்.



படம் 9.12 LinkedIn சுயவிவரம்

செயல்பாடு 1

உங்களுக்காக ஒரு LinkedIn சுயவிவரத்தை உருவாக்கி, உங்களுடன் இணைந்து உருவாக்கிய நண்பர்களுடன் இணைப்பை ஏற்படுத்தவும். சுயவிவரத்தை உருவாக்குவதில் ஏதேனும் சிரமம் ஏற்பட்டால், ஆசிரியரின் உதவியை நாடுங்கள்.

9.10 உடல்நலம் மற்றும் பாதுகாப்பு

உடல்நலம் மற்றும் பாதுகாப்பு என்பது தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர் அல்லாதவர்களின் மன மற்றும் உடல் நலனைப் பாதுகாக்க முதலாளிகள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் ஆகும். உடல்நலம் மற்றும் பாதுகாப்புச் சட்டங்கள் நிறுவன வளாகத்தில் உள்ள ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் பார்வையாளர்களைப் பாதுகாக்கிறது. பணியிடத்தில் நிகழும் விபத்துகளை அகற்ற அல்லது கணிசமாக குறைக்க வேண்டும் என்பது முதலாளிகளின் இலட்சியமாக இருக்க வேண்டும்.

முதலுதவி பெட்டி மற்றும் தீயை அணைக்கும் கருவி(தீ அணைப்பான்கள்)

XII_TM_EMPS_CH09-2023.indd 178 13/03/2023 17:15:03

ஆகியவை பணியிடத்தில் அல்லது பொது இடத்தில் முக்கியமான பாதுகாப்பு காரணிகளாகும்.

முதலுதவி

முதலுதவி சிகிச்சை என்பது விபத்து மற்றும் அவசரகாலங்களில் பாதிப்பில் இருப்பவருக்கு கொடுக்கப்படும் சிகிச்சைமுறை ஆகும். அதாவது, இது முறையான சிகிச்சைக்கு முன்னால் கொடுக்கப்படுகிறது.

முதலுதவி பெட்டி: முதலுதவி பெட்டியினுள் சிகிச்சை சார்ந்த மருந்து பொருட்கள் மற்றும் கருவிகள் இருக்கும். இவைகள் நோயால் அவதிப்படுபவருக்கும், காயம் அடைந்தவருக்கும் பயன்படுகின்றன.

